ஜேம்ஸ்பொண்ட்
பாணியில்
இலங்கை அரசியல்
பக்கம் 17

உதயன்

கூ.வெ. 32
கு.வெ. 23
தெளிவான
காலநிலை

சுடர் 30 | கதிர் 121 | வள்ளுவர் ஆண்டு 2046 | பங்குனி 13, வெள்ளிக்கிழமை 27.03.2015

# பிரதமர் வருகையை புறக்கணிக்கிறது வடமாகாண சபை

## முதலமைச்சருக்கு உரிய அழைப்பு விடுக்கப்படாததை அடுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 27
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் இன்று கலந்து கொள்ளும் நிகழ்வில் வடக்கு மாகாண சபையினர் பங்கேற்க மாட்டார்கள் என்று நம்பகரமாக தெரிய வருகின்றது. வடக்கு மாகாண முதலமைச்சருக்கு உரிய முறையில் அழைப்பு விடுக்கப்படவில்லை. அதையடுத்து வடக்கு மாகாணசபையினர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர் என்று தெரியவருகின்றது.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள் பயணமாக யாழ்ப்பாணத்திற்கு இன்று வருகின்றார்.
அவர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார். காலை 9 மணிக்கு நாகவிகாரையில் வழிபாடு செய்யும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதனைத் தொடர்ந்து வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து கர்ப்பிணித் தாய்மாருக்கு போசணை உணவுப் பொதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்வார்.
இதன் பின்னர் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும்,

பக்.24

## வல்லையில் விபத்து; இருவர் சாவு



யாழ்ப்பாணம், மார்ச் 27
அச்சுவேலியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் அதில் பயணித்த மைத்துனர்களான இருவர் உயிரிழந்தனர். மற்றொருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
ஓட்டுமடத்தைச் சேர்ந்த ஆர்.அஜந்தன் (வயது–13) என்பவர் விபத்து இடம்பெற்ற இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் படுகாயமடைந்த முருகையா ஜனார்த்தனன் (வயது–26)

பக்.24

## உறங்கு நிலையில் 'நெல்சிப்' திட்டம்

### கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்டுள்ள இடர்பாடால்

யாழ்ப்பாணம், மார்ச் 27
வடக்கு மாகாணத்தில் 'நெல்சிப்' திட்டங்
களை முன்னெடுப்பதிலும், செய்து முடிக
கப்பட்ட வேலைகளுக்கு கொடுப்பனவு
வழங்குவதிலும் இடர்பாடுகள் ஏற்ப
டுள்ளன.
புதிய அரசு பதவியேற்றுள்ளதால், 'நெல்
சிப்' திட்டத்துக்குரிய அனுமதிகள் எந்த
அமைச்சால், எந்த ஒழுங்கு முறையி
னூடாகப் பெற்றுக் கொள்வது என்று
அறிவிக்கப்படாமையாலேயே இந்
நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால் வடக
கில், பல்வேறு அபிவிருத்தித் திட்டங்
களை முன்னெடுக்க முடியாத நிலைமை
காணப்படுகின்றது என்று சம்பந்தப்பட்ட
அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.
உலக வங்கியின் நிதியுதவியுடன் நெல்
சிப் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது
நெல்சிப் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு
உள்ளூராட்சி மன்றத்தாலும் வேலைத்
திட்டங்கள் இனங்காணப்பட்டு, பிரதேச
மாவட்ட, மாகாண அபிவிருத்திக் கூட
டங்களில் அனுமதி பெறப்பட்டு பொரு
ளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக
கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்
தப்பட்டது.

பக்.24

## காணியைத் தருமாறு ரணிலிடம் கோரிக்கை

### இன்று நேரில் விடுக்கப்படவுள்ளது

யாழ்ப்பாணம், மார்ச் 27
வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய வளலாய் கிராம சேவையாளர் பிரிவில் இன்னமும் 400 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. அந்தக் காணிகள் மக்கள் குடியிருப்புக் காணிகள் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவற்றை விடுவிக்குமாறு, இன்று யாழ்ப்பாணம் வரவுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடம் நேரடியாகக் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பக்.24

## இணைந்தனர் தாயும் மகளும்



யாழ்ப்பாணம், மார்ச் 27
சிறுமி விபூசிகா அவரது தாய் ஜெயக்குமாரியுடன் இணைவதற்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று நேற்று உத்தரவிட்டு தீர்ப்பளித்தது. சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் பாதுகாப்பில் உள்ள விபூசிகாவை அவரது தாயான ஜெயக்குமாரியிடம் சட்டரீதியாக ஒப்படைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிபதி எம்.ஐ வஹாப்தீன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டது.

பக்.24

## மைத்திரியின் சகோதரருக்கு கத்திக் குத்து

கொழும்பு, மார்ச் 27
ஜனாதிபதியின் இளைய சகோ
தரரான பிரியந்த சிறிசேன
மீது கூரிய ஆயுதத்தால் தாக்
குதல் நடத்தப்பட்டுள்ளது.
தாக்குதலை மேற்கொண்
டவர் பொலிஸில் சரணடைந்
துள்ளார் என்று வடமத்திய
மாகாணத்தின் பொலிஸ் உய
ரதிகாரி ஒருவர் தெரிவித்தார்
பொலன்னறுவை புதிய நகரப்
பகுதியில் இந்தத் தாக்குதல்
சம்பவம் இடம்பெற்றுள்ளது.
தாக்குதலில் காயமடைந்த
பிரியந்த சிறிசேன பொலன்ன
றுவை வைத்தியசாலையின்
தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்
கப்பட்டுள்ளார் என்றும்
தேசிய வைத்தியசாலைக்கு
விமானம் மூலம் அழைத்து
வரப்படவுள்ளார் என்றும் ஜனா
திபதியின் சகோதரர்களில்
ஒருவரான லால் சிறிசேன
தெரிவித்துள்ளார். (ற–5)

## குழிக்குள் சரிந்த டிராக்டரை நிறுத்த முயன்ற சாரதி சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 27
மணல் ஏற்றி நின்ற டிராக்டர் நகர்ந்து குழியில் விழுந்தது. அதை நிறுத்த முயன்ற சாரதி டிராக்டருடன் குழிக்குள் விழுந்து உயிரிழந்தார்.
இந்தப் பரிதாபச் சம்பவம் புதுக்குடியிருப்பு, கோம்பாவிலில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த தங்கராசா பத்மதேவன் (வயது –31) என்பவரே உயிரிழந்தவராவார்.

பக்.24

## 'போட் சிற்றி' திட்டம் மீள செயற்படுத்தப்படும்

### சீனாவிடம் உறுதியளித்தார் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, மார்ச் 27
தமது அரசால் இடைநிறுத்தப்பட்ட சர்ச்சைக்குரிய கொழும்புத் துறைமுக நகரத்திட்டம் மீள ஆரம்பிக்கப்படும் என்று சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங்கிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.
பீஜிங்கில் நேற்று நடந்த சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங்கிற்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான பேச்சின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சீனாவின் உதவி வெளிவிவகார

பக்.24

## மகனைக் கற்க வைப்பதற்காக பரிதாபமாக உயிர் விட்ட தாய்

யாழ்ப்பாணம், மார்ச் 27
மகன் தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்லாததால் அவனை மிரட்ட முற்பட்ட தாய் ஒருவர் பரிதாபகரமாக தீயில் எரிந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் சுன்னாகம், சூராவத்தையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த ந.சிவசோதி என்பவரே உயிரிழந்தவராவார்.
சிவசோதி மகனை தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்லுமாறு கூறியுள்ளார். மகனோ நகருவதாகத் தெரியவில்லை.

பக்.24

## தமிழர்களுக்கான தீர்வில் உறுதியாகவுள்ளது ஆஸி.

### அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27
"இலங்கையில் ஜனாதிபதி மைத்திரிபால
சிறிசேன தலைமையில் மலர்ந்துள்ள ஆட்சியை
நாம் வரவேற்கின்றோம். இந்த ஆட்சியில் இலங்
கையில் நல்லிணக்கம் ஏற்படவேண்டும் என்பதி
லும், தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்க
வேண்டும் என்பதிலும் ஆஸ்திரேலியா அரசு
உறுதியாகவுள்ளது."

பக்.24

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காணாமல்போனோரை இறந்தோர் எனப் பதிவு

## ஆணைக்குழுவும் அவ்வாறே ஊக்கப்படுத்துகிறது எனவும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

காணாமற்போனவர்களை இறந்தவர்களாக கருதிப் பதிவு செய்வதற்குப் பதிலாக, இறந்தவர்கள் என்றே அதிகளவிலான பொதுமக்கள் பதிவு செய்துள்ளனர். அத்துடன் காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவும், இறந்தவர்கள் என்றே பதிவு செய்வதற்கு ஊக்கப்படுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு வருடத்துக்கு மேலாக காணாமற் போனவர்களை இறந்தவர்களாகக் கருதி பதிவு செய்யும் சட்டமூலம் கடந்த 2011 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. குறித்த சட்டம் இரண்டு வருடங்களுக்கே நடைமுறையில் இருக்கும் வகை யில் கொண்டு வரப்பட்டாலும், இரண்டு தடவைகள் ஒவ்வொரு ஆண்டுக்கு அவை நீடிக்கப்பட்டன. இந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் குறித்த சட்டம் காலாவதியாகின்றது.

இந்த நிலையில் கடந்த 4 ஆண்டுகளில் வடக்கு மாகாணத்தில் 199 பேரே, காணாமற் போனோரை இறந்தவர்களாக கருதிப் பதிவு செய்துள்ளனர். யாழ்.மாவட்டத்தில் 79 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 13 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 41 பேரும், மன்னார் மாவட்டத்தில் 21 பேரும், வவுனியா மாவட்டத்தில் 45 பேருமாக 199 பேர் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு, காணாமற் போனவர்கள் என்று தெரிவித்து ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்தவர்களை, இறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு ஊக்குவித்தது. கடந்த வருடம் டிசெம்பர் மாதம் வரையில் 249 பேருக்கு அவ்வாறு ஊக்குவிப்புச் செய்து கடிதம் வழங்கியதாக, ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனாலும், காணாமற் போனோரை இறந்தவர்களாகக் கருதிப் பதிவு செய்யும் நடவடிக்கையின் கீழ் அவர்கள் உள்வாங்கப்படவில்லை. மாறாக, அவர்களை இறந்தவர்களாகவே பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் காணாமற் போனவர்கள் தொடர்பிலான எண்ணிக்கையை குறைக்க முடியும். அதற்காகவே காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற் கொள்ளும் ஆணைக்குழு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்படுகின்றது. (ற-5)

# சிறுநீரக நோய் ஏற்படாதிருக்க முற்கூட்டியே செயற்படுங்கள்

### மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கில் ஆயிரம் பேர் வரையில் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். சிறுநீரக பாதிப்புக்குள்ளாகி சுமார் 600 பேர் வரையில் சிகிச்சை பெறுகின்றனர். அவர்களில் 120 பேர் வரையில் ரத்த சுத்திகரிப்புச் செய்யப்படுகின்றனர். வாரத்தில் 2 தடவைகள் ஒவ்வொருவருக்கும் ரத்தச் சுத்திகரிப்புச் செய்ய வேண்டும். தவறின் ரத்தத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டு நோய் தீவிரமாகிவிடும் – இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா தெரிவித்தார்.

சிறுநீரகம் பாதிப்பு மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள், இறப்புக்களைத் தடுத்தல் தொடர்பான விழிப்பூட்டும் செயலமர்வு ஒன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"சிறுநீரை அடக்கி வைத்திருப்பதால் கிருமித் தொற்று ஏற்பட வாய்ப்பு அதிகம். எனவே சிறுநீர் வருவதனை உணர்ந்தால் உடனே கழித்து விடவேண்டும். பெண்கள் உள்ளிட்ட பலர் செல்லும் இடங்களில் சிறுநீர் கழிக்க வேண்டும் என்பதனால் தண்ணீர் குடிப்பது குறைவு. நகர் உட்பட வைத்தியசாலையில் கூட மலசல வசதிகள் போதியதாக, உரிய சுகாதாரமாக இல்லாததே அதற்குக் காரணம். மலசல கூடங்கள் சுத்தமாக இருக்க வேண்டும். பாடசாலைகளில்கூட ஆசிரியர்களின் மலசலகூடம் தவிர மாணவர்களின் மலசல கூடங்கள் சுகாதார சீர்கேடாகவே உள்ளன. அந்த நிலை மாறவேண்டும்."– என்று தெரிவித்தார்.

"ரத்த சுத்திகரிப்புக்கு கிளிநொச்சி உள்ளிட்ட பல இடங்களிலிருந்தும் பலர் போதனா வைத்தியசாலைக்கு வந்து செல்கின்றனர். அதனால் போக்குவரத்துக்கு அதிக பணம் செலவழிக்க வேண்டியுள்ளது. ரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரம் ஒன்றின் பெறுமதி 22 லட்சம் ரூபா. அவ்வாறு 10 இயந்திரங்கள் போதனாவில் உள்ளன. வவுனியாவில் 4 இயந்திரங்கள் உள்ளன. ஒருவருக்கு ரத்த சத்திகரிப்புச் செய்ய 4 மணித்தியாலங்கள் தேவைப்படுகிறது. நாளாந்தம் அது நடந்து கொண்டிருக்கிறது. அதனைச் செய்வதற்குக்கூட போதனாவில் தாதியருக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. எனவே இயன்றளவு சிறுநீரக நோய் ஏற்படாமல் இருப்பதற்கான அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றுங்கள். முக்கியமாக உப்பு, சீனி என்பனவற்றின் பாவனையைக் குறையுங்கள். நாளாந்தம் உடற்பயிற்சி செய்யுங்கள்"– என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# கட்டங்கள் இன்மையால் கற்றல் நடவடிக்கை பாதிப்பு

### வவுனியா பூவரசங்குளம் பாடசாலையில்

வவுனியா, மார்ச் 27

வவுனியா பூவரசங்குளம் பாடசாலை அண்மையில் இராணுவத்தினரிடமிருந்து விடுவிக்கபட்ட போதும் உரிய கட்டடங்கள் எதுவும் இல்லாததால் கற்றல் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாதுள்ளது என்று பாடசாலை அதிபர் கவலை வெளியிட்டுள்ளார்.

பாடசாலையில் 5 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினரின் முகாம் அமைந்திருந்த நிலையில் பல அரச அதிகாரிகள், அரசியல்வாதிகளின் முயற்சியால் கடந்த மாதம் இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறினர். ஆயினும் அங்கிருந்த கட்டடங்கள் யாவும் தகர்க்கப்பட்டுள்ள நிலையில், கற்றல் நடவடிக்கைளை முன்னெடுக்க முடியாதுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பூவரசங்குளம் மகா வித்தியாலத்தின் இடைநிலைப்பிரிவு மாணவர்களின் கட்டடத்திலேயே தற்காலிக கொட்டகைளில் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அதனால் பல்வேறு நெருக்கடிகளை மாணவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி உரிய கட்டட வசதிகளை ஏற்படுத்தித் தர அரச அல்லது அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும் என பூவரசங்குளம் ஆரம்ப பிரிவு பாடசாலையின் அதிபர் எஸ். ரவிச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார். (ற-402)

# தையல் பயிற்சி நிலையம் பண்டிவிரிச்சானில் திறப்பு

### வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் திறந்துவைத்தார்



யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஐந்து இலட்சம் ரூபா நிதி உதவியோடு பெரிய பண்டிவிரிச்சானில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் புனரமைக்கப்பட்ட தையல் பயிற்சி நிலையம் நேற்றுமுன்தினம் பெரிய பண்டிவிரிச்சான் கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிலையத்தை வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் திறந்துவைத்தார்.

மன்னார் மாவட்ட மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களை மீளக் கட்டியெழுப்பும் நோக்குடனும், பெண்களுக்கான வேலை வாய்ப்பைப் பெற்று கொடுக்கும் வகையிலும் இந்த தையல் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 'அக்ரெட்' நிறுவனத்தால் யாழ்ப்பாணம் தவிர்ந்த வடக்கின் 4மாவட்டங்களைச் சேர்ந்த 213 மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு இடையே நடத்தப்பட்ட 'போரால் பாதிக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர்களின் உளநலத்தை மேம்படுத்தல்' சம்மந்தமான உளநலசெயற்திட்டத்தில் வெற்றியீட்டி 7 ஆவது இடத்தை பெற்று கடந்த தை மாதம் ஐரோப்பிய ஜுனியனின் நிதி உதவித் திட்டத்தில் சுமார் 14 லட்சம் ரூபா பரிசுபெற்ற பண்டிவிரிச்சான் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருடனான கலந்துரையாடல்கள் இடம்பெற்றதோடு , அக் கிராமத்தில் உள்ள குறைபாடுகள், மேலும் அங்கு மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான விவரங்களும் திரட்டப்பட்டன.

இந்தநிகழ்வில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் , மடு பிரதேச செயலாளர் .எப்.சி.சத்தியசோதி,மடு பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ரொகான் குரூஸ், கிராம அலுவலகர் லுமாசிறி மற்றும் மடு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். எஸ் ஹஸ்மி, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டிருந்து கொண்டனர். (ற-21,56)

# இந்திய வீட்டுத் திட்டம் கிடைக்காது பாதிக்கப்பட்டோர் குறித்து ஆராய்வு

### மன்னார் மாவட்ட செயலத்தில் நடைபெற்றது

வவுனியா, மார்ச் 27

இந்திய வீட்டுத் திட்டம் வழங்கப்படாமல் பாதிக்கப்பட்ட மக்களின் முறைப்பாட்டுக்கு அமைவாக அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் ஒன்று நேற்று மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசபிரிய தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி. ஸ்டான்லி டி மெல், முசலி,நானாட்டான், மடு,மன்னார் ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், இந்திய வீட்டுத் திட்டத்திற்கு பொறுப்பானஅதிகாரிகள், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் இந்தியன் வீட்டுத் திட்டத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள், அரச. அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. நானாட்டான், வெள்ளாங்குளம், மடு, முசலி பேசாலை கிராமங்களை சேர்ந்த பாதிக்கபட்டவர்கள் அதில் கலந்து கொண்டனர். போசாலை பகுதியிலேயே அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட செயலாளரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இந்திய வீட்டு திட்டம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில் இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட மக்கள், மனித உரிமை அமைப்புகளிடமும் மன்னார் மாவட்ட செயலாளரிடமும் செய்து கொண்ட முறைபாட்டை அடுத்து குறித்த விடயம் தொடர்பாக விசாரணை செய்யவும், மீளாய்வு செய்யவும் குறித்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 7 ஆயிரத்து 500 இந்திய வீட்டுத் திட்ட வீடுகள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றின் கட்டுமான பணிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் சுமார் 242 வீடுகளுக்கான கட்டுமான பணிகள் நிறைவுபெறாதது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த 242 பயனாளிகளுக்கும் வீட்டை நிர்மாணிப்பதற்கு ஜம்பது ஆயிரம் தொடக்கம் ஒரு இலட்சம் வரையான பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கட்டுமான பணிகள் எதுவும் இடம் பெறவில்லை.

இதனை அடுத்து குறித்த 242 வீட்டு கட்டுமான பணிகளுக்காக வழங்கப்படவிருந்த நிதி நிறுத்தப்பட்டு இதனை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முடியுமா என்பது பற்றி இந்திய.தூதரக அதிகாரிகளுடன் கலந்துரையாடி அது ஏற்கபடின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத் திட்டத்தை வழங்க முடியும் என இங்கு தெரிவிக்கப்பட்டது. (ற)

# விசாரணைக்கு வருமாறு வவுனியா பிரஜைகள் குழு தலைவருக்கு ரி.ஐ.டி அழைப்பணை

வவுனியா, மார்ச் 27

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் கி. தேவராஜாவை விசாரணைக்காக இரண்டாம் மாடிக்கு வருமாறு பயங்கரவாத தடுப்புப்பிரிவினரால் நேற்றைய தினம் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ் அழைப்பாணை நேற்றுக் காலை 9 மணியளவில் நெடுங்கேணி பொலிஸ் அதிகாரி ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

'இலக்கம் 5 பிரதான வீதி நெடுங்கேணியில் வசிக்கும் கி. தேவராசா இந்தப் பிராந்தியத்தில் இடம்பெற்று வரும் விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் தருவதற்காக எதிர் வரும் 30 ஆம் திகதி அழைக்கப்படுகின்றீர்கள்' என்று அந்த அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக வவுனியா பிரஜைகள் குழு தலைவர் கூறினார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், "ஜனாதிபதி ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டு வரும் காணாமல் போனவர்களது விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அப்படி மீண்டும் அதே ஆனைக்குழுவில் வாக்குமூலம் கொடுத்தால் பேய்க்கு பயந்த முனியை கட்டிப்பிடிப்பது போல் ஆகிவிடும் என்று கடந்த சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்ற காணாமல் போன உறவுகளுக்கான காகவனயீர்ப்புப் போராட்டத்தின் போது கூறியிருந்தேன் அப்போது சி.ஐ.டியினர் இவ்விடயம் சம்பந்தமாக ஊடகவியலாளர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டார்கள் என்று அறிந்தேன் ஆகவே அதற்காகவும், அல்லது போனால். வடக்கு கிழக்கு மாகாண சிவில் ஒன்றியத்தால் அண்மையில் 8 மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது அதனடிப்படையில் வவுனியாவில் இடம் பெற்ற போராட்டத்தினை முன்னின்று நடத்தியிருந்தேன் அதற்காகவும் என்னை அழைத்திருக்கலாம்.– என்று தெரிவித்தார். விசாரணைக்குச் செல்வதற்கான வேலைதிட்டங்களை மன்னார் ஆயர் இராசப்பு யோசப்புவின் வழிகாட்டலில் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார். (ற-21,402)

BUSINESS MANAGEMENT | 0777 692318
CAMPUS
JAFFNA


இறுதி யுத்தத்துக்கு இன்னும் இரு நாள்களே

13 லட்சங்கள் WOW ! கூப்பன்களை இன்றே நிரப்பி அனுப்புங்கள், பணத்தை அள்ளுங்கள்

கிரிக்கெட் கொண்டாட்டம்

2015 | மார்ச் 27 | வெள்ளிக்கிழமை

## அடுத்த உலகக்கிண்ண தொடரில் சந்தேகம்



நடப்பு உலகக்கிண்ண தொடரின் இரண்டாவது அரையிறுதியில் இந்திய ஆஸ்திரேலிய அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி இந்தியாவை 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது. இந்த நிலையில் அடுத்த உலகக்கிண்ண தொடரில்தான் விளையாடுவது தொடர்பாக உறுதியாகக்கூற முடியாது என்று இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித் துள்ளார். இந்த ஆட்டம் குறித்து

பக்கம் 04

## என்ன காரணம்



நடப்பு உலகக் கிண்ண தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் நேற்றையதினம் இந்திய மற்றும் ஆஸ்திரேலிய அணியும் பலப்பரீட்சை செய்தன. இந்த ஆட்டத்தில் இந்தியாவை இலகுவாக வீழ்த்தி ஆஸ்திரேலிய அணி இறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

பக்கம் 04

## கிராமத்துக்கே விடுமுறை

நடப்பு உலகக்கிண்ண தொடரின் இரண்டாவது அரையிறுதியில் நேற்றையதினம் இந்திய மற்றும் ஆஸ்தி ரேலிய அணிகள் மோதின இந்த ஆட்டத்தைப் பார்ப்பதற்காக சுரேஸ் ரெய்னாவின் வருங்கால மனைவியின் கிராமத்துக்கு நேற்றையதினம் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

சுரேஸ்ரெய்னா உத்தரபிரதேசத் தில் உள்ள பாம்னாலி கிராமத்தை சேர்ந்த தனது பள்ளிப் பருவ தோழியான பிரியங்கா சவுத்ரியை அடுத்த மாதம் மூன்றாம் திகதி

பக்கம் 04

# நடப்புச் சம்பியனை நாறடித்தது ஆஸி

## 28 வருட சாதனை தகர்ந்தது



இறுதியாட்டத்துக்கு எப்படியாவது தகுதி பெற்று விடலாம் என்ற கனவுடன் களமிறங்கிய நடப்புச் சம்பியன் இந்தியாவை, ஆஸ்திரேலியா துவம்சம் செய்து நாட்டுக்குத் திருப்பியனுப்பியது. ஆஸ்திரேலிய வீரர்கள், வாய் சவால் விட்டதை செயலில் காட்டி, சிட்னியில் இந்தியாவை சட்னியாக்கினர்.

இந்திய அணி அரையிறுதி ஆட்டத்துடன் வெளியேறியதன் மூலம், ஆஸ்திரேலிய அணி, நியூஸிலாந்து அணியுடன் இறுதி ஆட்டத்தில் மோதும் வாய்ப்பை பெற்றது. 1987 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தின் பின்னர் எந்தவொரு உலகக் கிண்ணத்திலும் ஆசிய அணிகள் தகுதி பெறாமல் விட்டது கிடையாது. 28 வருடங்களின் பின்னர், உலகக் கிண்ணத்தை நடத்தும் ஆஸ்திரேலியாவும் – நியூஸிலாந்தும் தகுதி பெற்று ஆசிய அணிகளை வெளியேற்றியுள்ளன. ஆஸ்திரேலிய அணிக்கும், இந்திய அணிக்கும் இடையிலான அரையிறுதி ஆட்டம் சிட்னியில் நேற்று இடம்பெற்றது.

இந்த ஆட்டத்தில் 95 ஓட்டங்களால் வெற்றியைத் தனதாக்கிய ஆஸ்திரேலிய அணி இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றதும், ஆஸ்திரேலியா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. வோர்னர் – பின்ஞ் ஆரம்பத்துக்கு களமிறங்கினர். வோர்னர் அதிரடியாக ஆடத் தொடங்கியும் அவரை உமேஷ் யாதவ் விட்டு வைக்க

பக்கம் 04




## தீவிர பாதுகாப்பில் டோனியின் வீடு



அரையிறுதித் தோல்வியையடுத்து டோனியின் வீட்டுக்கு இராணுவப்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு உலகக்கிண்ணத் தொடரின் இரண்டாவது அரையிறுதியில் நேற்றையதினம் இந்திய ஆஸ்திரேலிய அணிகள் மோதின. இந்த ஆட் டத்தில் இந்தியா ஆஸ்திரேலியாவிடம் பரிதாபமாக தோல்வியடைந்தது இதனையடுத்து டோனியின் வீட்டை ரசிகர்களிடம் இருந்து பாதுகாக்க இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ரி)

## டெல்லியின் தலைவராக டுமினி

வருடாவருடம் நடைபெறும் ஐ.பி.எல். தொடரின் நடப்பு வருடத்துக்கான தொடர் அடுத்த மாதம் 8ஆம் திகதி தொடங்கவிருக்கும் நிலையில், டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் புதிய தலைவராக ஜே.பி. டுமினி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

எட்டாவது ஐ.பி.எல்.தொடர் வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதியில் இருந்து தொடங்கவிருக்கிறது. இதில் பங்கேற்கும் டெல்லி டேர்டெவில்ஸ் அணி, ஐ.பி.எல். தொடர்களில் மோசமாக கடந்த வருடம் ஆடியது. இந்நிலையில் கடந்த ஆண்டு அந்த அணிக்காக சிறப்பாக விளையாடியதென்னாபிரிக்காவை சேர்ந்த டுமினியை புதிய அணித் தலைவராக நியமித்துள்ளனர். இது தொடர்பாக டுமினி தெரிவிக்கை யில்– 'என்னை தேர்வு செய்ததற் கும், என் மீது நம்பிக்கை வைத்து இந்த பொறுப்பை கொடுத்ததற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உண்மை

பக்கம் 04

## அடம்பிடித்தார் ஜடேஜா

நடப்பு உலகக்கிண்ண தொடரின் இரண்டாவது அரையிறுதியில் நேற்றையதினம் இந்திய மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் பலப்பரீட்சை செய்தன. இந்த ஆட்டத்தில் ஓர் ஆட்டமிழப்பு தொடர்பாக நடுவரின் தீர்ப்பை எதிர்த்து மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று ஜடேஜா கட்டாயப்படுத்த டோனி மறுபரிசீலனைக்கு விண்ணப்பிக்க அது தவறாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடியது ஆஸ்திரேலியா. ஆட்டத்தின் 23ஆவது பந்துப்பரிமாற்றத்தை ஜடேஜா வீசினார். இந்தப்பந்துப்பரிமாற்றத்தை பின்ஞ் எதிர்கொண்டார். பந்து பிஞ்சின் துடுப்பில் படாமல் அவரது கால் கவசத்தில் பட்டது. இதனால் ஆட்டமிழப்புக்கு விண்ணப்பிக்கப்பட்டது. ஆனால்

பக்கம் 04

## கடவுள் ஏன் கல்லானார்?



நடப்பு உலகக்கிண்ண தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெறவேண்டும் என்று ஆந்திராவின் பாடசாலைக் கிரிக்கட் வீரர் ஒருவர், திருப்பதியில் முழங்காலிட்டு ஏறி மன்றாடியுள்ளார்.

நடப்பு உலகக்கிண்ண தொடரின் இரண்டாவது அரையிறுதியில் நேற்றைய தினம் இந்திய மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் பலப்பரீட்சை செய்தன. இந்த ஆட்டத்தில் இந்தியா வெல்ல வேண்டும் என்பது ஒவ்வொரு இந்தியர்களின் கனவாக இருந்தது. இந்தியா வெற்றிபெற்று கிண்ணத்தைதக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்ட நிலையில், ஆந்திராவை சேர்ந்த இளம்

பக்கம் 04

03 ஆம் பக்கத் தொடர்ச்சிகள்......

# நடப்புச் சம்பியனை



வில்லை. வோர்னர் இலக்கைச் சரித்து விட்டு, ஆஸி.யின் ஒட்டுமொத்த இலக்கையும் சரித்தது போல பீலா விட்டார். ஆனால் அதன் பின்னர் ஸ்மித்தும், பின்ஞ்சும் இணைந்து ஆஸி.யின் ஆட்டத்தை மாற்றியமைத்தனர். பின்ஞ் மெதுவாக ஆட, ஸ்மித் அடித்து ஆடினார். சுழற்பந்து வீச்சு சாதகமாகும் என்று கணிக்கப்பட்ட சிட்னி மைதானத்தில், இந்திய சுழற்பந்து வீச்சாளர்களின் பந்துகளை லாவகமாக அடித்து ஆடினர் ஸ்மித் – பின்ஞ். அரைச் சதங்களை கடந்து இவர்களது ஆட்டம் தொடர்ந்தது. இணையைப் பிரிக்க டோனி வகுத்த வியூகங்கள் எல்லாம் பொய்யாகிப் போனது. சதம் கடந்து ஸ்மித் வெளியேறினார்.

வந்த மக்ஸ்வெல் மட்டையைச் சுழற்றி ஓட்டங்களை ஏற்றி விட்டு வெளியேறினார். அதன் பின்னர் பின்ஞ், கிளார்க் என்று அடுத்தடுத்து வெளியேற ஆட்டம், ஆட்டம் கண்டது. ஆஸி. 300 ஓட்டங்களைத் தாண்டுமா என்ற நிலை இருந்தது. பல்க்னர் – வொட்ஸன் இணை கைகொடுத்தது. இவர்களது. சுமாரான ஆட்டத்தில் 300 ஓட்டங்களை நெருங்கியது. பல்க்னர் – வொட்ஸன் இணை வெளியேற, வந்தார் ஜோன்சன் – ஹடின். ஜோன்சன் இறுதிக் கட்டத்தில் இந்தியப் பந்து வீச்சை மோட்டுத்தனமாக போட்டுத் தாக்க அணி 328 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து சகல ஆட்டங்களிலும் எதிரணியின் பத்து இலக்குகளையும் சரித்த இந்தியாவால் ஆஸி.யை அசைத்துப் பார்ப்பது கஷ்டமாகிப் போய் விட்டது.

எட்ட முடியாத இலக்கு என்று தெரிந்தும், அடித்தாட இறங்கியது இந்தியா. ரோகித் – தவான் இணையின் இலக்கை முதல் பந்துப் பரிமாற்றத்தில் பறித்தெடுக்க கிடைத்த வாய்ப்பை ஆஸி. கோட்டை விட்டது. இதனால் இந்த இணை ஆஸி.யின் வேகங்களுக்கு சூடு போட்டு ஓட்டங்களை எடுத்தது. அதிரடியில் இந்தியா ஆட, ஆஸி. கொஞ்சம் அடங்கிப் போனது.

அந்தரப்பட்ட தவான் எல்லாப் பந்துகளுக்கும் அடித்தாட முற்பட, ஹசிவூட் அவரை ஆட்டமிழக்கச் செய்தார். தொடர்ந்து நுழைந்தார் ஹோக்லி. அனுஷ்கா சர்மா (ஹோக்லியின் காதலி) ஆட்டத்தை நேரில் பார்க்க சிட்னி மைதானத்திற்குச் சென்றிருந்தார். இதனால் ஹோக்லி அடித்தாடி அசத்துவார் என்று எல்லோரும் எதிர்பார்க்க ஹோக்லி 13 பந்துகளை நிதானமாக எதிர்கொண்டு ஓர் ஓட்டத்தை மாத்திரம் எடுத்து ஆட்டமிழந்தார். வாய்ச் சவால் விட்ட ஹோக்லி வெளியேறியதும் ஆஸி. வீரர்கள் கொஞ்சம் எக்காளம் செய்தனர்.

தொடர்ந்து ரோஹித், ரெய்னா வெளியேற 108 ஓட்டங்களுக்கு 4 இலக்குகள் என்று இந்தியா தடுமாறத் தொடங்கியது. டோனி – ரஹானே இணை தூக்கி நிறுத்தியது. அதிரடி ஆட்டம் இல்லை. ஆனாலும் ஓட்டங்களை ஓடி எடுத்தனர். ரஹானே 47 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், ஸ்ராக் வீசிய பந்து ஹடினிடம் சென்றது. இலக்கு காப்பாளர் ஹடினோ, பந்து வீச்சாளர் ஸ்ராக்கோ ஆட்டமிழப்புக்கு கோரிக்கை முன்வைக்கவில்லை. ஸ்மித் மாத்திரம் ஆட்டமிழப்பு கோரினார். எல்லோரும் புருவங்களை உயர்த்திப் பார்க்க மூன்றாவது நடுவரிடம் கோரிக்கை விடுத்தார் அணித் தலைவர் கிளார்க். முடிவு ஆட்டமிழப்பு என்று வந்தது.

இதன் பின்னர் ஜடேஜா வந்தார், ரன் அவுட்டில் வெளியேறினார். டோனி மாத்திரம் கொஞ்சம் அடித்தாடி அணித் தலைவர் என்ற கௌரவத்துக்காக அரைச் சதம் கடந்தார். அவராலும் அணி இனி வெற்றி பெற முடியாது என்ற நிலையில், பொறுபற்றதனமாக ஓட்டம் ஓடி எடுக்க முற்படுகையில் மக்ஸ்வெல் அபாரமாக ரன் அவுட்டில் அவரையும் வெளியேற்றினார்.

இதன் பின்னர் இந்தியாவுக்கு வெல்வதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. எதிர்ப்பு இல்லாமல் இந்தியா, ஆஸ்திரேலியாவிடம் சரண்டரானது. 233 ஓட்டங்களுக்குள் இந்தியாவை சுருட்டிய ஆஸி. மீண்டும் 8 ஆவது தடவையாக இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது. (5-ரி)




ஆஸ்திரேலியா எதிர் இந்தியா
95 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வெற்றி
நாணயச் சுழற்சி ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| பின்ஞ் | C தவான் B யாதவ் | 81 | 116 | 07 | 01 |
| வோர்னர் | C ஹோக்லி B யாதவ் | 12 | 07 | 01 | 01 |
| சிமித் | C சர்மா B யாதவ் | 105 | 93 | 11 | 02 |
| மக்ஸ்வெல் | C ரஹானே B அஸ்வின் | 23 | 14 | 03 | 01 |
| வற்சன் | C முஸ்தபா B குருச் | 65 | 49 | 04 | 02 |
| கிளார்க் | C ஆர்.சர்மா B சர்மா | 10 | 12 | 01 | 0 |
| பல்க்நெர் | B யாதவ் | 21 | 12 | 03 | 01 |
| ஹட்டின் | ஆட்டமிழப்பில்லை | 07 | 07 | 01 | 0 |
| ஜோன்சன் | ஆட்டமிழப்பில்லை | 27 | 09 | 04 | 01 |
| உதிரிகள் | | 14 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சமி | 10 | 68 | 0 | 0 |
| யாதவ் | 09 | 72 | 04 | 0 |
| சர்மா | 10 | 75 | 02 | 0 |
| ஹோக்லி | 01 | 07 | 0 | 0 |
| ஜடேயா | 10 | 56 | 0 | 0 |
| அஸ்வின் | 10 | 42 | 01 | 0 |

TOTAL
328/7 (50)

1- 15 (வோர்னர்)
2- 197 (சிமித்)
3- 232 (மக்ஸ்வெல்)
4 - 233 (பின்ஞ்)
5 - 248 (கிளார்க்)
6 - 284 (பல்க்நெர்)
7 - 298 (வற்சன்)

இந்தியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஆர்.சர்மா | B ஜோன்சன் | 34 | 48 | 01 | 02 |
| தவான் | C மக்ஸ்வெல் B ஹசல்வூட் | 45 | 41 | 06 | 01 |
| ஹோக்லி | C ஹடின் B ஜோன்சன் | 01 | 13 | 0 | 0 |
| ரஹானே | C ரியாஸ் B மக்கூட் | 43 | 54 | 03 | 01 |
| ரெயினா | C ஹடின் B பல்க்நெர் | 07 | 11 | 01 | 02 |
| டோனி | RO மக்ஸ்வெல் | 65 | 65 | 03 | 02 |
| ஜடேயா | RO சிமித் | 16 | 17 | 02 | 0 |
| அஸ்வின் | B பல்க்நெர் | 05 | 13 | 0 | 0 |
| சமி | ஆட்டமிழப்பில்லை | 01 | 01 | 0 | 0 |
| சர்மா | B பல்க்நெர் | 0 | 01 | 0 | 0 |
| யாதவ் | B ஸ்ரக் | 0 | 05 | 0 | 0 |
| உதிரிகள் | | 15 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரக் | 8.5 | 28 | 02 | 0 |
| ஹசல்வூட் | 10 | 41 | 01 | 01 |
| ஜோன்சன் | 10 | 50 | 02 | 0 |
| பல்க்நெர் | 09 | 59 | 03 | 01 |
| மக்ஸ்வெல் | 05 | 18 | 0 | 0 |
| வற்சன் | 04 | 29 | 0 | 0 |

TOTAL
233 (46.5)

1- 76 (தவான்),
2 - 78 (ஹோக்லி)
3 - 91 (ஆர்.சர்மா)
4 - 108 (ரெயினா)
5 - 178 (ரஹானே)
6 - 208 (ஜடேயா)
7 - 231 (டோனி)
8 - 232 (அஸ்வின்)
9 - 232 (சர்மா)
10 - 233 (யாதவ்)

ஆட்ட நாயகன் சிமித்

# கடவுள் ஏன் கல்லானார்?

கிரிக்கெட் வீரர் திருப்பதியில் இருந்து திருமலைக்கு முழங்கா லிட்டு ஏறிச் சென்று ஏழுமலையானை தரிசனம் செய்து வேண்டுதல் செய்திருந்தார். இவரின் வேண்டு தலை ஏழுமலையான் ஏற்க மறுத்து விட்டானோ என்னமோ நேற்று இந்தியா படுதோல்வியடைந்து விட்டது. (ரி)

# டெல்லியின் தலைவராக டுமினி

யில் திறமையான வீரர்களை கொண்ட டெல்லி அணியை வழி நடத்துவதற்கு நான் பெருமைப் படுகிறேன்' என்றார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள டெல்லி அணியின் பயிற்சியாளர் கேரி கிர்ஸ்டன், 'டுமினிக்கு தேவையான அனுபவமும் திறமையும் உள்ளது. தென்னாபிரிக்கா அணியில் ஆட தொடங்கியது முதலே அவர் எப்படி நல்ல துடுப்பாட்ட வீரனாகவும், தலைவராகவும் தன்னை வளர்த்துக்கொண்டார் என்பதை கவனித்து வருகிறேன். இது மிக சரியான தேர்வுதான்' என்று குறிப்பிட்டுள்ளார். (ரி)

# கிராமத்துக்கே விடுமுறை

திருமணம்செய்துகொள்ளவுள்ளார். இந்த நிலையில் நேற்று நடைபெற்ற ஆஸ்திரேலிய–இந்திய அணிகளுக்கிடை யிலான அரையிறுதி ஆட்டத்தை எல்லோரும் கண்டுகளிக்கும் வகையில் பிரியங்கா சவுத்ரியின் சொந்த ஊருக்கு நேற்று உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டிருப்பதாக அந்த கிராமத்தின் பஞ்சாயத்து தலைவர் கலு சிங் அறிவித்துள்ளார்.


இது குறித்து கலுசிங் தெரிவிக்கையில் 'எங்கள் ஊரின் மருமகனாக ரெய்னாவை பெற்றிருப்பது பெருமைக்குரியதாகும். ஆட்டத்தை எல்லோரும் பார்க்கும் நோக்கில் விடுமுறை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆட்டம் மிகப்பெரிய திரையில் ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. சுரேஸ்ரெய்னா எமது ஊர் பெண்ணை திருமணம் செய்து எமது ஊரின் மருமகனாக மாறுகின்ற அன்றையதினம் இந்த மகிழ்ச்சியை விருந்துடன் கொண்டாடவும் முடிவு செய்திருக்கிறோம்' என்றார். (ரி)

# என்ன காரணம்

இதனையடுத்து இந்திய அணியின் தோல்விக்கு என்ன காரணம் என்று இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான அரையிறுதி போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற என்ன காரணங்கள் என்று சச்சின் தனது டுவிட்டரில் வெளியிட்டிருப்பதாவது 'இந்தியா இந்த தொடர் முழுவதும் சிறப்பாக ஆடியது. இருப்பினும் தோல்வியை சகித்துக்கொள்வது கஸ்டமானது தான். இந்த நேரத்தில் ஆஸ்திரேலியாவுக்கும் வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்டீவ் ஸ்மிஸ்தின் சதம், பின்ச் கொடுத்த இணைப்பாட்டம் மற்றும் ஜோன்சனின் முடிக்கும் திறன், பந்து வீச்சு ஆகியவை இணைந்து இந்தியாவிடமிருந்து வெற்றியை பறித்துவிட்டன' என்று சச்சின் தனது டுவிட்டில் கூறியுள்ளார். (ரி)

# பாகிஸ்தானின் நலைமை பரிதாபம்



நடப்பு உலகக்கிண்ண தொடருடன் ஒருநாள் ஆட்டங்களில் இருந்து ஓய்வினை அறிவித்துச் சென்ற பாகிஸ்தான் அணியின் தலைவரான மிஷ்பா, ஒருநாள் ஆட்டங்களுக்காக புதிய அணித்தலைவரை தெரிவுசெய்வது பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கும் வீரர்களுக்கும் மிகக் கடினமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து தற்பொழுது ஓய்வினை பெறப்போவதில்லை என்று அறிவித்த மிஷ்பா ஒருநாள் ஆட்டங்களில் இருந்து விடைபெற்றுச் சென்றார். இதனையடுத்து மிஷ்பாவுக்கு பதிலாக புதிய தலைவரை தேர்வு செய்யும் பணியில் பாகிஸ்தான் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை இறங்கியுள்ளது. இது குறித்து மிஷ்பா தெரிவிக்கையில் 'எனது ஒருநாள்கிரிக்கெட்வாழ்க்கை முடிந்து விட்டது. இதில், எனது இன்னிங்ஸை விளையாடியுள்ளேன். தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் அணியை முன்னெடுத்து செல்வதில், இளம் வீரர்களின் பொறுப்பு அதிகரித்துள்ளது. அதே சமயம் ஒரு நாள் ஆட்டங்களுக்காக புதிய தலைவரை தெரிவு செய்வது பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு சவாலான காரியம். தலைமைப் பதவிக்கு தகுதியான நபர்கள் இல்லாதது துரதிர்ஷ்டவசமானது. எங்களின் அடிப்படை கட்டமைப்பில் நாங்கள் முன்னேற்றம் காணவேண்டியுள்ளது. பாகிஸ்தானின் துடுப்பாட்ட வரிசையை மற்ற அணிகளுடன் ஒப்பிட கூடாது. பெரும்பாலான ஆட்டங்களில் நான் விரைவாக ஆட்டமிழந்து விட்டால், 50 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குபிடித்து ஆடுவது சிரமம். அது போன்ற சமயங்களில் நிறைய சவாலான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும். எங்களிடம் அனுபவமற்ற துடுப்பாட்ட வரிசையே உள்ளது. ஒரு சிறந்த அடித்தளத்தை அமைத்து விட்டால், ஒரு பந்துக்கு ஒரு ஓட்டம் என்ற வீதத்தில் கூட ஓட்டங்களை சேர்த்து விடலாம். அனுபவமில்லாத துடுப்பாட்ட வரிசை கொண்ட அணியால், பெரிய இன்னிங்ஸில் எப்படி ஆட வேண்டும் என்பது தெரியவில்லை. இதுதான் பாகிஸ்தானின் பிரச்னை மற்றும் மாற்றப்பட வேண்டிய விடயம்.' என்றார். (ரி)

# அடம்பிடித்தார் ஜடேஜா



கள நடுவர் ஆட்டமிழப் பில்லை என்று அறிவித்தார். ஜடேஜா இதனையடுத்து மூன்றாம் நடுவ ருக்கு விண்ணப்பிக்கலாம் என்றுகூறினார். தலைவர் டோனியோ ஆட்டமிழப் பில்லை என்றும் மீள் பரிசீலனை தேவையில்லை எனவும் அறிவுறுத்தினார். ஆனால் ஜடேஜா பரிசீலனை செய்யத்தான் வேண் டும் என்று அடம்பிடிக்க, மீள் பரிசீ லனைக்கு விண்ணப்பித்தார் டோனி. டோனி சொல்பேச்சை ஜடேஜா கேட்காததால் இந்திய அணியின் ஒரு மீள் பரிசீலனை வாய்ப்பு 25ஆவது பந்துப் பரிமாற்றத்துக்கு முன்னரே பறி போனது குறிப்பிடத்தக்கது. (ரி)

# அடுத்த உலகக்கிண்ண

டோனி தெரிவித்ததாவது 'ஆஸ்திரேலிய வீரர்கள் சிறப்பாக விளையாடினார்கள். 300 ஓட்டங்களுக்கு மேலான விரட்டல் என்பது கடினமானது. ஒரு கட்டத்தில் 350 ஓட்டங்களை தாண்டும் நிலைமை இருந்தது. பந்து வீச்சாளர்கள் அதை தடுத்து நிறுத்தினார்கள். துடுப்பாட்டத்தில் சிறப்பான தொடக்கத்தை பெற்றோம். தவான் ஆட்டமிழக்கும் போது ஆஸ்திரேலிய பந்துவீச்சாளர்களுக்கு நெருக்கடி இருந்தது. அதன்பின் நாங்கள் சிறப்பாக செயல்படவில்லை. 300 ஓட்டங்களைத் தாண்டி இலக்கை எட்டமுடியும் என்ற எண்ணத்தில் விளையாடினோம். அதைசெய்யமுடியவில்லை. இந்த நிலையில் கடைசி நிலை வீரர்கள் ஓட்டங்களை அடிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் விளையாடுவேனா என்பதை தற்போது உறுதியாக சொல்ல முடியாது. தற்போது எனக்கு 33 வயதாகிறது. நல்ல உடல் தகுதியுடன் விளையாடிக் கொண்டிருக்கிறேன். அடுத்த வருடம் இருபது ஓவர் உலகக்கிண்ண தொடர் நடக்க இருக்கிறது. அதன்பிறகு 2019இல் விளையாடுவதைப் பற்றி முடிவு செய்வேன்' என்றார். (ரி)

# சிட்னியின் சிறப்புக்கள்

உலகின் தலைசிறந்த கிரிக்கட் மைதானங்களில் ஆஸ்திரேலியாவின் சிட்னி மைதானமும் ஒன்று. நடப்பு உலகக்கிண்ண தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் நேற்றையதினம் இந்தியா–ஆஸ்திரேலியா அணிகள் இந்தமைதானத்தில்தான் பலப் பரீட்சையில் ஈடுபட்டன. இந்த நிலையில் இந்த மைதானத்தைப் பற்றி சில சிறப்பம்சங்கள் வெளிவந்துள்ளன. அவை தொடர்பான ஓர் அலசல்.

### [illegible]கரின் சிலை



கிரிக்கெட்டைப் பொறுத்த மட்டில் பொதுவாக கிரிக்கெட் வீரர்களுக்குத்தான் சிலைகளை அமைப்பது வழக்கம். ஆனால் முதன்முதலாக கிரிக்கட்டின் ரசிகர் ஒருவருக்கு சிலை அமைத்தது சிட்னியில்தான். கிரிக்கெட்டின் தீவிரமான ரசிகர்களில் ஒருவர் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்டீபன் ஹரால்ட் கேஸ்காயிக்னே என்பவராவார். முயல் வியாபாரியான இவரது முக அமைப்பு, பேச்சு என்பன சற்று குழந்தைத்தனமாக இருந்ததால், செல்லமாக இவரை 'யப்பா' என்று அழைப்பர். சிட்னி மைதானத்தில் எவ்வித கிரிக்கெட் ஆட்டம் நடந்தாலும் சரி, எல்லைக் கோட்டின் அருகே இரண்டாவது வரிசையில் தவறாமல் அமர்ந்து விடுவார். வீரர்கள் களத்திற்கு வரும் போதெல்லாம் பயங்கரமாகக் கத்துவார். இதனால் அங்குள்ள வீரர்கள். நிர்வாகிகளின் மனம் கவர்ந்து விட்டார். 1942ஆம் ஆண்டில் இதய நோய் காரணமாக இறந்தார். இதன் பின் நடந்த நியூ சவுத்வேல்ஸ் கிரிக்கெட் சங்க கூட்டத்தில், அனைவரும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர். அஞ்சலியோடு மட்டும் நின்று விடாது இவரது நினைவாக, 'யப்பா' அமர்ந்து கிரிக்கெட் பார்ப்பது போல, வெண்கலச் சிலை அதே இடத்தில் 2008ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. தலையில் தொப்பி, அருகில் மதுபானப் போத்தல்களும் இருப்பதுபோல இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அதாவது, சிட்னி மைதானத்தில் 'யப்பா' எப்போதும் அமர்ந்து ஆட்டத்தைப் பார்ப்பது போல இருக்கும்.

### ஓய்வெடுக்கும் 'பாக்சர்'

பாரம்பரியமிக்க சிட்னி மைதானத்தில் 1901ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில், ஆடுகளத்தை தயார் செய்ய, மணல், சிமெண்ட் கலந்து தயாரிக்கப்பட்ட உருளை பயன்பட்டது. 'பாக்சர்' என்றழைக்கப்பட்ட இதை இழுத்துச் செல்ல குதிரைகள் பயன்படுத்தப்பட்டன. அப்போது குதிரைகளின் கால்கள் பட்டு ஆடுகளம் சேதமடையாமல் இருக்க, விசேடமாக தயாரிக்கப்பட்ட கவசங்கள் குதிரைகளின் கால்களுக்கு அணிவிக்கப்பட்டன. தற்போது, 2.5 டன் எடையுள்ள இரும்பு உருளை பயன் படுத்தினாலும், தற்போதும் சிட்னி யில் உள்ள சிலைகளுக்கு நடுவே 'பாக்சர்' என்று அழைக்கப்பட்ட அந்த உருளை பத்திரமாக ஓய்வெடுக்கிறது.

### மறக்க முடியாத சர்ச்சை

சிட்னி மைதானத்தில் நடந்த சர்ச்சைகளில் மிக முக்கியமானது 'குரங்குச் சர்ச்சை'. சிட்னி மைதானத்தில் இந்தியா–ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில், 2008ஆம் ஆண்டில் நடந்த இரண்டாவது டெஸ்டில் இந்திய வீரர் ஹர்பஜன் சிங், ஆஸ்திரேலியாவின் சைமன்ஸை 'குரங்கு' என திட்டியதாக சர்ச்சை எழுந்தது. இப்பிரச்சினை இனவெறி அளவுக்கு விஸ்வரூபம் எடுக்க, ஹர்பஜன் அபராதம் செலுத்த நேர்ந்தது. அபராதத்தோடு மட்டும் நின்றுவிடாது 3 ஆட்டங்களில் ஹர்பஜன்சிங் விளையாட தடை விதிக்கப்பட்டது. தடை நீக்கப்படாவிடில் தொடரை ரத்துச்செய்வோம் என்று இந்திய வீரர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து தடை மீளப்பெறப்பட்டது.

### நீங்கா நினைவுகள்

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி சிட்னி மைதானத்தில் நடைபெற்ற உள்ளூர் தொடரொன்றில், நியூ சவுத் வேல்ஸ் அணியின் அபொட் வீசிய 'பவுன்சர்', தெற்கு



ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ் கழுத்துப் பகுதியில் உள்ள தமணி என்ற இடத்தில் பலமாக தாக்கியது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஹியூக்ஸ் நவம்பர் 27இல் உயிரிழந்தார். இவ்வாறான சில சம்பவங்கள் சிட்னியில் இன்றும் தொடர்ந்தும் பேணப்பட்டு பராமரிக்கப்படுவனவாக அமைந்துள்ளன. (ரி)

# கிரிக்கெட் பார்க்க விடுமுறை

நடப்பு உலகக்கிண்ண தொடரில் இரண்டாவது அரையிறுதியில் நேற்றையதினம் இந்தியா – ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இந்த ஆட்டத்தை மாணவர்கள் கண்டுகளிக்க வசதியாக, தெலுங்கானா மாநில பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு, முதல்வர் சந்திரசேகர ராவ் விடுமுறை அறிவித்துள்ளார்.
அரையிறுதி ஆட்டத்தை முன்னிட்டு முதல்வரின் இந்த அறிவிப்பு தெலுங்கானா ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கிரிக்கெட் ரசிகரான தெலுங்கானா முதல்வர் சந்திரசேகரராவ், மாணவர்களே நீங்க லீவ் போட வேண்டாம்... நாங்களே லீவ் தருகிறோம் என்று அறிவித்து அவர்களின் வயிற்றில் பாலை வார்த்துள்ளார். இதுகுறித்த சுற்றறிக்கை கடந்த புதன்கிழமை இரவே வெளியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரி)


# சூடு பிடிக்கிறது சூது

நடப்பு உலகக்கிண்ண தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் நேற்றையதினம் இந்தியா–ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இந்த ஆட்டத்தை மையமாக வைத்து ஹைதராபாத்தில் மட்டும் ரூபாய் 100 கோடிக்கும் மேலாக சூதாட்டங்கள் நடைபெற்றமை தெரியவந்துள்ளது.
இது தொடர்பாக ஹைதராபாத் நகர காவல் ஆணையர் ஆனந்த் கூறுகையில், 'ரகசியமாக நடைபெறும் இந்த சூதாட்டத்தில் பலர் வீட்டுமனைகள், வீடுகள், கார், மோட்டார் சைக்கிள், பணம் மற்றும் நகைகளை வைத்து சூதாடுகின்றனர். இதுவரை ரூபாய் 100 கோடிக்கும் அதிகமாக சூதாட்டம் நடந்து வந்துள்ளது. குறிப்பாக ஹைதராபாத்தில் உள்ள சைபராபாத் பகுதியில் மிக அதிகமாக சூதாட்டம் நடைபெற்றிருப்பதாக தெரியவந்துள்ளது. இது தொடர்பாக கண்காணிக்க சிறப்புப் படை அமைக்கப்பட்டிருந்தது' என்றார். (ரி)

# விடைபெறுகிறார் விக்டோரி

நடப்பு உலகக்கிண்ண தொடரின் இறுதியாட்டத்துக்கு நியூஸிலாந்து அணி தெரிவாகியுள்ள நிலையில், 'இறுதியாட்டம்தான் நியூசிலாந்து அணிக்காக விக்டோரி பங்கேற்கும் கடைசி ஆட்டமாகவும் இருக்கும்' என்று நியூஸிலாந்தின் அணித் தலைவர் மக்கலம் தெரிவித்தார்.
2011ஆம் ஆண்டுக்குப்பின்னர் காயம் காரணமாக நியூஸிலாந்து அணிக்கு வருவதும் போவதுமாக இருந்தார் விக்டோரி. உலகக்கிண்ண தொடர் சொந்தமண்ணில் நடந்ததால் மீண்டும் அணியில் இடம்பெற்ற இவர், 8 ஆட்டங்களில் 15 இலக்குகளை கைப்பற்றி அசத்தினார்.
தற்போது உலகக்கிண்ண இறுதியாட்டத்துக்காக நியூஸிலாந்து அணி மெல்போர்ன் வந்துள்ளது. இந்த ஆட்டத்துடன் விக்டோரி ஓய்வு பெறலாம் என்று, அணித்தலைவர் பிரண்டன் மக்கலம் தெரிவித்துள்ளார். இது குறித்து மக்கலம் தெரிவித்ததாவது 'மார்ச் 29ஆம் திகதி மெல்போர்னில் நடக்கும் உலகக்கிண்ண தொடரின் இறுதியாட்டம்தான் நியூஸிலாந்து அணிக்காக விக்டோரி பங்கேற்கும் கடைசி ஆட்டமாக இருக்கும் என நினைக்கிறேன். இதில் சிறப்பாக செயல்பட்டு, அவரை நல்ல முறையில் வழியனுப்புவோம் என்ற நம்பிக்கை உள்ளது' என்றார். (ரி)


# வந்தார் அனுஸ்கா சென்றார் ஹோக்லி





அரையிறுதியைப் பார்க்கச்சென்ற அனுஸ்காவைப் பார்த்த ஹோக்லி ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார்.
ஹோக்லியின் காதலியும் ஹிந்தி நடிகையுமான அனுஸ்கா சர்மாவும் காதலித்து வருவது அனைவரும் அறிந்ததே. இந்த நிலையில் நடப்பு உலகக்கிண்ண தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இந்த ஆட்டத்தைப் பார்க்க அனுஸ்கா சர்மா ஆஸ்திரேலியாவுக்குச் சென்றார். அனுஸ்காவைப் பார்த்ததாலோ தெரியவில்லை ஹோக்லி ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். இதனையடுத்து சமூக வலைத்தளங்களில் ஹோக்லியையும் அனுஸ்கா சர்மாவையும் வைத்து வறுத்தெடுக்கிறார்கள் இந்திய ரசிகர்கள். (ரி)

# தவறவிடுகிறேன் தங்கையை




நடப்பு உலகக்கிண்ண தொடரின் முதலாவது அரையிறுதியில் நியூஸிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் ஒருகட்டத்தில் நியூஸிலாந்து தடுமாறினாலும் மறுமுனையில் போரிட்டு இறுதிவரை ஆட்டமிழக்காது 83 ஓட்டங்களை விளாசி நியூஸிலாந்தின் வெற்றிக்கு வித்திட்டவர் எலியாட். இவரின் தங்கைக்கு இன்று திருமணம் நடைபெறவுள்ளது. ஆனால் எலியாட் இறுதி ஆட்டத்திற்காக தொடர்ந்தும் அணியினோடே தங்கியுள்ளார். இதனால் இவர் தனது தங்கையின் திருமணத்துக்குச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் என்னுடைய தங்கையின் திருமணத்தைத் தவறவிடுகின்றேன் என்று எலியாட் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக எலியாட் தெரிவிக்கையில் 'எனது தங்கைக்கு வருகிற வெள்ளியன்று திருமணம் நடைபெற உள்ளது, துரதிர்ஷ்டவசமாக நான் அவருடைய திருமணத்தைத் தவற விடுகின்றேன். நான் தங்கையிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அவர் என்னுடைய அழகான சந்தோசம், ஆனால் நான் அவருக்கான சிறப்பு பரிசை (உலகக் கிண்ணத்தை) பெறுவதற்கு செல்வேன் என்று நினைக்கிறேன்.' என்றார். (ரி)

விவேகம் உள்ளவர்களின்
நம்பிக்கையான ஒரே தெரிவு
HONDA
ஹொண்டா
HONDA WORLD
Authorized Dealer Stafford Motor Co.(Pvt) Ltd.
பிரதான காரியாலயம்:
ஹொண்டா வேர்ல்ட்
214, ஸ்ரான்லி வீதி,
(வெலிங்டன் சந்தி அருகில்) யாழ்ப்பாணம்.
021 222 3316, 077 038 7111
web: Honda.lk
நெல்லியடி காரியாலயம்:
ஹொண்டா வேர்ல்ட்
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி
021 226 4416, 077 038 7444
Facebook: Hondaworld

NJ
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
யாழ் மண்ணில் தன்னிகரில்லாதலைமை நிறுவனம்
தொ.பே: 021 221 7878/ 021 221 7878
E-mail: newmaithily@gmail.com
இல. 38,40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** தடைப்பட்டுவந்த சுபகாரியப் பேச்சுகள் தடையின்றி நடக்கும். நீங்கள் எடுத்த முயற்சிகள் நல்லபடியாக முடியும். உத்தியோகத்தில் வளர்ச்சி இருக்கும். தொழிலதிபர்கள் புதிய தொழில் தொடங்க போட்ட திட்டம் நிறைவேறும்.

**இடபம்:** போட்டி விற்பனையாளர்கள் விலகிச்செல்வார்கள். அரச பணியில் உள்ளவர்கள் எதிலும் நிதானமாகச் செயற்படவேண்டும். வேலைதேடும் இளைஞர்களுக்கு நல்ல தகவல்கள் வந்துசேரும்.

**மிதுனம்:** நண்பர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நினைத்த ஒரு காரியம் திடீரென நல்ல முடிவுக்கு வரும். உடன் பிறந்த வர்களிடையே இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் மாறும்.

**கடகம்:** தொழிலதிபர்கள் தங்கள் தொழிலில் நினைத்தபடி மாற்றங்களைச் செய்யலாம். வியாபாரிகள் போட்டி விற்பனையாளர்களை சமாளிக்க வேண்டியிருக்கும்.

**சிங்கம்:** அரசு ஊழியர்கள் நினைத்த இடத்திற்கு மாறுதலை அடைவார்கள். வேலைதேடும் இளைஞர்களுக்கு தகுதிக்கேற்ற வேலை கிடைக்கும். பிரிந்துசென்ற தம்பதியர் ஒன்றுசேர்வார்கள்.

**கன்னி:** சொத்து சார்ந்த வழக்குகள் வெற்றி தரும். தூரதேசத்திலிருந்து நல்ல செய்திகள் வந்துசேரும். அரசியல் பிரமுகர்கள் பொதுமக்களால் போற்றப்படுவார்கள். கடனும் தாமதமின்றிக் கிடைக்கும்.

**துலாம்:** அரசு ஊழியர்கள் நினைத்தபடி மாறுதலை அடைவார்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் பெறுவார்கள். இதுவரை சகோதரர்கள் மத்தியில் இருந்துவந்த சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சுகள் நல்லபடியாக முடியும். அரசியல் பிரமுகர்கள் திட்டமிட்டபடி புதிய பதவிகளைப் பெறுவார்கள். பெற்றோர்கள் வழியில் இருந்த பகை நீங்கும். வழக்குகள் சாதகமாகும்.

**தனுசு:** உங்கள் முயற்சிக்கேற்ற வரவைப் பெறுவீர்கள். ஒருசிலருக்கு பூர்வீக சொத்துகளில் இருந்துவந்த வில்லங்கம் நீங்கும். வழக்குகளில் வெற்றியும் கிட்டும். உங்களைப் பிரிந்துசென்ற சொந்தம் திடீரென தேடிவந்து சேரும்.

**மகரம்:** மறைந்த பொருள்கள் அனைத்தும் கிடைக்கும். அரசு ஊழியர்கள் சக ஊழியர்களிடம் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாக நேரிடலாம்.

**கும்பம்:** கடிதத் தொடர்புகளில் நல்ல தகவல்கள் வந்துசேரும். புதிய முயற்சிகளை தாமதித்து செய்ய வேண்டும். எதிலும் நிதானமாகச் செயற்பட்டால் காரியத்தில் வெற்றி காணலாம்.

**மீனம்:** உறவினர்கள், மற்றவர்கள் அனைவரும் ஆதரவாக இருப்பார்கள். உடல்நிலையில் மிகவும் கவனம் செலுத்தவேண்டும். தொழிலதிபர்கள் சந்தையில் அதிக போட்டியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.



# மிகச்சிறிய டிரில்லர்



பெரிய இயந்திரங்களில் செயல்படும் தொழில்நுட்பத்தை சிறிய இயந்திரங்களுக்குள் கொண்டு வருவது சற்று சிரமம் தான். அந்த வகையில் டிரில்லிங் இயந்திரத்தை நியூஸிலாந்தைச் சேர்ந்த ஒருவர் உருவாக்கியுள்ளார். 17 மில்லி மீற்றர் உயரம் கொண்ட இந்த துளையிடும் இயந்திரம் 3 டி தொழில் நுட்பத்துக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்கிறார்.

3டி முறையில் தயாரிக்கப்படும் நகைகள், கைவினை தயாரிப்புகளுக்கு இந்த கருவி பயன்படும். இந்த இயந்திரத்திலேயே இதற்கான பற்றரி மற்றும் சிறிய அளவிலான பட்டன் மற்றும் மொனிட்டர் உள்ளது.

வயர்கள் மற்றும் ஹெட்போன் கேபிள் சிறிய பற்றரி கொண்டு இதை உருவாக்கியுள்ளார். நிமிடத்துக்கு 1 சென்ரி மீற்றர் வரை துளையிடும் திறன் கொண்டது இந்த சிறிய டிரில்லர்.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்...




நேயாளியின் மனைவியைத் தனியே அழைத்த மருத்துவர், 'உங்க கணவருக்கு மாரடைப்பு வந்திருக்கு. இனிமேல் ரொம்பக் கவனமா பார்த்துக்க வேணும். குறிப்பாக அதிர்ச்சி தரும் விடயங்களைச் சொல்லக் கூடாது. இனி அவர் அதிக நாள் உயிர் வாழறது உங்க கையிலதான் இருக்கு' என்றார்.

போகும்போது கணவன் கோட்டான், ஆமா, 'டாக்டர் உன்கிட்ட தனியா ஏதோ சொன்னாரே அது என்னது? கண்டிப்பா ஏதோ சீரியஸ் விசயமாத்தான் இருக்கும், மறைக்காம சொல்லு'

'ஒண்ணுமில்ல, நீங்கள் சாகப்போறீங்களாம்'

# இயேசு

கொலம்பியா நாட்டில் கடந்த வாரம் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதன் விளைவாக, மண் மேடுகள் சரிந்தன. மண் சரிவால் இயற்கையாக உருவாகியுள்ள உருவம், பார்ப்பதற்கு இயேசுக் கிறிஸ்துவின் முகம் போன்று உள்ளது. இந்த அதிசயத்தைக் காணப் பல்வேறு இடங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு குவிந்த வண்ணம் உள்ளனர்.







# மடிக்கும் பைக்

பைக் நிறுத்த இடவசதி இல்லையே என்று கவலைப்படத் தேவையில்லை என்கிறது ஒரு நிறுவனம். இந்த நிறுவனம் வடிவமைத்துள்ள இரண்டு சக்கர வாகனத்தை அப்படியே மடக்கி வீட்டின் ஒரு மூலையில் வைத்து விடலாம். மின்சக்தியில் இயங்கும் இந்த பைக் மணிக்கு 15 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடியது.

சேமித்த மின்சக்தி தீர்ந்துவிட்டால் கவலை வேண்டாம், காலால் பெடல் செய்யலாம்.

இந்த பைக்கில் உள்ள சிறிய மொனிட்டர் மூலம் இன்டர்நெட் தொடர்பு எடுத்துக் கொள்ளலாம். எத்தனை கிலோ மீற்றர் வந்திருக்கிறோம். நேரம் போன்றவற்றை சொல்ல ஸ்பீக்கர்களும் இந்த மடக்கும் பைக்கில் உள்ளன.

# சமந்தாவின்

## காதலன் யார் ?

தொழிலதிபருடன் சமந்தாவுக்கு காதல் மலர்ந்துள்ளதாக பரபரப்பு தகவல் வெளியாகி உள்ளது. சமந்தாவும், சித்தார்த்தும் தெலுங்கு திரைப்படமொன்றில் ஜோடியாக நடித்தனர். அப்போது இருவருக்கும் காதல் மலர்ந்ததாக கூறப்பட்டது. சினிமா விழாக்களில் ஜோடியாக பங்கேற்றனர். இருவரும் திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் கிசுகிசுக்கப்பட்டது.

ஆனால், தற்போது இருவருக்கும் திடீரென கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துள்ளனர். சித்தார்த் வேறு நடிகைகளுடன் நெருங்கி பழகியதாகவும், இதனாலேயே காதலை சமந்தா முறித்துக் கொண்டதாகவும் செய்திகள் பரவி உள்ளன. இந்த நிலையில் சமந்தா தொழிலதிபருடன் காதல் வசப்பட்டுள்ளதாக புது தகவல் வெளியாகி உள்ளது.

# லக்ஷபான வாழைமலைப் பகுதி காட்டுத் தீ கட்டுப்பாட்டுக்குள்

கொழும்பு, மார்ச் 27
நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிவனொளி பாதமலையை அண்டிய லக்ஷபான வாழைமலை பிரதேச காட்டுப் பகுதியில் தீ பரவியுள்ளதுடன், ஹெலியின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வரப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
திங்கட்கிழமை இரவு பரவிய தீ காரணமாக குறித்த காட்டுப் பகுதிக்குள் சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக நல்ல தண்ணி பொலிஸார் தெரிவித் தனர்.
செவ்வாய்க்கிழமை தீயைக் கட்டுப்படுத்தப் பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து முயற்சி செய்தபோதிலும் தீயைக் கட்டுப் படுத்த முடியாமல் போனதால் நுவரெலியா மாவட்டச் செய லாளர் திருமதி எலன் மீகஸ்முல்லவின் பணிப்பின் பேரில் விமானப்படையினரின் உதவி பெறப்பட்டு எம்.ஐ. 17 என்ற ஹெலி மூலம் தீயை அணைக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.
இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டுள்ளதுடன். எவராவது தீயை மூட்டியிருக் கலாம்என்றுநல்லதண்ணி பொலிஸார்சந்தேகம்வெளி யிட்டுள்ளனர். (வ–சி)

# நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்க பூரண ஒத்துழைப்பு

கொழும்பு, மார்ச் 27
அரசின் இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கில் எடுக்கப்பட்ட முயற்சிக்குபூரண ஒத்துழைப்பை வழங்க தொழில் துறை முக்கியஸ்தர்கள் மற்றும் உணவு விநியோகஸ்தர்கள் முன்வந்துள்ளனர்.
இது தொடர்பில் அவர்கள் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் நிதி அமைச்சர் ரவிகருணா நாயக்கவை கடந்த திங்கட்கிழமை நிதி அமைச்சில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள் ளனர்.
சிமெந்து, ரின் மீன்கள் மீது குறைக்கப்பட்ட நுகர்வோர் விலைகளில் மாற் றம் இல்லை. தொடர்ந்து அதே விலை நடைமுறையில் இருக்கும் என்று தொழில்துறை மற்றும் உணவு விநியோகஸ்தர்கள் உறுதியளித்துள்ளனர்.
50 கிலோ எடையுள்ள சிமெந் தின், அதிகபட்ச சில்லறை விலை 870 ரூபாவாகவும், சதொச மூலம் உள்நாட்டில் பதிவுசெய் யப்பட்ட 425 கிராம் ரின் மீன் 109 ரூபாவாகவும் விற்பனை செய் யப்படும். (வ–சி)

## மருதனார்மடத்தில் ஸ்ரீ ராம நவமி இசை ஆராதனை பெருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 27
மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயிலில் ஸ்ரீராம நவமி இசை ஆராதனை பெருவிழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.
இந்த நிகழ்வில் இசைப் பேராளர்கள் கலந்து சிறப்பித்து இராமருடைய அனுக்கிரகமும் அனுமானின் திருவருளும் பெற்றுய்யுமாறு ஆதீனகர்த்தாவும் சிவாச்சாரியருமான சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள் அடியார்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். (ஒ)

# சிறுவர் நாடக தின விழா

யாழ்ப்பாணம், மார்ச் 27
உலக நாடக தின விழாவை முன்னிட்டு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் சிறுவர் நாடக தினவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். சமூக செயற்பாட்டு மையப் பணிப்பாளர் ந.சுகிர்தராஜ் மற்றும் சிறப்பு விருந்தினராக திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். இந்நிகழ்வில் இரண்டாம் வருட முகிழ்நிலை ஆசிரியர்களுக்கு இடையிலான சிறுவர் நாடகப் போட்டிகள், கண்காட்சி அளிக்கையாக இடம்பெறும். (வ)

# கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ். பிராந்திய இலங்கை தொழில் நுட்பவியல் சேவையாளர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது. (வ)


P.K.S.P. ரயர் விற்பனை நிலையத்தின்
மலிவு விற்பனை
கார் ரயர் G.T, CEHT, மோட்டார் சைக்கிள் ரயர், ரியூப் லொறி ரியூப், ஓட்டோ எலோவீல் ஒட்டும் மெசின் வான் எலோவீல், வில் வலன்ஸ் மெசின், ரயர் கழற்றும் மெசின், கொம்பிரசர் மெசின், நட்டு கழற்றும் மெசின், ஜெக் சாவி செற் விற்பனைக்குண்டு.
மலிவு விற்பனை
K.K.S. வீதி, இணுவில். (தியேட்டர் முன்பாக)
P.No: 0777498793, 0212241534



Majestic
Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்






பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30






சில்வர் 10.15 / 2.15 / 6.15
ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com


## வடக்கு மாகாணசபை, முறையற்ற நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் சம்பந்தமான விசாரணைக்குழு

வடக்கு மாகாணசபையினால் மேற்குறித்த விடயம் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு வடக்கு மாகா ணப் பொதுச் சேவை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங் களில் 01.01.2010 முதல் 15.03.2015 ஆம் திகதி வரை இடம்பெற்ற நியமனங்கள், பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பாகப் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து முறைப்பாடுகளைக் கோருகின்றது.

முறைப்பாடுகள் சுருக்கமாகவும், ஆதாரங்கள் இருப்பின் அவற்றுடனும் கீழ்க்காணும் முகவரிக்கு 15.04.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் முறையற்ற நியமனங்கள் தொடர்பான முறைப்பாடு எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முறைப்பாடுகளில் முறைப்பாட்டாளரின் முழுமையான முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி (இருப்பின் ) குறிக்கப்படுதல் அவசியமானதாகும்.

முறைப்பாடுகளின் இரகசியத்தன்மை பேணப்படும்.

முறைப்பாடுகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வடக்கு மாகாணசபை,
A-09 வீதி, கைதடி.

ம.அன்ரனி ஜெயநாதன்
(பிரதி அவைத்தலைவர்)
தலைவர்,
முறையற்ற நியமனங்கள் தொடர்பான விசாரணைக்குழு,
வடக்கு மாகாணசபை.
(சி/17221)(4.3.7)

## அரசாங்க அறிவித்தல்
## பகிரங்க ஏலவிற்பனை-2015
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம், தகவல் தொழிநுட்ப பூங்கா மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்டதளபாடங்கள், கணினிகள், பிரிண்டர்கள், தட்டச்சுப்பொறிகள், ரயர்கள், போட்டோப்பிரதி இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள், மின்சார உபகரணங்கள் போன்ற பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும்உரியஅலுவலகங்களில்ஏலவிற்பனை நடைபெறும் நாளுக்கு முதல்நாள் காலை 9.00 மணி முதல் மாலை 1.00 மணிவரை பொருட்களை பார்வையிடலாம். ஏலவிற்பனையில் பொருள்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தையும் ஏலவிற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் (பொது 172) பெற்று அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு முன்பாக பொருள்களை அவ்விடங்களில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | அலுவலகம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | பிரதேச செயலகம் - உடுவில் | 07.04.2015– செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. உடுவில் |
| 02 | பிரதேச செயலகம் - கோப்பாய் | 07.04.2015 – செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. கோப்பாய் |
| 03 | பிரதேச செயலகம் - பருத்தித்துறை | 07.04.2015 – செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. பருத்தித்துறை |
| 04 | பிரதேச செயலகம் - மருதங்கேணி | 07.04.2015 – செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. மருதங்கேணி |
| 05 | பிரதேச செயலகம் - நல்லூர் | 07.04.2015 – செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. நல்லூர் |
| 06 | பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம் | 07.04.2015 – செவ்வாய்க்கிழமை | மு.ப 10.30 | பி.செ. யாழ்ப்பாணம |
| 07 | பிரதேச செயலகம் - ஊர்காவற்றுறை | 07.04.2015 – செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. ஊர்காவற்துறை |
| 08 | பிரதேச செயலகம் - வேலணை | 07.04.2015 – செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. வேலணை |
| 09 | பிரதேச செயலகம் - சங்கானை | 07.04.2015 – செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. சங்கானை |
| 10 | பிரதேச செயலகம் - காரைநகர் | 07.04.2015 – செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. காரைநகர் |
| 11 | பிரதேச செயலகம் - கரவெட்டி | 07.04.2015 – செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. கரவெட்டி |
| 12 | பிரதேச செயலகம் - நெடுந்தீவு | 07.04.2015 – செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | பி.செ. நெடுந்தீவு |
| 13 | மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம் | 09.04.2015– வியாழக்கிழமை | மு.ப 10.00 | நாவற்குழி களஞ்சியசாலை |
| 14 | தகவல் தொழிநுட்ப பூங்கா - யாழ்ப்பாணம் | 24.04.2015 – வெள்ளிக்கிழமை | மு.ப 10.00 | தகவல் தொழிநுட்ப பூங்கா, யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்க கட்டடம் |

நா.வேதநாயகன்,
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.
(சி/17226)(4.3.7)


யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய அதிபரை
பாராட்டி வாழ்த்துகின்றோம்





Best Wishes!
அகவை அறுபதில் ஓய்வுபெறும் மணிவிழா நாயகன்
உயர்திரு அ.சா.அரியகுமார் S.L.P.S.I, J.P
கல்விச்சேவையில் முப்பத்தேழு ஆண்டுகள் கலங்கரை விளக்கமாய் இருந்து சேவையாற்றிய எம் அன்புக்குரியவர், கல்விச் சேவையுடன் பொதுச் சேவையையும் தொடர்ந்து செயலாற்றிய மணிவிழா நாயகனுக்கு எம் வாழ்த்துக்கள்
வாழ்த்துவோர்:-
★ சின்னத்துரை தில்லைநாதன் முத்த ஊடகவியலாளர், வடமராட்சி.
★ கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் அதிபர், S.L.P.S. II யா/வல்வெட்டித்துறை அ.மி.த.க. பாடசாலை
★ லயன் பாலகிருஷ்ணன் இரகுநாதன் S.L.E.A.S, J.P ஓய்வுநிலை கோட்டக் கல்விப்பணிப்பாளர்.
★ உயர்திரு வே.தி.செல்வரத்தினம் S.L.E.A.S Class I ஓய்வுநிலை வடமாகாண பிரதிச் செயலாளர் (கல்வி அமைச்சு)
★ பரமலிங்கம் சந்திரபாபு, அதிபர் S.L.P.S. I யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
★ Dr. K.K. யோகநாதன், அதிபர் S.L.P.S. I யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

**கண்ணீர் அஞ்சலி**



எமது வலயக்கல்வி அலுவலகத்தில் கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றும் செ.ம.நட்ஸ் கிங் அவர்களின் பாசமிகு தந்தை

**அகஸ்ரின் டொமினிக்**

அவர்கள் 24.03.2015 இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிகழகம், வலயக்கல்வி அலுவலகம்,
தீவகம், வேலணை.

(சி/17218)(4.3.7)



**எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

**அமரர் சிதம்பரம் (காஞ்சனா) சட்டநாதர்**



மலர்வு 18.09.1935
உதிர்வு 25.03.2007

திதி: பூர்வபக்க அட்டமி (27.03.2015)

கள்ளங்கபடமற்று
இயற்கையுடனே இன்புற்று
நிறைவாழ்வு வாழ்ந்தீர்கள்
காலங்கள் கடந்த போதும்... ஆண்டெட்டு
ஓடி மறைந்தாலும் உங்கள்
நினைவலைகள்
எம் நெஞ்சங்களில்... ஆத்மசாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர் சட்டநாதர்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

(சி/17220)(4.7.3)



**2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

**அமரர் இராஜேஸ்வரி வீரசிங்கம்**

தோற்றம் 05.10.1954
மறைவு 18.04.2013



எங்கள் அன்புத் தெய்வமே!
ஈராண்டுகள் சென்றதம்மா
ஒரு நாள் சென்றது போல்
உள்ளதம்மா - உங்கள்
திருமுகத்தைக் காணாதது
போல் மனம் துடிக்குதம்மா
எங்களைத் தனியே தவிக்கவிட்டு
ஏன் தான் தனி
வழியே சென்றாயம்மா
காலமெல்லாம் உங்களுக்காக
கண்களில் நீர் நிரம்பி வழியுதம்மா

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

விடத்தற்பளை,
மிருசுவில்

(சி/1729) (4.6.3)



**6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



**அமரர் பிரான்சிஸ்சேவியர் லூர்த்தம்மா**

தோற்றம் 1942.03.27
இறப்பு 2009.03.27

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த அம்மாவே!
ஆறு ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அம்மாவே!
உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

5 ஆம் வட்டாரம்,
இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.



**2 ஆம் வருட நினைவஞ்சலி**

**ஞானமுத்து பிலோமினா**



அன்னை மடியில் 1935.12.03
ஆண்டவன் அடியில் 2013.03.27

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ் நாளெல்லாம் நான் குடியிருக்க வேண்டும்."
(தி.பா.27:4)

ஆண்டுகள் இரண்டு
ஓடி விட்டதம்மா– உங்கள்
புன்னகை தவழும்
அன்பு முகத்தை மறக்க
எம்மால் முடியவில்லையே அம்மா

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தேவாலய வீதி,
மல்லாகம்.

(55728)(4.3.7)


# அடுத்த பொதுத்தேர்தலில் சு.கட்சி சார்பில் போட்டியிட மஹிந்தவுக்குத் தடையில்லை

## கட்சியின் பொதுச் செயலாளர் யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தற்போதும் இணைந்து செயற்பட்டு வருகின்றார் என்று தெரிவித்த கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா, அடுத்த பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடுவதற்கு எவ்வித தடையும் இல்லை என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசியலில் முன்னோக்கிப் பயணிப்பதும், கட்சியின் எதிர்கால அரசியலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய மூவரின் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது என்றும் அந்தக்கட்சி தெரிவித்தது.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா கருத்து வெளியிடுகையில்;

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகர் ஆவார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவைப்போல அவரும் கட்சிக்கு ஆலோசனை வழங்கி வருகின்றார். அவர்கள் மத்திய குழுவுக்கு ஆலோசனை வழங்குகின்றனர். மஹிந்த ராஜபக்ஷ இன்னமும் கட்சியுடன் இணைந்து செயற்படுகின்றார். உள்ளூராட்சிச் சபை விவகாரம் தொடர்பில் அண்மையில் கடிதம் மூலம் தமது நிலைப்பாட்டை அறிவித்திருந்தார். அண்மையில் கூட நாம் அவரைச் சந்தித்துப் பேசினோம்.

அடுத்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு அவருக்கு எந்தத் தடையும் இல்லை. இருப்பினும், அது குறித்து கட்சித் தலைவர்தான் தீர்மானிக்க வேண்டும்" – என்றார்.

இதையடுத்து எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான டப்ளியூ. டீ.ஜே.செனவிரட்ன கருத்துத் தெரிவிக்கையில்,

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அடுத்தகட்ட அரசியல் நகர்வை நோக்கிச் செல்லவேண்டுமாயின், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய மூவரும் ஒன்றிணைய வேண்டும்" – என்றார். (வ–சி)

# சிறுபான்மையினர் எதிர்க்கட்சி தலைவராகவும் வரமுடியாதா?

## கேள்வி எழுப்பினார் கல்வி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மார்ச் 27

"நாங்கள் இந்த நாட்டில் சிறுபான்மையினர் என்ற ரீதியில் ஜனாதிபதியாக வரமுடியாது. அதேபோல பிரதமராகவும் வரமுடியாது. ஆனால், எதிர்க் கட்சித் தலைவராகவும் வரமுடியாதா?" – என்று கேள்வி எழுப் பினார் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன்.

திருகோணமலை, கிண்ணியா மத்திய கல்லூரியின் நிர்வாகக் கட்டடத்தை நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:–

"இன்று இலங்கை அரசியலில் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. அந்த மாற்றங்கள் எவரும் எதிர்பார்க்காத வண்ணம் நடைபெறுகின்றன. எனவே, இந்த நிலையில் ஏன் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த ஒருவர் எதிர்க் கட்சித்தலைவராக வரமுடியாது? எமது நாடாளுமன்றத்தில் தமிழர்கள் – அதாவது, மறைந்த தலைவர் அமிர்தலிங்கம் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த வரலாறும் சரித்திரமும் உள்ளன.

எனவே, இன்று இந்த நிலையில் நாம் சிறுபான்மை இனங்கள் ஒன்று சேர்ந்தால் சிறுபான்மை இனத்தவர் ஒருவரையே எதிர்க் கட்சித் தலைவராக்கிக் கொள்ளலாம். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், மலையக மக்கள் முன்னணி அதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராகவுள்ளது. இதனை நான் அரசியலாகப் பார்க்காமல் சமூக ரீதியில் சிந்தித்து எமது மத்தியில் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதற்காகவே கூறுகின்றேன்.

ஆனால், இதனை வைத்துக் கொண்டு ஒருசிலர் அரசியல் செய்ய முற்படுகின்றார்கள். அதற்குச் சிறுபான்மை மக்களாகிய நாம் இடமளிக்கக் கூடாது" – என்றார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட், உள்நாட்டுப் போக்கு வரத்துப் பிரதியமைச்சர் எம்.எஸ்.தௌபீக், கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ்:தண்டாயுதபாணி உட்பட கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

### புத்தாக்க அரங்க இயக்கத்தின் நாடக தின விழா

யாழ்ப்பாணம், மார்ச் 27.

புத்தாக்க அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் உலக நாடக தின விழா இன்று வெள்ளிகிழமை காலை 8.30 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்க பணிப்பாளர் எஸ்.ரி. குமரன் தலைமையில் மல்லாகத்தில் அமைந்துள்ள புத்தாக்க அரங்க இயக்க மண்டபத்தில் இடம்பெற வுள்ளது. உலக நாடக தின நிகழ்வுகளாக எஸ்.ரி.குமரன். எஸ்ரி. அருள்குமரன் ஆகியோரின் நெறியாள்கையில் நிஜங்கள் என்ற நாடக ஆற்று கையும், ஈழத்து சமகால அரங்கப் போக்கு தொடர்பான கருத் தாடல் நிகழ்வும் இடம்பெ றவுள்ளன. (வ)

# நாரோ நிறுவனத்தின் புதிய கட்டடம் திறப்பு

கிளிநொச்சி, மார்ச் 27

மனிதாபிமான புனர்வாழ் வுக்கான தேசிய நிறுவனத்தின் (நாரோ) புதிய கட்டடத் திறப்பு விழாவும் பாதிக்கப் பட்டவர்க ளுக்கான உதவி வழங்கும் நிகழ்வும் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட பொதுச் சந்தைக்கு அருகாமையில் இடம் பெற்றன.

2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட இந்த நிறுவனம் கனகபுரம் பகுதியில் தனது செயற்பாடு களை முன்னெடுத்து வந்தது. அதன் செயற் பாடுகளை விரிவ படுத்தும் நோக்குடன் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் புதிய அலுவலகத்தை ஆரம்பித்துள்ளது. அத்துடன் அன்றைய தினமே முள்ளந்தண்டு வடம் பாதிக் கப்பட்ட 11 நபர்களுக்கான கட்டில்கள், மெத்தை போன்றன வழங்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், மனி தாபிமான புனர்வாழ்வுக்கான தேசிய நிறுவனத்தின் தலைவ ரும் வடக்கு மாகாண கல்வி அமைச்சருமாகிய த.குருகுலராஜா, மருத்துவர் அகிலன், முன்னாள் அதிபர் க.இராஜேந்திரம், சமூக ஆர்வலர்கள், மாற்றுத் திறனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர். (வ–9–21)

## தவக்கால வீதி சிலுவைப் பாதை

கொழும்புத்துறை,மார்ச் 27

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆல யத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் தவக்கால வீதிச் சிலுவைப்பாதை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற வுள்ளது.

கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள திருவுளப் பணி யாளர் சிறிய குருமடத்தில் இருந்து ஆரம்பமாகும் சிலு வைப்பாதைப் பேரணி ஆனந்தன் வடலிவீதி, சென்மேரிஸ் முதலாம் ஒழுங்கை, சென் மேரிஸ் 2ஆம் ஒழுங்கை வழியாக ஆலயத்தைச் சென்ற டையும். (வ–135)

## விபத்து

வலி.வடக்கு, மார்ச் 27

லாண்ட் மாஸ்ரரைச் செலுத்தி வந்தவர் வலிப்பு நோய்க்கு உள்ளாகியமையால் லாண்ட் மாஸ்ரர் அருகில் உள்ள கடையுடன் மோதுண்டு நிறுத் தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 9.45 மணியளவில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள இணுவில் மக்லியட் தனியார் மருத்துவமனையின் முன்பாக இந்த விபத்து இடம் பெற்றது.

தெய்வாதீனமாக லாண்ட் மாஸ்ரரைச் செலுத்த வந்தவர் கடையுடன் மோதுண்ட போதிலும் வாகனங்கள் எவையுடனும் மோதிவிடாமையால் சிறிய காயத்துடன் தப்பியுள்ளார்.

நெடுஞ்சாலை போக்குவரத்துப் பொலிஸார் உடனடியாக குறிப்பிட்ட இடத்துக்கு வந்து விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர். (வ–86)

## ஸ்ரீ ராம நவமி தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் ஸ்ரீ ராம நவமி தினம் நாளை அனுட்டிக்கப் படவுள்ளது.

இந்நிகழ்வின் ஆரம்பமாக நாளை முற்பகல் 10.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை ஸ்ரீ ராம நாம ஜபம் இடம்பெறுவதோடு தொடர்ந்து 11.30 மணிக்கு பூஜை,பஜனை என்பனவும் இடம்பெறும்.

தொடர்ந்து மதியம் 12 மணிக்கு ஆரத்தியும் 12.15 மணிக்கு வதிவிட ஆச்சாரியார் பிரம் மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் அவர்களின் சத்சங்கமும் இடம்பெறும்.

இறுதியாக, மதிய உணவுடன் இந்நிகழ்வு நிறைவுறும். (வ)

## திருமணப் பதிவுக் கட்டணம் குறைப்பு

திருமணப் பதிவுக் கட்டணம் நாடுமுழுவதும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளதாக வடமாகாணஉதவிப் பதிவாளர் செல்வி ஆனந்தி கனகரத்தினம் அறிவித்துள்ளார். கடந்த வரவு–செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட திருமணப் பதிவுக் கட்டணக் குறைப்பு உடனடியாக நடைமுறைக்கு வருவதாக அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் வீட்டில் நின்று திருமணப்பதிவு செய்வதற்கு அறவிடப்பட்ட கட்டணமான ரூபா 3 ஆயிரத்து 500 தற்போது 50 ரூபாவாகவும் திருமணப் பதிவாளருக்கு வழங்கப்பட்ட கட்டணமான ஆயிரத்து 500 தற்போது 750 ரூபாவாகவும்குறைக்கப்பட்டுள்ளது. இதேவேளை திருமணப்பதிவு அறிவித்தல் கட்டணமும் இளஞ் சிவப்பு நிறப் படிவக்கட்டணமும் மாற்றமின்றிமுன்னர்அறவிட்ட100 ரூபாவாகஇருக்கும் என்று அறிவித்துள்ளார். (வ–9)

# VACANCY

01. FRONT OFFICE MANAGER
02. OPERATIONS MANAGER
03. ROOM BOYS WAITERS
04. RECEPTIONIST-FEMALE

மேற்கூறிய பதவிகளுக்கு உடனடியாக ஆள்கள் தேவை.
28.03.2015 காலை 9 மணியளவில் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

Tel : 021 222 2829
Fax: 021 222 4449
pillaiyar.in@gmail.com

**Pillaiyar inn**
நிர்வாகம்.
31, Manipay Rd,
Jaffna. (58097)(4.3.7)



## ஸ்ரீ ராம நவமி பெருவிழாவும்
(பாபா பிறந்ததினம்)
## பாபாவின் சாவடி ஊர்வலமும்
## 28.03.2015

அன்பான பக்தர்களே!

- காலை 8.30 மணி முதல் 9.30 மணிவரை பக்தர்கள் பாபா பாதுகைக்கு அபிஷேகம் செய்தல்.
- காலை 9.30 மணிக்கு ஏகதின இலட்சார்ச்சனை ஆரம்பம்.

சாவடி ஊர்வலம் (பல்லக்கு உற்ஷவம்)
இரவு 7 மணிக்கு ஆரம்பம்
ஆலயம் → மருதடிவீதி → றக்காவீதி → இராசாவின் தோட்ட வீதி → நாவலர் வீதி → ஆலயம்

- வட இந்தியா சீரடியில் இடம்பெறுவது போல நடைபெறும்.

"சீரடி சாயி மந்திர்" (57934)(4.3.7)
314, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 077 722 2568

## பவள ஆண்டு காணும் பண்புடைய தாய்க்கு வாழ்த்து
## கந்தசாமி சரஸ்வதி



தந்தையுமாய் தாயுமாய் எம்
சிந்தை எல்லாம் நிறைந்த வித்தகியே!
அன்பு என்னும் செங்கோலால் எம்மை ஆளும் அன்னையே
என்பும் தசையுமாய் என்றும் சேர்ந்திருப்போம்
பண்பு நிறை உன் பேரன்பும் கொண்டவரே!
நோய் இன்றி நீடுழி நீடுழி நீர் வாழ
வாய் பொங்கும் மகிழ்வோடு வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
பெறாமகள்: சின்னத்தம்பி சிவகுமார் மகன்: கந்தசாமி சிவகுமார்
மகள்: ஜெயவதனி, ஜெயச்சித்திரா, ஜெயந்தினி
மருமகன்: இராசநந்தன் (சர்வா)
மருமகள்: சுமதி, வானதி
பேரப்பிள்ளைகள்: சதுர்ஜன், சஸ்மிதா, அபிஷேக், அருன்ஜா, அஸ்வின்
மைத்துனன், மைத்துனி, இராசரத்தினம், மனோன்மணி.
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். (58127)(364)

## வீடு வாடகைக்குண்டு

அளவெட்டி தெற்கில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 076 696 1129 (58113)(4.3.7)

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் பிரபல்ய வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை. 28 வயதுக்குட்பட்ட ஆண்கள் மட்டும்.
தொடர்பு: 077 715 6843
(58128)(4.3.7)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் உள்ள வயோதிப தாய் ஒருவரை வீட்டில் தங்கி நின்று பராமரிப்பதற்கு 40-50 வயதிற்குட்பட்ட பெண் வேலையாள் தேவை.
(58131)(4.3.7) தொடர்பு: 077 645 3443

## கடை வாடகைக்கு

ஏ9 வீதி, கொடிகாமம் சந்தியில் 52 அடி நீளமும் 11 அடி அகலமும் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய கீழ் மாடி மேல் மாடியுடன் அறை வாடகைக்கு விடப்படும். (சி/17222)(4.3.7)
குறிப்பு: அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 653 4204, 077 493 7585

## விற்பனைக்கு

ஐப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Push சைக்கிள்கள் சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்பனைக்குள்ளன.
விலை 10000/= லிருந்து
தொடர்பு: 078 615 5929, 021 320 5939
(58129)(4.3.7)

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும்
யாழில் முதற்தர ஆங்கில பயிற்சி மையத்தில் இருந்து

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



ஓரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி
**Spoken English**
veta
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat sun 10.30 a.m.<br>Mon , Fri 3.30 p.m. | Sat sun 8.30 a.m.<br>Mon, Fri 4.00 p.m. | Sat sun 9.30 a.m.<br>Mon , Fri 9.30 a.m. | Tue, Thu 3.00. p.m. |

DMI COMPUTER EDUCATION
UK Sponsor / Settlement Visa
திருமணம் செய்து UK செல்வதற்கான ஆங்கில பரீட்சை
2015 புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில
UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை

**IELTS**
- Unique Test Tips
- Latest course Materials

## DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சுபாஸ் ஹோட்டல் அருகாமை) | M.M.V வீதி. | கண்டி வீதி, (HNB அருகில்) | கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 |

## வலிகிழக்கு பிரதேசசபை, புத்தூர்
## ஒப்பந்தம் புதுப்பித்தல்

எமது சபைக்குச் சொந்தமான அச்சுவேலி, புத்தூர் உப அலுவலக எல்லைக்குட்பட்ட கீழ்வரும் இலக்க கடைகளுக்கான ஒப்பந்தத்திகதி முடிவடைந்துள்ளது. இக்கடைகளின் ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்கு ஏதுவாக தாங்கள் 10.04.2015 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த கடை சார்பாக செய்துகொண்ட ஒப்பந்தப்பத்திரம், தேசிய அடையாள அட்டை மற்றும் உரிய ஆவணங்களுடன் சபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேற்படி திகதியில் தாங்கள் அலுவலகத்திற்கு சமுகமளிக்கத் தவறும் பட்சத்தில் தங்கள் ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அச்சுவேலி உப அலுவலகக் கடைகள்**

| தொ.இல | கடை இல | வாடகையாளர் பெயர் | முகவரி |
|---|---|---|---|
| 1 | 03 | .சூரன் பண்டாரி | அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி |
| 2 | 11 | .கனகசபை கருணாகரன் | புத்தூர் மேற்கு, புத்தூர் |
| 3 | 16 | திருமதி துரைராசா தனலட்சுமி | அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி |
| 4 | 22 | திருமதி நாகராசா சாந்தநாயகி | அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி |
| 5 | 23 | திருமதி சிவபாக்கியம் தங்கராசா | அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி |
| 6 | 25 | .கிருஷ்ணபிள்ளை வரதராசா | பத்தமேனி, அச்சுவேலி |
| 7 | 29 | திருமதி பத்திரதாசன் செல்வநாயகி | பத்தமேனி, அச்சுவேலி |

**புத்தூர் உப அலுவலகக்கடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | 1 | பொது முகாமையாளர், வலிகிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் | அச்சுவேலி |
| 2 | 2 | மு.சிவரத்தினம் | ஆவரங்கால் மேற்கு, ஆவரங்கால் |
| 3 | 3 | கி.அருளம்பலம் | ஆவரங்கால் மேற்கு, ஆவரங்கால் |

**கணபதிப்பிள்ளை துரைசிங்கம்**
**தவிசாளர்,**
**வலிகிழக்கு பிரதேசசபை, புத்தூர்.** (சி/17224)(4.3.7)

## ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்
## பான் ஏஷியா வங்கி யாழ்ப்பாணக் கிளை

**ஓய்வூதியர்களுக்கான கடன் வசதியின் சலுகைகள்**

- கடனைப் பெற்றுக்கொள்ள பிணைகள் தேவையில்லை
- ரூ. 1,000,000/- வரை கடன் தொகை
- 7 வருட மீள செலுத்தும் காலம்
- 70 வயது வரை கடனை மீள செலுத்தக் கூடிய வசதி
- கடனைப் பெறுபவருக்கு மரணம் சம்பவிக்கும் போது குடும்பத்தினருக்கு கடன் சுமையை வழங்காமல் காப்புறுதியினால் கடன் தொகை விலக்களிக்கப்படும் மேலும் பின்னுரித்தாளருக்கான விசேட பணச்சலுகைகள் (ரூ. 100,000/- கடனிற்கு கடன் காப்பீட்டிற்காக ரூ. 602/- மட்டுமே)

**ஓய்வூதியர்களுக்கான சிறப்பு சேமிப்புக் கணக்கின் மேலதிக சலுகைகள்**

- உங்கள் விசேட சேமிப்புக் கணக்கிற்கு கவர்ச்சிகரமான வட்டி
- VISA குறி உள்ள எந்தவொரு ATM இலும் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் வசதி
- தனிப்பட்ட சேமிப்புப் புத்தகம் வழங்கப்படும்
- ரூ. 200/- ஆரம்ப வைப்பாக வைப்புச் செய்து கணக்கை ஆரம்பிக்க முடியும்
- இச்சலுகை ரூ. 10,000/- திற்கு அதிகமாக மாதாந்த ஓய்வூதியத் தொகையை பெற்றுக்கொள்பவர்களுக்கு வழங்கப்படும்
- ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்களும் இச்சலுகையினை பெறமுடியும்
- விதவை ஓய்வூதியப்பணம் பெறுபவர்களும் இச்சலுகையினை பெறமுடியும்

இந்த கடன் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 29.03.2015 (ஞாயிறு) காலை 10.00 மணிக்கு யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தில் (வண்ணார் பண்ணை சிவன் கோவில் அருகாமையில்) நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு,
**PAN ASIA BANK PLC.**
பான் ஏஷியா வங்கி
570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.
021- 4925118 / 021- 4976777 / 021- 4925119

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

பான் ஏஷியா வங்கி

## கலைமகள் முன்பள்ளி விளையாட்டு விழா

தென்.மட்டுவில் கலைமகள் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு முன்பள்ளி மைதா னத்தில் இடம் பெறும். முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் மு.சிவகுமார் தலை மையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந் தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும், சிறப்பு விருந்தினராக சாவகச் சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையும் கலந்துகொள்வர்.(வ–9)

# தேசிய அரசைக் கவிழ்க்க கோத்தபாய வீட்டில் சதி

## ஊடகவியலாளர் சந்திப்பில் அஸாத் ஸாலி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

தமிழ், முஸ்லிம் மக்களுக்குக் காணியைக் கொடுக்க வேண்டாம் என்று சொல்ல கோத்தபாயவும், தினேஷ் குணவர்த்தனவும் யார்? என்று கேள்வியெழுப்பிய, தேசிய நிறைவேற்றுச் சபை உறுப் பினரும், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அஸாத்ஸாலி, தேசிய அர சைக் கவிழ்க்க கோத்த பாயவின் வீட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியைச் சேர்ந்த சிலர் சதித்திட்டம் தீட்டி யுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப் படுத்தும் அமைப் பின் ஊடகவி யலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அஸாத் ஸாலி இவ்வாறு கூறினார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகள் மஹிந்தவு டையதோ அல்லது கோத்தபா யவினுடையதோ அல்ல. அந்தக் காணிகள் தமிழ், முஸ்லிம் மக்க ளின் சொந்தக் காணிகளாகும். அதை உரிய மக்களிடம் திருப்பிக் கொடுக்க வேண் டாம் என்று சொல் வதற்கு தினேஷ் குணவர்தனவும் கோத்தபாயவும் யார்?

போர்க் காலத் தில் பாதுகாப் புத் தேவை கருதியே தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகளை இராணுவம் கைப்பற்றி யது. இப் போது தினேஷ் குணவர்த் தனவும், கோத்தபாயவும் அதைக் கொடுக்க வேண்டாம்என்கின்றார்கள்.

மூவின மக்கள் இந்த நாட்டில் ஒன்றாக வாழும் சூழல் உதய மாகி யுள்ளது. இந்தச் சூழலைக் கெடுத்து நாட்டில் மீண்டும் இனவாதத்தை விதைத்து சிறு பான்மைச் சமூகத்தை அடக்கியாள தினேஷ் குணவர் தனவும், கோத்தபாயவும் முயல்கின் றனர். அதற்கு இனியொரு போதும் ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன இடமளிக்க மாட்டார்.

கடந்த திங்கட்கிழமை இரவு கோத்த பாயவின் வீட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஒருசில முன்னாள் அமைச்சர்கள் ஒன்றுகூடி தேசிய அரசைக் கவிழ்க்கச் சதித்திட்டம் தீட்டியுள்ளனர் என்று எமக்குத் தகவல் கிடைத்துள் ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எவருக்கும் பயப்படக் கூடியவர் அல்லர். இன்று முழு சர்வதேசமே அவரை வர வேற்கின்றது.

தேசிய கீதம் தமிழில் பாடுவது தமிழ் பேசும் மக்களின் உரிமை. அந்த விடயம் 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த திலிருந்து காணப்படுகின்றது.

தேசிய கீதத்தை தமிழில் பாடக் கூடாது என்று இலங்கை அரச மைப்பில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை என்று தெளிவாக ஜனாதிபதியும் அமைச்சர்களும் விளக்கி யுள்ளனர். அதற்கு எதிராக வேண்டுமென்றால் விமலும், தினேஷும், ஞானசார தேரரும் மாத்திரமே இருப்பார்கள். மாறாக, சிங்கள மக்கள் அல்ல.

ஏனென்றால், சிங்கள மக்கள் இவர்களைஅரசியலிலிருந்து ஒதுக்கி யுள்ளனர். இனவாதத்தை அவர்க ளால் இனியும் இந்த நாட்டில் விதைக்க முடியாது.

இன்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்புக் குறைவாம். முன்னர் இருந்த ஜனாதிபதிகள் பதவிக் காலத்தின் பின்னர் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றனர். ஆனால், மஹிந்த மக்களால் தோற்கடிக்கப் பட்ட பின்னரும் 212 பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடனும் 23 வாக னங்களுடனும் வாழ்கின்றார். ஆனால், மஹிந்தவுக்குப் பாது காப்பு போதாது என்று சிலர் கதை விடுகின்றனர். ஏன் மஹிந்த திருடிய வாகனங்கள் எங்கே?

இந்த முறை புனித மக்கா பயணத் துக்குக் கூடுதலாக ஆயிரம் பேரை கூட்டிச் செல்ல சவூதி அரசுடன் பேச்சு நடத்தப்படுகின்றது. அத்து டன், மக்கா யாத்திரீகக் கட்டணத் தைக் குறைப்பது தொடர்பாகவும் ஜனாதி பதியுடன் பேச்சு நடத்தப்ப டுகின்றது" – என்றார்.(வ–சி)

## மரண அறிவித்தல்

### மகேஸ்வரி (பூமணி) சிவசெல்வநாதன்



தோற்றம் 01.01.1934

மறைவு 21.03.2015

47, கோயில் வீதி, யாழ்ப்பா ணத்தைப் பிறப்பிடமாகவும் கனடா நோத்யோக்கை வதிவிடமாகவும் கொண்ட மகேஸ்வரி சிவசெல்வ நாதன் (21.03.2015) சனிக்கிழமை கனடாவில் இறை பதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான செல்லமுத்து- அன்னம்மா (முத்து) தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர் களான சிவக்கொழுந்து- பாக்கிய லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசெல்வநாதன் (முன்னாள் முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், ராஜேஸ்வரி (நவம்), ருக்மணி (ருக்கு- லண்டன்), சரஸ்வதி (திரவியம்), தனலஷ்சுமி (தனம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஸ்ரனிஸ்லோஸ், சிவபாலரட்ணம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஹரிந்திரன் (லண்டன்), Dr.சியாமளா ( ஆஸ்திரேலியா), குசேலா (கனடா), காலஞ்சென்ற கலேந் திரன் மற்றும் ஜயேந்திரன் (கனடா), பவேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சசி (லண்டன்), சிவாஜி (ஆஸ்திரேலியா), சுரேஸ்குமார் (கனடா), ஜெயரூபி (கனடா), மாதவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், டிலன், சௌமியா, அரவிந், அர்ஜன், கௌதம், அபிமன், அபிராமி, பவித்திரா, கோகுலன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (29.03.2015) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ.கனகலிங்கம்
சகோதரன்
075 073 9742

47, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(58126)(4.3.7)

## மரண அறிவித்தல்



### பரமேஸ்வரன் (கண்ணன்) சுப்ரமணியம்

யாழ்.அல்வாய் கிழக்கு, வட்டுவத்தையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரன் (கண்ணன்) சுப்ரமணியம் 20.03.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம்- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், விமலாதேவி (விமலா- வஜாணி) அவர்களின் அன்புக்கணவரும், பத்மலோசனி (கனடா), கமலாசனி (கனடா), கெங்காதேவி (இலங்கை), யசோதராதேவி (கனடா), நிர்மலாதேவி (இலங்கை), தயாபரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீபாலகணேசமூர்த்தி, ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் விபுலானந்தன் (இலங்கை), நாகராஜா (கனடா), வாசுகி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

(28.03.2015) சனிக்கிழமையும் (29.03.2015) ஞாயிற்றுக்கிழமையும் பி.ப. 5.00 - 9.00 மணி வரை (Chapel Ridge funeral Home, 8911 Wood bine Ave, Markham, ON L3R 5Gl, Canada) எனும் இடத்தில் பார்வைக்காக வைக் கப்பட்டு, அதே இடத்தில் 29.03.2015 ஞாயிற்றுக்கிழமை கிரியைகள் நடை பெற்று, பி.ப 2.30 மணியளவில் 1591 Elgin mills Road East Richmond Hill ON L4S 1M9 எனும் இடத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
தயாபரன் (சகோதரர்)- கனடா
தொலைபேசி (416) 2980811

(58139)(4.3.7)

# சுதந்திரக் கட்சியின் 90 நாள் வேலைத்திட்டம் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 27

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை யிலான அரசு 100 நாள் திட்டத்தை நடை முறைப்படுத்திவரும் நிலையில், தேசிய அரசில் இணைந்துகொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று முன்தினம் தொடக்கம் 90 நாள் வேலைத்திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளது.

அரசமைப்பின் 19ஆவது, 20 ஆவது திருத்தச் சட்டங்களை 90 நாள்களுக்குள் நாடாளு மன்றில் சமர்ப்பித்து நிறை வேற்ற வேண்டும் என்று தமது வேலைத்திட்டத்தை நேற்று முன்தினம் முன்வைத்தார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வாராந்த ஊடகவிய லாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்:

"ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங் களை நீக்குவதால் மட்டும் நிலையான ஆட்சி ஒன்றை நாட்டில் ஏற்படுத்தி விடமுடியாது. தேர்தல் முறைமையிலும் மாற்றம் கொண்டு வர வேண்டும்.

ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்கள், திருத்தங்களைக் கொண்டுவரும் சட்ட மூலத்தை 19ஆவது திருத்தச்சட்ட மாகவும், விகிதாசார தேர்தல் முறை மைக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய தேர்தல் முறைமையை 20ஆவது திருத்தச் சட்ட மாகவும் நாடாளுமன்றில் நிறைவேற்ற வேண்டும்.

இதை 3 மாதங்களில் செய்து முடிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, இந்தத் திருத்தங்களை மேற்கொண்ட அடுத்த நாளே நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்குச் செல்லலாம். இன்று முதல் எதிர்வரும் 3 மாதங்களுக்குள் இதனைச் செய்து முடிக் கலாம்" – என்றார். (வ–சி)

## மிகவிரைவில் முக்கிய தீர்மானம் எடுக்கவுள்ளார் சந்திரிகா

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரண துங்க எதிர்வரும் தினங்க ளில் முக்கிய தீர்மானம் ஒன்றை எடுக்கவுள் ளார் என்று தகவல் கள் தெரிவிக்கின்றன.

எஸ்.பி. திஸாநாயக்க மற்றும் பவித்ரா வன்னியாராச்சி ஆகி யோருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டமை குறித்து சந்திரிகா கடும் அதிருப்திய டைந்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகரான சந்திரிகா, இது தொடர்பிலேயே எதிர்வரும் நாள்களில் கடுமையான அரசி யல் தீர்மானம் ஒன்றைஎடுக்கவுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

எஸ்.பி. திஸாநாயக்க மற்றும் பவித்ரா வன்னியாராச்சி ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு ஜனாதிபதிக்கு அமைச்சர் ராஜித சேனாரட்ன அழுத்தம் கொடுத் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஊடகவியலாளர் கேள்வியால் கோபமடைந்த யாப்பா

கொழும்பு, மார்ச் 27

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலை மையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் குறித்தும், அவர் அடுத்த தேர்தலில் சு.கவின் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுவாரா என்றும் ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாகக் கேள்வி எழுப்பியதால் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடளுமன்ற உறுப்பினரு மான அநுர பிரியதர்ஷன யாப்பா கடும் கோப மடைந்தார்.

ஏன் தொடர்ச்சியாக அந்தக் கேள்வியையே கேட்கின்றீர்கள் என ஊடக வியலாளர்களை ஒரு சில நொடிகள் கடிந்துவிட்டு, பின்னர் தன்னைச் சுதாகரித் துக்கொண்டு மீண்டும் புன் னகைத்தவாறே பதிலளித்தார். (வ–சி)





"குறை நிறை பிள்ளை பிறப்பை இலங்கையில் இருந்து இல்லாதொழிப்போம்"

### கர்ப்பிணித்தாய்க்கான

# உத்தம வழிபாடு

## குழந்தை பிரசவிப்பதற்கு அத்தியவசியமான போசனை

நூறு நாள் வேலைத்திட்டத்தினை அர்த்தமுள்ளதாக்கி சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சின் மூலம் செயற்படுத்துகின்ற

**கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூபா 20,000/- பெறுமதியான போசாக்கு பொதியினை வழங்கும் யாழ். மாவட்ட ஆரம்ப நிகழ்வு**





சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்
**கௌரவ திருமதி ரோசி சேனாநாயக்க**
அவர்களின் அழைப்பின் பிரகாரம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரதமர்
**கௌரவ திரு ரணில் விக்ரமசிங்க** அவர்களின்
தலைமையில்

மகளிர் விவகார பிரதி அமைச்சர்
**கௌரவ திருமதி விஜயகலா மகேஸ்வரன்** அவர்களின்
பங்களிப்புடன்

**வீரசிங்கம் கேட்போர் கூடத்தில்
27. 03. 2015 ம் திகதி மு.ப 10.00
மணிக்கு நடைபெறவுள்ளது**

ළමා කටයුතු අමාත්‍යාංශය
சிறுவர் விவகார அமைச்சு
**Ministry of Child Affairs**

# இந்தியா – கட்டார் நாடுகளிடையே ஒப்பந்தங்கள் கைச்சாத்து



டில்லி,மார்ச் 27
இரு நாடுகளின் சிறைச்சாலைகளிலும் உள்ள கைதிகளைத் திருப்பி அனுப்புதல் உள்ளிட்ட முக்கிய 6 ஒப்பந்தங்கள் இந்தியா–கட்டார் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளன.
கட்டாரின் மன்னர் தமீம் பின் ஹமது அல் தானி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நேற்றுமுன்தினம் டில்லியில் சந்தித்துப் பேசியுள்ளார். அந்தச் சந்திப்பின் போது இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவு குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், இருநாடுகளுக்கும் இடையே 6 முக்கிய ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட்டுள்ளன.
வெவ்வேறு குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட 96 இந்தியர்கள் கட்டார் சிறைகளிலும், அதே போன்று, கட்டாரைச் சேர்ந்த கைதிகளும் உள்ளனர். இரு நாடுகளும் பரஸ்பர அடிப்படையில் அனைத்துக் கைதிகளையும் சிறைகளிலிருந்து சொந்த நாடுகளுக்குத்திருப்பி அனுப்புவது என்றும், குறித்த கைதிகளுக்கு மீதமுள்ள தண்டனைக் காலத்தை அவர்களது சொந்த நாடுகளில் வழங்குவதற்கு அனுமதிப்பது தொடர்பாகவும் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
அதேவேளை, கட்டாரில் தகவல் தொழில்நுட்பத்துறையின் கீழ் மேற்கொள்ளப்படும் இந்திய முதலீடுகளை அதிகரிப்பதற்கும், இரு நாடுகளுக்கும் இடையே வானிலை, கடல் ஆராய்ச்சி தொடர்பான ஒருங்கிணைப்பு, பிரசார்பாரதி மற்றும் கட்டார் ஊடகக் கழகம் இடையேயான தகவல் பரிமாற்றம் உள்ளிட்ட ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன.
புதுடில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில், பிரதமர் நரேந்திர மோடி, கட்டார் மன்னர் ஷேக் தமீம் பின் ஹமது அல்–தானி ஆகியோரது முன்னிலையில் குறித்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.
இதேவேளை – இந்தியாவுக்குத் தேவைப்படும் திரவ இயற்கை எரிவாயுவில் 86 சதவீதம் கட்டாரில் இருந்து பெறப்படுகிறது. இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக மதிப்பு ஒரு வருடத்துக்கு ஆயிரத்து 600 கோடி அமெரிக்க டொலர்களாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(14)

# இந்தியர்களை நாடு திரும்ப அறிவுறுத்து

டில்லி,மார்ச் 27
அரபு நாடுகளில் ஒன்றான யேமன் நாட்டில் பணிபுரியும் இந்தியர்கள் அந்த நாட்டை விட்டு வெளியேறித் தாயகம் திரும்ப வேண்டும் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு நேற்றுமுன்தினம் புதன்கிழமை அறிவித்துள்ளது.
யேமன் நாட்டின் ஜனாதிபதி மற்றும் ஏனைய பிரமுகர்கள் உள்ளிட்டோரைக் குறி வைத்து ஷியா பிரிவுப் பயங்கரவாதிகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். யேமனில் நடைபெற்று வரும் தாக்குதல் சம்பவங்களால் அந்த நாட்டில் பாதுகாப்பு வலுவற்றுக் காணப்படுகிறது. எனவே அங்கு பணிபுரியும் இந்தியர்கள் அங்கிருந்து தாயகம் திரும்ப வேண்டும்.
இந்த அறிவித்தலை மத்திய அ[illegible] தற்போது மூன்றாவது தடவையாக வெளியிட்டுள்ளது. அதிகமான இந்தியர்கள் பணிப்பெண்களாகப் பணி புரிவதால் அவர்கள் அங்குள்ள சூழலின் தீவிரத்தைப் புரிந்து கொண்டு தாயகம் திரும்ப வேண்டும். இந்தியர்கள் தாயகம் திரும்புவதற்கு ஏதுவாக அந்த நாட்டில் உள்ள இந்தியர்களுக்கு உதவுவதற்காக சனா நகரில் உள்ள இந்தியத் தூதரகத்தில் உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் வெளியுறவுத் துறை அமைச்சு அறிவித்துள்ளது.
(14)

## வாஜ்பாய்க்கு பாரத ரத்னா விருது




டில்லி,மார்ச் 27
முன்னாள் இந்தியப் பிரதமர் வாஜ்பாய், மறைந்த சுதந்திரப் போராட்ட வீரர் மதன் மோகன் மாளவியா ஆகியோருக்கு நாட்டின் உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது வழங்கப்படும் என்று கடந்த டிசெம்பர் மாதம் மத்திய அரசு அறிவித்திருந்தது.
இதற்கமைவாக வாஜ்பாய்க்கான 'பாரத ரத்னா' விருது, நாளை வழங்கப்படவுள்ளது. வாஜ்பாய் உடல்நலக் குறைவு காரணமாக, வீட்டில் ஓய்வுவெடுத்து வருவதால், அவரது வீட்டுக்குச் சென்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அவருக்குரிய அந்த விருதை வழங்கவுள்ளார். அதேபோன்று மதன்மோகன் மாளவியாவுக்கு எதிர்வரும் 31ஆம் திகதி பாரத ரத்னா விருது வழங்கப்படும். 1954 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டு வரும் இந்த பாரத ரத்னா விருதுகள் இதுவரை 45 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன.
(14)



திருவனந்தபுரம் சபரிமலை ஐயப்பன் ஆலயத்தின் பங்குனி உத்தர திருவிழாவின்போது பல்வேறு பகுதிகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்குபற்றினர். (14)

# உலகத்தைச் சுற்ற தயாராகிறார் மோடி



டில்லி,மார்ச் 27
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரான்ஸ், ஜேர்மன்,கனடா ஆகிய நாடுகளுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 நாள்கள் சுற்றுப் பயணங்களை ஆரம்பிக்கவுள்ளார்.
வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, இந்தியாவுக்கு முதலீடுகளைக் கவர்ந்து வருவதில் ஆர்வம் காட்டிவரும் பிரதமர் மோடி, அடுத்த மாதம் பிரான்ஸ், ஜேர்மன், கனடா ஆகிய 3 நாடுகளுக்குச் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளார்.
அந்தப் பயணங்களின்போது, அந்த நாடுகளில் உள்ள தொழிலதிபர்களைச் சந்தித்து 'மேக் இன் இந்தியா' என்னும் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின் கீழ் தொழில் தொடங்க முன் வருமாறு தொழிலதிபர்களுக்கு அழைப்பு விடுக்கவுள்ளார்.
அந்தப்பயணங்களில் முதலில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி பிரான்ஸ் நாட்டுக்குச் சென்று அந்த நாட்டின் ஜனாதிபதி பிராங்கோயில் ஹாலண்டேயுடன் இருதரப்புப் பேச்சுக்களை நடத்தவுள்ளார். அதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி ஜேர்மன் நாட்டுக்குச் சென்று அந்த நாட்டின் பெர்லின் நகரில், அந்த நாட்டின் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலுடன் பேச்சில் ஈடுபடுவார். அதனைத் தொடர்ந்து அந்த நாட்டின் ஹனோவர் நகரில், 'ஹனோவர் மெஸ்ஸி 2015' என்னும் வர்த்தகக் கண்காட்சியில்பங்கு பற்றவுள்ளார்.
ஜேர்மன் நாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி கனடாவுக்குச் செல்லவுள்ளார். அந்த நாட்டின்றொரண்டோ நகரில்கனடா வாழ்இந்தியர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வரவேற்பு நிகழ்விலும் கலந்துகொள்ளவுள்ளார்.
பிரதமர் மோடியின் அந்தச் சுற்றுப் பயணங்கள் 8 நாள்கள் நடைபெறும் எனவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.
(14)

# காத்திருக்கும் ஆபத்து



லண்டன்,மார்ச் 27
பிரிட்டனில் இன்னும் சில வருடங்களில் காசநோய் தாக்கும் அபாயம் உள்ளதாக அந்த நாட்டின் நாடாளுமன்றம் எச்சரித்துள்ளது.
பிரிட்டனின் நாடாளுமன்றக் குழுவினர், காசநோய்த் தாக்கம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை ஒன்றை அண்மையில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.
அந்த அறிக்கையில், எந்த மருந்துக்கும் கட்டுப்படாத கொடிய காசநோய் பரவவுள்ளது. அதனால் இன்னும் 35 வருடங்களில் காசநோயால் உலகம் முழுவதும் 7 கோடியே 50 லட்சம் பேர் உயிரிழக்கலாம். மேலும் அந்த நோயின் தாக்கம் காரணமாக உலகின் பொருளாதாரம் ஒரு சதவீதம் அதாவது, ஐரோப்பிய நாடுகளில் ஒரு வருட உற்பத்திகள் பாதிக்கப்படும் எனவும், அதனால் காசநோய் தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
(14)

# சவூதி இளவரசரின் காரைத் தொட ஆயிரம் அமெரிக்க டொலர்





ரியாத், மார்ச் 27
முழுமையாக வைரங்களால் இழைக்கப்பட்ட சவூதி இளவரசரின் காரைத் தொட்டுப்பார்ப்பதற்கு ஆயிரம் டொலர்கள் கட்டணம் அறவிடப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது. சவூதி அரேபியா நாட்டின் இளவரசரான அல்வாலித் இன் டலால், உல்லாசம், கேளிக்கை மற்றும் பொழுது போக்கு ஆகியவற்றில் அதீத ஈடுபாடு கொண்டவர். அத்துடன் உலகின் விலையுயர்ந்த கார்களை வாங்கிச் சேகரிப்பதிலும் அதிக ஆர்வம் உடையவர். இவ்வாறு அதிநவீனமானதும் விலையுயர்ந்ததுமான 37 கார்களைத் தமது அரண்மனை வாசலில் நிறுத்தி வைத்துள்ளார் இளவரசர் அல்வாலித் இன் டலால். 38 ஆவது காராக முற்றுமுழுதாக வைரத்தால் இழைக்கப்பட்ட கார் ஒன்றைத் தயார்ப் படுத்தியுள்ளார். 48 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள அந்தக் காரைத் தற்போது கண்காட்சிக்கு நிறுத்தியுள்ளார். கண்காட்சிக்கு வருகை தருவோர் அந்தக் காரின் அருகில் நின்று ஒளிப்படம் எடுக்கவும், தொட்டுப் பார்க்கவும் ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வழங்க வேண்டும் எனவும் கண்காட்சி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.
(14)

# லீ குவான் யூ உடலுக்கு ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி



சிங்கப்பூர், மார்ச் 27

'சிங்கப்பூரின் தந்தை' மற்றும் 'நவீன சிங்கப்பூரின் சிற்பி' என்று அழைக்கப்படும் முன்னாள் பிரதமர் லீ குவான்யூ உடல்நலக்குறைவு காரணமாக கடந்த திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார். அவரது மறைவினால் சிங்கப்பூரில் 7 நாள்கள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் அவரது பூதவுடலுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்கு வசதியாக லீ குவான் யூவின் உடல் சிங்கப்பூரின் நாடாளுமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

லீயின் உடல் மீது சிங்கப்பூர் நாட்டின் தேசியக்கொடி போர்த்தப்பட்டுள்ளது. அத்துடன் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து லீ குவான் யூவின் பூதவுடலுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அரச மரியாதையுடன் அவரது இறுதிச் சடங்கு நடைபெறவுள்ளது. (14)

# விபத்துக்குள்ளான விமானத்தின் முதலாவது கறுப்புப் பெட்டி மீட்பு





பாரிஸ்,மார்ச் 27


ஸ்பெயினின் பார்ஸிலோனா நகரிலிருந்து 150 பேருடன் கடந்த செவ்வாய்க்கிழமை புறப்பட்ட விமானம் பிரான்ஸில் மலைப் பகுதி ஒன்றில் விழுந்து நொறுங்கியது. தற்போது அந்த விமானத்தின் முதலாவது கறுப்புப் பெட்டியை மீட்புப் படையினர் பத்திரமாக மீட்டுள்ளனர்.

அந்த விமானத்தில் பயணம் செய்த 150 பேரும் உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட முதல் கறுப்பு பெட்டியில் திடுக்கிடும் தகவல்கள் பதிவாகியுள்ளதாக பிரான்ஸ் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் விமானத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மலைப்பகுதி முழுவதும் சிதறிக்கிடக்கலாம் எனவும் மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர். இதற்கிடையே உயிரிழந்த பாடசாலை மாணவர்களுக்கு ஜேர்மன் பாடசாலை மாணவர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி மௌன அஞ்சலியைச் செலுத்தியுள்ளனர்.

# நைஜீரியாவில் 506 பேர் கடத்தல்

## போகோஹறம் தீவிரவாதிகள் அட்டூழியம்



அபுஜா,மார்ச் 27

நைஜீரியாவில் பெண்கள் மற்றும் குழந்தைகளை போகோஹறம் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நைஜீரியாவில் தனி நாடு கோரி வரும் போகோஹறம் தீவிரவாதிகள் தொடர்ந்து அரசுக்கு எதிராக பல்வேறு அட்டூழியங்களை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் டமாஸ்க் நகருக்குள் நேற்று முன்தினம் புகுந்த தீவிரவாதிகள் அங்கு இருந்தவர்களை நோக்கித் திடீர்த் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். அதன்போது 50 பேர் உயிரிழந்துள்ளனர். அதன் பின்னர் இளம்பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட 506 பேரைத் தீவிரவாதிகள் கடத்திச்சென்றுள்ளனர்.

நைஜர் மற்றும் சாத் இராணுவத்தால் கடந்த மாதம் தீவிரவாதிகளிடம் இருந்து மீட்கப்பட்டவர்களைத்தான், மீண்டும் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன. தற்போது கடத்தப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கையில் அந்த நாட்டு இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

நைஜீரியாவின் வடக்குப் பகுதியைக் கைப்பற்றியுள்ள போகோ.ஹறம் தீவிரவாதிகள், அங்கு ஒரு குறிப்பிட்ட அரசை அமைப்பதற்காகத் தொடர்ந்து நாசவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் மாணவிகள் 200 பேரைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர். தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் நைஜீரிய இராணுவத்துடன் அண்டை நாடான சாத், நைஜர் நாடுகளின் இராணுவ வீரர்களும் ஈடுபட்டுள்ளனர். (14)

# பாகிஸ்தானில் 30 தீவிரவாதிகள் சாவு

பாகிஸ்தானில் போர் விமானங்கள் நடத்திய ஏவுகணைத் தாக்குதல் சம்பவங்களின் போது 30 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் வடமேற்கு கைபர் பகுதி, தீவிரவாதிகளின் சொர்க்கபுரியாக உள்ளது. அங்கு சிபா மாவட்டத்தில் தலிபான் தீவிரவாதிகளுடன் கரம் கோர்த்துள்ள லஷ்கர், இஸ்லாம் தீவிரவாதிகளைக் குறிவைத்து பாகிஸ்தான் போர் விமானங்கள் நேற்று ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தின. அந்தத் தாக்குதல் சம்பவங்களின் போது 30 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் உளவு அமைப்புக்கள் வெளியிட்டுள்ள இந்தத் தகவல்களை லஷ்கர், இஸ்லாம் தீவிரவாத அமைப்பு மறுக்கவும் இல்லை. உறுதிப்படுத்தவும் இல்லை. வான் வழித் தாக்குதல் நடத்திய இடம், கைபர் மாகாணத்தின் எல்லையை ஒட்டி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

மகாகவி பாரதி: வீழ்வோம் என நினைத்தாயோ..... சித்திரையில் ஆரம்பம்




/அணிக்கு 5 பேர், பதிலாளிகள் இருவர் மட்டும். / காலணி உட்பட சீரான உடை கட்டாயம்./
/ அனுமதிக் கட்டணம் 250/= / அணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட மட்டத்தில் ஆட்டங்கள்./

அகவையில் உதயன்

விண்ணப்பங்களையும் போட்டி விதிகளையும் உதயன் பத்திரிகையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

# நாடகக் கலையின் சிறப்பினை உணர்த்தும் உலக நாடக தினம்

**இன்று சர்வதேச நாடக தினமாகும்**

எஸ்.ரி.குமரன்
ஆசிரியர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



நாடகக் கலையானது சக்திமிக்க கலை வடிவமாக விளங்குகின்றது. நாடகமானது காலத்தின் கருத்தியலுக்கு அமைவாக வெளிப்பாட்டையும் தன்மையினையும் கொண்டு விளங்குகின்றது. கலை என்பது காலத்தின் கண்ணாடி என்னும் வகையில் நாடகமும் அதன் காலத்தை பிரதிபலிக்கும் கலைவடிவமாக விளங்கு கின்றது. காலத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் வெளிப்பாடடைகின்ற கலைவடிவங்கள் காலத்தால் நீடித்து வாழ்கின்றன. அவ்வகையில் நாடகக் கலையும் தன் பங்கினை தேவை கருதி ஆற்றுகின்ற கலைவடிவமாக விளங்குகின்றது.
நாடகக் கலையானது மனிதர்களோடு பின்னிப்பிணைந்துள்ள கலைவடிவமாகும் இயற்கையிலிருந்து இயற்கையின் சூட்சுமங்களை தேடல் செய்து அவற்றுக்கிடையிலான காரணகாரியத் தொடர்புகளை விளக்கிக் கொண்டு மனிதகுல மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் பிற துறைகளைப் போல நாடகக் கலையும் உயிர்த் துடிப்புள்ள மனித உரு மூலம் மனிதனது உணர்வுகளுக்கு அவன் சார் நடத்தைகளுக்குமான தொடர்புகளை சரியாக புடம் போட்டு அவன் வாழ்கின்ற சமூகத்தின் பின்புலத்தினை உள்வாங்கிக் கொண்டு கலைக்குரிய வளர்ச்சியோடு அதனை விளக்கியும் வியாக்கியானித்தும் மனித குலத்தை வளர்ச்சி பெறச்செய்கின்றது.
மனிதனை மனித உரு மூலம் விளங்கிக்கொள்வதற்கு இக்கலை பயன்படுவதனால் பிற கலைகளை விட நாடகக்கலையானது மனிதர்களோடு மிக நெருங்கிய இறுக்கமான ஊடாட்டமுள்ள கலைவடிவமாக விளங்குகின்றது.
இந் நாடகக் கலைமூலம் சமூதாதய விழிப்புணர்வு சார் செயற்பாடுகள் சமூக மகிழ்வழிப்பு செயற்பாடுகள் போண்றவற்றினை பயனுள்ள வகையில் சமூகப் பயன்பாடுடையதாக ஆற்றமுடிகின்றது. இக்கலை வடிவமானது மிகவும் சக்தி மிக்க கலைவடிவமாக விளங்குகின்றது. பிரதேசம் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் அவற்றினுடைய பண்பாட்டு பின்புலங்களினை பிரதி பலிக்கின்ற வகையிலும் சமூகத்தினுடைய தேவையினை நிறைவு செய்கின்ற வகையிலும் நாடகக் கலையானது பல்வேறுபட்ட வடிவங்களில் வெளிப்படுகின்றது.



சக்தி மிக்க கலைவடிவமான நாடகக் கலையின் சிறப்புக்கருதி வருடாந்தம் மார்ச் மாதம் 27 ஆம் நாள் உலக நாடக தினமானது சிறப்பாக பல்வேறு நாடுகளில் கொண்டாடப்பட்டு வருகின்றது. உல்க நாடக தினமானது ஏன் ஆரம்பிக்கப்பட்டது, அதன் நோக்கம் என்ன என்பது பற்றி சிந்தித்தல் ஒவ்வொரு அரங்காளிகளினதும் முக்கிய கடனாக விளங்குகின்றது. இவ் உலக நாடக தினத்தின் நோக் கம் கருதி சிந்தித்தல் வேண்டும்.
1961 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் சர்வதேச அரங்க அமைப்பின் 9 வது ஒன்றுகூடலாக கெல்சிங், வியன்னா ஆகிய இடங்களில் சர்வதேச அரங்கத் திட்டம் உருவாக்கப்பட்டது. சர்வதேச அரங்கத் திட்டம் என்னும் சொல்லுக்கு மாற்றீடாக அர்விகிவிமா என்பவரால் உலக நாடக தினம் என்பது முன்மொழியப்பட் டது. எனினும் 1962 இல் பரிசில் பங்குனி 27 ஆம் திகதியே நடை முறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.
இந்த உலக நாடக தினமானது மக்களிடையே சமாதானத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. ஆற்றுகைக் கலைகளின் சக்தியை மக்கள் முன்னிலையில் வெளிக்கொண்டு வருவதற்கு அரங்கக் கலைஞர்களாலும் மக்களாலும் இவ் உலக நாடக தினமானது கொண்டாடப்பட்டு வருகின்றது. உலக நாடக தினமானது உருவாக்கப்பட்டதன் நோக்கினை நிறைவு செய்யும் வகையில் சர்வதேச ரீதியில் இவ் விழாவானது முக்கியத்துவம் கருதி கொண்டாடப்பட்டு வருகின்றது.
இவ் உலக நாடக தினனமானது நடைபெறுவதன் நோக்கமாக பின் வரும் அம்சங்களினை குறிப்பிடலாம்
1. ஆற்றுகைக்கலையின் முக்கியத்துவத்தையும் அதன் பயில்வையும் சர்வதேச ரீதியில் பரிமாறிக் கொள்ளவும் ஊக்குவித்தல்
2. அரங்கக்கலைஞர்களுக்கு இடையில் கூட்டுணர்வை உருவாக்குவதிலும் வளர்ப்பதிலும் ஆக்கத் திறன் மீதான அக்கறையை விருத்தி செய்தல்
3. இக்கலைப்படைப்பு மீதான அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் விழிப்புணர்வுடன் உருவாக்குதல்
4. இந்நிகழ்வில் பங்கு கொள்வதன் மூலம் மக்களிடையே ஆழமான புரிந்துணர்வுக்கும் பங்கு கொள்ளலை வலுப்பெறச்செய்வதற்கும் முனைப்பூட்டுதல் ஆகிய அம்சங்களினை கொண்டுள்ளது.
காலதேச செய்திப்பரிமாற்றம் பொதுவிடங்களைகலந்துஆலோசிப்பதற்கான பேச்சு வழக்கு முறை வட்ட மேசை மாநாடு போன்ற வேறுபட்ட முயற்சிகளுக்காக சர்வதேச விழாவாக ஒருநாள் அல்லது ஒருவாரம் அல்லது ஒரு மாதம் வரை இவ் விழா கொண்டாடப் படுகின்றது. இதற்கு ஜப்பான் போன்ற நாடுகள் சான்று பகர்கின்றன.
இவ்வகையில் அரங்க ஆர்வலர்களால் அனுஷ்டிக்கப்படுகின்ற உலக நாடக தினமானது எமது நாட்டைப் பொறுத்த வரையிலும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகின்றது. எமது பிரதேசத்தைப் பொறுத்த வரையில் வலிதெற்கு பிரதேசசபையின் சுன்னாகம் பொது நூலகமானது 2008 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக உலக நாடக தினத்தை வருடாந்தம் சிறப்பாகக் கொண்டாடிவருகின்றது. இதே போன்று சமூக நிறுவனங்கள் அரங்கு சார் நிறுவனங்கள் பாடசாலைகள் போன்றனவும் தமது இயலளவிற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் இவ் உல்க நாடக தினத்தை சிறப்பாக கொண்டாடி வருகின்றன. இவ்உலக நாடகதின நிகழ்வுகளின் ஊடாக பிரதேச நாடக வடிவங்கள் பேணப்படுவதுடன் சமூகத்தின் தேவைகருதிய விழிப்புணர்வு செயற்பாடுகளினையும் நாடகம் என்கின்ற கலை வடிவத்தின் ஊடாக அரங்க நிறுவனங்களும் அரங்காளிகளும் மேற்கொண்டு வருகின்றமை காலத்தின் தேவைகருதிய சிறப்பிற்குரிய விடயமாக விளங்குகின்றது.
சமுதாய வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் கலை வடிவமான நாடகக் கலையின் சிறப்பினை உணர்த்தும் தினமாக உலக நாடக தினமானது அமைகின்றது. இவ்வகையில் எமது பிரதேசத்தைப் பொறுத்த வரை சிறப்பாக அனுஷ்டிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த தினமாக உலக நாடக தினமானது விளங்குகின்றது. இதனடிப்படையில் நாடகக் கலையின் வளர்ச்சி கருதியும் தொடர் இயங்குதலின் அடிப்படை கருதியும் ஆற்றுகைக் கலைஞர்களாலும் அரங்க ஆர்வலர்களாலும் அனுஷ்டிக்கப்படவேண்டிய முக்கிய தினமாக உலக நாடக தினமானது அமைகின்றது.




# நல்லை ஆதீனம் ஸ்தாபித்த நல்லை குருமணி

"கலாபூஷணம்"
இராசையா ஸ்ரீதரன்

**இன்று அன்னாரது 34 ஆவது குருபூசைத்தினம்**

இந்தியாவிலே இருப்பதுபோல நாம் வாழுகின்ற இலங்கையிலும் ஓர் ஆதீனம் அமைக்க வேண்டுமென்று முற்று முழுதாகப் பாடுபட்டு உழைத்த நல்லைக் குருமணி அவர்கள் 1966 ஆம் ஆண்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தை ஸ்தாபித்தார்.
இந்தியாவுக்குச் சென்று மதுரை ஆதீனத்திலே காக்ஷாயம் பெற்றுத் துறவு பூண்டு, ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாசார்ய சுவாமிகளாகி மீண்டும் இலங்கை வந்து நல்லூரிலே இந்த ஆதீனத்தை ஆரம்பித்தார்.
"மணி ஐயர்" என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட இவர் கதாப்பிரசங்கம் செய்தே சைவத்தையும் தமிழையும் வளர்த்த ஒரு புண்ணிய சீலர். கணீரென்ற தமது குரலினாலே அனைவரையும் கவர்ந்திழுக்கும் காந்த சக்தி இவரிடம் உண்டு.
யாழ்.குடா நாட்டிலே இவருடைய பிரசங்கம் நடைபெறாத கோயில்களே இல்லையெனுமளவுக்கு கதாப்பிரசங்கம் செய்தபெருமை வேறு எவருக்குமே கிடையாது.
சங்கீத ஞானமும் 'குரல்வளமும், சமய அறிவும்' நினைவாற்றலும் நிறையப்பெற்ற இவர் இலங்கையின் மட்டுமல்ல இந்தியாவுக்கும் சென்று தொடர் பிரசங்கங்கள் செய்திருக்கிறார்.
இடையிடையே சங்கீத உருப்படிகளையும் அவ்வப்போது அழகாகச் சேர்த்து சங்கீத ரசிகர்களையும் திருப்திப்படுத்துவார். பிரசங்கம் கேட்கத் தொடங்கினால் இடை நடுவில் போக மனம் வராது. கடைசியாக மங்களம் பாடும்வரை அடியார் கூட்டம் அமர்ந்திருந்து இரசிக்கும்.
நல்லூர் முருகன் மஹோற்சவம் தொடங்கிவிட்டால் மணி ஐயருக்குக் கொண்டாட்டம்தான். முன்னாலேயுள்ள முருகன் தண்ணீர்ப்பந்தல் கொட்டகையிலேதான் பிரசங்கம் நடக்கும். 25 நாளும் தொடர் பிரசங்கம். இரவு 9 மணிக்குத் தொடங்கியபிரசங்கம் 11 மணிவரைக்கும் நடைபெறும். யாருமே எழுந்திருக்க மாட்டார்கள்.
இவருடைய கணீரென்ற குரல் நல்லூர் முருகன் ஆலயச் சூழலை ஆக்கிரமித்திருக்கும் பாங்கு சொல்லி முடியாது. "பிரசங்கத்துக் கென்றே பிறந்தவர் மணி ஐயா." என்று மூக்கில் விரல் வைத்து வியக்கும் வண்ணம் கதை சொல்லும் தனித்துவமான பேராற்றல் இவருக்குக் கைவந்த கலையாக மிளிர்ந்தது வியப்பல்ல.
ஆகவே சுவாமிகளுடைய குருபூசையைக் கொண்டாடுவதோடு மட்டும் நின்று விடாமல், அவர் விட்டுச் சென்ற ஆக்கபூர்வமான பணிகளை நாமும் பின்தொடர்ந்து செய்து நன்னிலையடைய நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

# வாசகர் திருமுகம்



## விநாயகரை மூலாதாரத்தில் ஸ்தாபிப்பதே சரியானது

தங்களது 23.03.2015 பத்திரிகையின் வாசகர் திருமுகப் பகுதியில் விளக்கம் தருவீர்களா? என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க பின்வரும் எனது கருத்தை மிகவும் அன்பாக தெரிவிக்க விளைகிறேன்.

அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலயம் பல ஆகம விற்பன்னர்களினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. சர்ச்சைக்குரிய பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டை செய்த காலம் தொடக்கம் இந்த ஆலயத்தில் மூலாலயம் தவிர்ந்த புற ஆலயங்கள் திருத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் சேர்த்த பணத்தை எந்தவிதமாக புசிப்பது என்பது தெரியாமல் எதையோ செய்திருக்கிறார்கள்.

ஆலயமானது பிண்டத்தின் பிரதிபலிப்பாகவும் பிண்டம் அண்டத்தின் பிரதிபலிப்பாக உள்ளது. பிண்டமானது வலது இடது பகுதி என்று இரண்டு பகுதி உள்ளது. இடது பகுதி சக்திக்குரிய இடம் (இருதயம் போன்ற துடிக்கும் அங்கங்கள் இடது பக்கத்திலே உள்ளது) வலது பக்கத்தில் துடிக்கும் அங்கங்கள் ஒன்றுமே இல்லை. நடுவில் இருக்கும் நுரையீரல் மாத்திரம் இரண்டு பக்கத்துக்கும் விரிவுபடுத்தி கழிவுகளை உறிஞ்சி சுத்தப்படுத்தும் தன்மை உள்ளது. எனவே ஆலயங்களின் இடது பக்கத்தில் சக்தி மூர்த்தங்கள் தவிர சிவ மூர்த்தங்கள் ஸ்தாபிக்கப்படக் கூடாது. பஞ்சமுக விநாயகர் சதாசிவனுடைய பிரதிபலிப்பாகும். விநாயகர் ஆலயங்கள் சிவாலயங்கள் ஆகும். சுப் பிரமணியராலயம், அம் பாள் ஆலயங்கள் சக்தி ஆல யங்களாகும். ஓர் ஆலயத்தின் மூலவரை பிராணப் பிரதிஷ்டை செய்கிற நேரத்தில் மூலாதாரத்தில் இருந்து படிப்படியாக உருவேற்றி வருகின்ற சோதியானது கருவூலம் வரைக்கும் சென்று ஸ்தாபிக்கப் பெற்று, பின் வந்த விதமாகவே மூலாதாரத்திலே திரும்பவும் சேர்க்கப்படும்.

விநாயகருக்கு சக்தி வெளித்தோற்றம் இல்லாத வல்லபை ஆகும். வல்லபையின் தானம் சுழுமுனை ஆகும். சுழுமுனையின் இருப்பிடம் மூலாதாரம்.

மேற்கூறியவற்றில் இருந்து க.சிவசுப்பிரமணியம் போன்று பஞ்சமுக விநாயகரை மூலாதாரத்தில் அதாவது ஆலயத்தின் தம்பத்துக்கு முன்னால் பழைமை நிலை போல ஸ்தாபிப்பதுதான் மிகவும் சரியானது என நான் எண்ணுகிறேன்.

*சா.உருத்திரபசுபதி,டச்சுவீதி*
*அளவெட்டி.*

## ஏன் இந்த தேவையில்லாத குழப்பம்?

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் அமைப்பு தொடர்பாக பல அனுபவங்கள் வாய்ந்த சிவாச்சாரியார்களின் கருத்து .அறிந்த பின்னர் உபயகாரர்களுடன் பல கூட்டங்கள் நடத்தியே எம்மால் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இந்த மாதம் முதலாம் திகதி ஆலய சிவாச்சாரியார்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உபயகாரர், வழிபடுவோர், தொண்டர் சபையினர், தர்மகர்த்தாக்கள், ஆலய சிவச்சாரியார்கள் 130 பேர் கலந்து கொண்ட கூட்டம் கூட்டப்பட்டு அதில் 2002 ஆம் ஆண்டு மஹாகும்பாபிஷேகத்தின் போது இருந்தவாறே பஞ்சமுக விநாயகரை 2015 ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தின்போது வீற்றிருக்கச்செய்யவும். அடுத்துவரும் கும்பாபிஷேகத்தின் போது மகா மண்டபத்தை பெரிதாக்கி பஞ்சமுகரை தெற்கு நோக்கி வீற்றிருக்கச் செய்ய ஏகமனதாக முடிவு செய்யப்பட்டு, அடுத்த மாதம் 8ஆம் திகதி மஹா கும்பாபிஷேகம் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.


சிலர் தவறான கருத்துக்களைப் பரப்பி குழப்பம் விளைவிக்க முயற்சி செய்கின்றனர். எம்பெருமான் இனிதே மஹாகும்பாபிஷேகம் நடைபெற துணை நிற்பான் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தயவுசெய்து குழப்பும் நோக்குடன் சரியான விலாசம் இன்றித்தரும் செய்திகளை தங்களது நீதியானதும் நடுநிலையானதும், அனைவரும் விரும்பி வாசிக்கும் தரமான பத்திரிகையில் பிரசுரிக்காதிருக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பத்மநாதன், தலைவர்

*பொ.ஸ்கந்தேஸ்வரன், செயலாளர்.*

### கேலிச் சித்திரம்



## எதிர்க்கட்சித் தலைமைக்கும் பொருத்தமற்றவரா தமிழர்?

நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் விவகாரம் இப்போது பல சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கிறது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டதை அடுத்து இந்தச் சர்ச்சை வெடித்தது. சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அரசின் பக்கம் அமைச்சர்களாக உள்ளமையால், சுதந்திரக் கட்சியின் செயலாளரும் தற்போதைய எதிர்க்கட்சியின் தலைவருமான நிமால் சிறிபாலடி சில்வா அந்தப் பதவியை வகிப்பதற்கு பொருத்தமற்றவராக மாறியிருக்கிறார். இதனால், அந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வேறு ஒருவருக்கு வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக கடந்த சில தினங்களாக நாடாளுமன்றத் தில் கருத்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டமையால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அந்தக் கட்சிக்கு வழங்கமுடியாது என்று நாடாளுமன்றத்தில் அரச தரப்பினர் கூக்குலைட்டு வருகின்றனர். இந்த விடயத்தில் சபாநாயகர் தலையிட்டு, ஒரு உறுதியான் முடிவை மேற்கொள்வார் என்று, அறி விக்கப்பட்டபோதும் சபாநாயகரும் இது விடயத்தில் குழப்பமடைந்தவராகக் காணப்படுகிறார்.

இந்த சர்ச்சை இவ்வாறு இருக்க, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிவிடுமோ என்ற அச்சம் நாடாளுமன்றில் உள்ள பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. தற்போதுள்ள நிலையை ஷ்வத்துப் பார்த்தால், நாடாளுமன்ற விதிமுறைகளின்படி எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வழங்கப்படவேண்டும். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கு மாறும், நாடாளுமன்றில் அரச தரப்பினர் குரல் எழுப்பி வருகின்றனர்.

அவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் பதவியை ஏற்கவேண்டிய நிலை வருமானால், அதனை கூட்டமைப்பு கூடி ஆராய்ந்து முடிவெடுக்கும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் விடயத்தில் முன்னாள் அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன், வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, நிமால் சிறிபாலடி சில்வா ஆகியோரின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா. நாடாளுமன்ற விதிமுறையே எதிர்க்கட்சித் தலைவர் பதவி யாருக்கு என்பதை தீர்மாணிக்கும் என்றும் சம்பந்தன் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபாலவுக்கு வழங்கிய ஆதரவுக்கு நன்றிக் கடனாக எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கூட்டமைப்புக்கு வழங்குவதற்கு மைத்திரி– ரணில் அரசு முயற்சிக்கிறது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகிறார்கள். மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரான தினேஷ் குணவர்த்தனவை எதிர்க்கட்சித் தலைவர் ஆக்குமாறும் அவர்கள் கோரியுள்ளார்கள். எதிர்க்கட்சித் தலைவர் பதவி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டால் சர்வதேச மட்டத்தில் கூட்டமைப்பின் கருத்துக்களும் கூடிய வரவேற்புக் கிடைக்கும் என்றும், எதிர்க்கட்சித் தலைவர் அடுத்த பிரதமர் பதவிக்கு சமமா னவர் என்றும் அரசை அவர்கள் எச்சரித்துள்ளார்கள். கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப் படக்கூடாது என்பதே இவர்கள் மிகவும் உறுதியாக இருக்கிறார்கள்.

அதேநேரத்தில் தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் நிமால் சிறிபாலடி சில்வா, தானே எதிர்க்கட்சித் தலைவர் என்றும் இதனை எவராலும் மாற்றமுடியாது என்றும் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக்கூட தமிழர் ஒருவருக்கு வழங்கக்கூடாது என்பதில் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் பிடிவாதமாய் உள்ள நிலையில், இனப்பிரச்சினைக்குா தீர்வை வழங்குவதற்கு அற்தக் கட்சிகள் எப்படி ஒத்து ழைப்பு வழங்கும் என் பது கேள்விக்குறியே.

எதிர்க்கட்சிதலைவர் பதவிச் சர்ச்சைமூலம் சிங்களக் கட்சிகளின் இனவாதச் சிந்தனை முற்றுமுழுதாக வெளிப்பட்டு நிற்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஒருவேளை, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டால் இந்தச் சிங்களக் கட்சிகள் நாடாளுமன்றத்தில் பெரும் பிரளயத்தையே உருவாக்கிவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

எதிர்கட்சித் தலைவராகக்கூட இருப்பதற்கு தமிழர்கள் தகுதியற்றவர்களா என்று கேட்கிறார்கள் பொது மக்கள்.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெறும் வாய்ப்பந்தல் போடாது செயல்வழியில் காட்டட்டுமே...!

அடுத்த வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் தேசிய அரசே அமைக்கப்படும். அதற்கான முன்அனுபவத்தைப் பெறும் நோக்கத்துடனேயே இப்போதைய தேசிய அரசை உருவாக்கி உள்ளோம் --

அடுத்த மாதம் (ஏப்ரல்) இருபத்தி மூன்றாம் திகதிக்குப் பின்னர் பொதுத்தேர்தல் நடத்தப் படும். தேர்தல் முடிவுற்ற கையோடு புதிய நாடாளுமன்றம் முழுவதையும் தேசிய அரசாக மாற்றுவோம் --

அதனூடாக, நாட்டின் சகல பகுதிகளுக்கும் அபிவிருத்தியைக் கொண்டு செல்வோம் --

இந்தத் தகவலை வெளியிட்டிருப்பவர் வேறு யாருமல்லர், சாட்சாத் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே. அலரிமாளிகையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் வைத்தே, பிரதமர் தாம் உத்தேசித்துள்ள புதிய வியூகத்தை வெளிப்படுத்தினார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் இயங்கும் தேசிய அரசுக்கு முழு அளவில் அதிகாரங்கள் கைக்கு வரும். அப்போது, இருபது நிறைவேற்றுக் குழுக்களை அமைப்போம் --

அத்தோடு, உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சம அந்தஸ்து கிடைக்கும் வாய்ப்பு உண்டாக்கப்படும் -- என்றும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதற்கான முன்னோட்டமாகவே ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களை ஒரே அணியில் உள்ளடக்கிச் செயற்படுகிறோம். நாடாளுமன்றத்துக்குத் தேர்தல் நடைபெற்ற பின்னரும், தேசிய அரசே அமைக்கப் படும்-- என்றும் பிரதமர் விலாவாரியாகத் தெரிவித்திருக்கிறார்.

அத்தகைய ஓர் ஆட்சியியல் முளைத்து மேலெழுமாயின், நாட்டுக்கும் மக்களுக்கும் ஆக்கபூர்வமான பயன்கள் கிடைக்க வழி பிறக்கும். அதில் மாற்றுக்கருத்து இல்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மனதில் முளைத்து எழுந்துள்ள "புதிய சிந்தனை", படிப்பதற்கும் நினைப்பதற்கும் கனதியாகவும் கச்சிதமாகவும் தூரத்தே தெரிகிறது.

அதனை நாட்டின் சகல பிரதேசங்கள், பிராந்தியங்கள், மாகாணங்களிலும் ஏற்றத் தாழ்வு இன்றிச் செயற்படுத்துவதற்கான சீரான, செயலணிகள் நிறுவப்படுவது அவசியமும் இன்றியமையாததும் ஆகும்.

நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும், மாவட்டத்திலும், பிராந்தியத்திலும், பிரதேசத்திலும், கிராமத்திலும் அவற்றின் மூலை முடுக்குகளிலும் வாழும் பிரஜைகளுக்கு, மக்களுக்கு எவ்வகைப் பாகுபாடும் (Discrimination) காட்டாமல், எல்லோரும் இந்த நாட்டின் மன்னர்களே என்பதான சம நிலைக்குக் கொண்டு வரப்படவேண்டும்.

அத்தகைய உண்மையான தார்மீக ஆட்சியை உருவாக்குவதற்கான ஒற்றுமையும், விட்டுக் கொடுக்கும் மனமாற்றமும், அ தொடக்கம் ஃ வரையான வகையறாக்கள் சார்ந்த நல்லெண்ணம் அரசியலாளர்களிடம் ஆட்சியியலாளர்களிடம் மேலோங்கி வளரவேண்டும்.

பெரும்பாலும், மேட்டுக் குடிப் பிரஜைகளான தென்னிலங்கை அரசியல் தலைவர்களிடம் இது குறித்த உணர்வுபூர்வமான மன மாற்றமே, இந்த நாட்டு அரசியலில் முதன்மைத் தேவையாகும்.

வெறும் ஆசாடபூதித்தனம், நாட்டின் வளர்ச்சிக்கும் சகல இன மக்களினது சக வாழ்வுக்கும், அவர்களுக்கான சம அந்தஸ்துக்கும் ஒரு துளியும் உதவாது.

செய்வன திருந்தச் செய்வதே நற்பயன் தரும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அதனை மனதிருத்திச் செயற்பட்டால், அது நாட்டில் நல்லாட்சி மலர மிகப் பெரிய அளவில் உதவும்.

# நாட்டைக் குழப்பிவரும் தெற்கு அரசியல்வாதிகள்

■ ராஜராஜன்



இலங்கைத் தீவின் தற்போதைய அரசியல் நிலைவரங்களைப் பார்க்கும்போது மனதில் குழப்பமானதொரு நிலைதான் உருவாகின்றது. தெற்கு அரசியல்வாதிகள் தமது மனதில் தோன்றுவதை எவ்வித தயக்கமும் இல்லாது வெளியில் தெரிவித்து வருவதால் இந்தக் குழப்பநிலை அதிகரித்து வருகின்றது.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் சிலவற்றைக் குறைப்பதற்கும், சுயாதீனமாகச் செயற்படக்கூடிய ஆணைக்குழுக்களை நியமிப்பதற்கும் வகை செய்யும் விதத்திலும், மேலும் பல முக்கியமான விடயங்களை உள்ளடக்கியதாகவும் 19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றதன் பின்னர் நாடாளுமன்றத்திலும் அதன் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நிலையில் இதற்கு எதிராக மூன்று வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில் 19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேறுவதில் வீணான தாமதங்கள் ஏற்படப் போகின்றன.

இதேவேளை – தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அமர்ந்துவிடக்கூடாது என்பதில் தென்னிலங்கை இனவாதிகள் சிலர் முனைப்புடன் செயலாற்றி வருகின்றனர். இவர்கள் அரசமைப்பையோ அல்லது ஜனநாயக விழுமியங்களையோ சிறிதும் கூட மதிப்பதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கைகள் இரகசியமான முறையில் இடம் பெற்று வருவதாகவும், இதற்கு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய திட்டங்களைத் தீட்டி வருவதாகவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியானவேளையில் கூட அது போன்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. ஆனால் பின்னர் இது தொடர்பாக எந்தவித தகவலும் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில், நாட்டின் குழப்ப நிலை தொடர்பாகச் சிறிதும் அலட்டிக் கொள்ளாத ஜனாதிபதி தமது சீனாவுக்கான பயணத்தை ஆரம்பித்துள்ளார். தற்போது பெரும் இழுபறிநிலையில் காணப்படும் சீன அரசினால் முன்னெடுக்கப்பட்ட கொழும்புத்துறைமுக நகரத்திட்டம் நிரந்தரமாகவே கைவிடப்படுமா? அல்லது புத்துயிர் பெற்று மீண்டும் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப் படுமா? என்பது ஜனாதிபதியின் சீனப் பயணத்தின்போது முடிவு செய்யப்பட்டுவிடும்.



ஜனாதிபதி மைத்திரியும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஒரே கட்சியில் அங்கம் வகிப்பதால் மஹிந்தவை ஓரம் கட்டி வைப்பதில் கடுமையான சிரமங்களை மைத்திரி எதிர்கொண்டு வருகின்றார். மஹிந்தவின் ஆதரவாளர்கள் மீள் எழுச்சிகொண்டு முன்னாள் ஜனாதி பதியை மீண்டும் அரசியலுக்குக் கொண்டு வருவதற்கும் நாட்டின் தலைமைப் பதவியில் அமர்த்துவதற்குமான செயற்பாடுகளில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

பயங்கரவாதத்திலிருந்து சிங்கள மக்களைப் பாதுகாத்த ஒரே தலைவர் மஹிந்ததான். என்ற பரப்புரைகள் பட்டிதொட்டி எங்கும் இடம் பெற்று வருகின்றன. பௌத்த மதகுருமார்களும் மஹிந்தவுக்கு ஆதரவாகப் பரப்புரைகளை மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. தேசிய அரசு என்ற போர்வையின் கீழ் பெருமளவு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சரவையில் இணைக்கப்பட்டுள்ளமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு தர்மசங்கடமான நிலையொன்றையும் தோற்றுவித்துள்ளது.

மேலும் அடுத்து இடம்பெறப் போகும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பிரதமர் வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ களம் இறக்கப் படுவாரென அவரது ஆதரவாளர்கள் தெரிவித்து வருகின்றமை. ஐக்கிய தேசியக் கட்சியினருக்கோ அல்லது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கோ உவப்பான செய்தியாக இருக்கப் போவதில்லை.

மேலும் நாடாளுமன்றத் தேர்தல் இப்போதைக்கு வேண்டாமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும், நாடாளுமன்றத்தைக் கலைத்து உடனடியாகவே தேர்தலை நடத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியினரும் மல்லுக் கட்டுவதைப் பார்க்கும்போது தேசிய அரசு இன்னமும் எத்தனை நாள்களுக்கு நீடிக்கும் என்ற கேள்வி மக்களின் மனங்களில் எழுகின்றது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது இந்த நாட்டின் அரசியல் நிலைவரங்கள் குழப்பமானதொரு நிலைக்குள் இருப்பதையே காண முடிகின்றது.

ஜனாதிபதி மைத்திரியும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஒரே கட்சியில் அங்கம் வகிப்பதால் மஹிந்தவை ஓரம் கட்டி வைப்பதில் கடுமையான சிரமங்களை மைத்திரி எதிர்கொண்டு வருகின்றார். மஹிந்தவின் ஆதரவாளர்கள் மீள் எழுச்சி கொண்டு முன்னாள் ஜனாதிபதியை மீண்டும் அரசியலுக்குக் கொண்டு வருவதற்கும், நாட்டின் தலைமைப் பதவியில் அமர்த்துவதற்குமான செயற்பாடுகளில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

சிங்களமூலம் – உப்புல்
யோசப் பெர்னாண்டோ
(மவ்பிம)
தமிழில் - வீஎஸ்ரீ

# ‘ஜேம்ஸ்பொண்ட்’ பாணியில் இன்றைய இலங்கை அரசியல்

## குட்டையைக் குழப்புகிறார் ரணில்

கசினோ வர்த்தகர் ஜோசிம் விடயத்தில் பிரேமதாஸ அரசு வீழ்ச்சியுற நேர்ந்தது. பிரபல நடிகர் சனத் குணதிலக விடயத்தால் சந்திரிகாவின் அரசு வீழ்ச்சியுற நேர்ந்தது. கசினோ வர்த்தகர் ஜேம்ஸ் பாக்கர் விடயத்தால் மஹிந்த அரசு வீழ்ச்சியுற்றது. தற்போது அர்ஜுன் மகேந்திரன் விடயத்தாலேயே மைத்திரி – ரணில் அரசு வீழ்ச்சியுறவுள்ளது.

அர்ஜுன் மகேந்திரன் பெயரால் வீழ்ச்சியுறப்போவது மைத்திரியின் அரசல்ல, ரணிலின் அரசுதான் என்கிறது ஹெல உறுமய. முகத்தை மேல் நோக்கி வைத்துக்கொண்டு துப்புவது என்பது இதனைத்தான். இந்த அரசு ரணிலின் அரசு மட்டுமல்ல. மைத்திரியினதும், ஹெலஉறுமயவினதும் அரசே. அர்ஜுன் மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநராக நியமிக்க, அரசில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளது ஆலோசனை பெற வேண்டியிருந்த போதிலும், ரணில் அவ்விதம் செயற்படாதது அவரது தவறே. ரணிலின் வேண்டுகோளின் பேரிலேயே மைத்திரி அந்த நியமனத்தை வழங்கியிருக்கக்கூடும். அர்ஜுன் மகேந்திரன் பிரபல நிதித்துறை விற்பன்னர் என்பதால் ரணில் அவரை அந்தப் பதவிக்கு நியமிக்கப் பரிந்துரை செய்திருக்கக் கூடும். சிங்கப்பூரில் உலக நிதிக் கையாள்கை தொடர்பான துறையில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர் அர்ஜுன் மகேந்திரன். அவரது தந்தையார் சாலி மகேந்திரன் சீனா, தாய்லாந்து நாடுகளில் இலங்கைத் தூதுவராகப் பதவி வகித்தவர். 2002 ரணிலின் அரசில் ஐ.நா. சபையின் இலங்கைக்கான தூதுவராகப் பணியாற்றியவர்.

ரணிலின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான ஆலோசகராகவும் சாலி மகேந்திரன் இருந்ததால் அர்ஜுன் மகேந்திரன் ரணிலுக்கு மிக நெருங்கிய ஒருவராக இருந்து வந்துள்ளார். ராஜபக்ஷ அரசால் நலிவடையச் செய்யப்பட்ட இலங்கை மத்திய வங்கியை மீண்டும் நிலை நிறுத்த வைக்கவே ரணில் அவருக்கு ஆளுநர் நியமனம் வழங்க முடிவெடுத்திருக்கக்கூடும். ஆனால் ராஜபக்ஷ தரப்பினர் நிவாட் அஜித் கப்ராலை மத்தியவங்கியின் ஆளுநராக்கி வங்கியை நலிவுறச் செய்ததில், அர் ஜுன் மகேந்திரனது மருமகனான அலோசியஸ்ஸுக்கும் பங்குண்டு என்பது அரச தரப்புக்குள்ளிருந்து வெளிவந்துள்ள குற்றச்சாட்டாகும்.

### ஜேம்ஸ் பொண்ட் பாணியில்

அலோசியஸ் தரப்பினர் ராஜபக்ஷ தரப்பினருடன் சேர்ந்து அஜித் கப்ராலின் தோளில் ஏறி அரச முறிகள் தொடர்பாக ஜேம்ஸ் பொண்ட் பாணியில் செயற்பட்டபோது எவரொருவருமே வாய் திறக்கவில்லை. தற்போது மாமன் மத்திய வங்கி ஆளுநராகப் பதவியேற்றதையடுத்து மருமகன் அலோசியஸின் முன்னைய செயற்பாடுகள் வெளிவந்துள்ளன. மருமகனது ஜேம்ஸ் பொண்ட் பாணியிலான செயற்பாடுகள் குறித்து அறியாத நிலையிலா ரணில், மகேந்திரனை மத்தியவங்கி ஆளுநராக நியமித்துள்ளார் என்ற கேள்வியின் முன்னால் ரணிலின் கௌரவம் அடிபட்டுப்போகிறது. உண்மையில் அவன்காட் நிறுவனம் தொடர்பிலான செயற்பாடு போன்று, இந்த வங்கி முறிகள் குறித்த விடயத்திலும் அரசுக்குள் பிரிவினையை ஏற்படுத்தி, இந்த அரசு வேண்டவே வேண்டாமென பொதுமக்களை வெறுப்படைய வைக்கும் திட்டமே இது.


அவன்காட் நிறுவனத் தரப்பு, அரச தரப்பு அமைச்சர்கள் ஒரு சிலரை வைத்து, அவர்களூடாகத் தனக்கு நற்சான்றிதழை ஈட்டிக்கொண்டு, அந்த அமைச்சர்களுக்கும், தம்மை விமர்சிக்கும் அமைச்சர்களுக்கும், ஜே.வி.பி., ஹெலஉறுமய தரப்புக்களுக்கும் அள்ளி வைக்கிறது. அதே சமயம் அர்ஜுன் மகேந்திரனின் மருமகன் அலோசியஸ், ரணில், ஜே.வி.பி., ஹெல உறுமய தரப்புக்களை ஒன்றுடன் ஒன்று மோத வைத்து, தற்போது ரணிலையும் மைத்திரியையும் மோத வைப்பிக்கும் ஜேம்ஸ் பொண்ட் வேலையைக் கனகச்சிதமாக மேற்கொண்டு வருகிறார்.



ராஜபக்ஷ தரப்பினரைப் பாதுகாக்கும் விதத்தில் ரணில் செயற்படுவதாக, சம்பிக்க, ராஜித தரப்பினர் நம்புகின்றனர். அதே போன்று, அவன்காட் மிதக்கும் ஆயுதக்கப்பல் விவகாரம், ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவன விவகாரங்களில் ஊழல் குற்றச்சாட்டுக்களை மூடி மறைக்க ரணிலின் அரசின் அமைச்சர்கள் முன்வருவதைக் காண சம்பிக்க, ராஜித தரப்பினரின் சந்தேகம் மேன்மேலும் வலுக்கிறது. இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் உரையாற்ற மோடி சென்றவேளை, நாமல் ராஜபக்ஷவை மோடிக்கு அறிமுகம் செய்துவைத்து ரணில் பழைய காயத்துக்கு மிளகாய்த் தூள் தடவி வைக்கிறார்.

### பலரும் எதிர்ப்பு

ராஜித சேனாரத்ன, முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலேயே அர்ஜுன் மகேந்திரனது நியமனத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டார். சம்பிக்க ரணவக்கவும், ஹர்சா டி சில்வாவும் கூட அது குறித்து அதிருப்தி தெரிவித்தனர். இவற்றையெல்லாம் பொதுமக்கள் அதிருப்தியுடன் விமர்சிக்கின்றனர். இந்த வங்கி முறிகள் விடயம் எதிர்க்கட்சியினராலன்றி, அரசுக்குள் இருக்கும் தரப்பினராலேயே பகிரங்கத்துக்குக் கொண்டு வரப்பட்டதொன்று. இந்த ஊழலை உள்ளுக்குள்ளேயே விசாரணை செய்து தண்டனை வழங்கியிருந்தால், நல்லாட்சி வேண்டி வாக்களித்த 62 லட்ச வாக்காளர்கள் வெட்கித் தலைகுனிய நேர்ந்திருக்காது. அரசுக்குள் இவ்விதம் ‘ஜேம்ஸ் பொண்ட்’ காரர்கள் பொலிஸ் – திருடன் விளையாட்டில் ஈடுபடும் அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவோ, மாகாணசபைகளின் உறுப்பினர்களை சந்தித்து பொதுத்தேர்தலில் போட்டியிட அழைப்பு விடுத்து வருகிறார். கூடவே ரணிலும், ஐ.தே.கட்சிக்காரர்களும் மஹிந்தவுக்கு ‘ஒக்சிஜன்’ வழங்கி சுதந்திரக்கட்சியைப் பிளவுபடுத்தி பலம் பெற முயற்சிக்கின்றனர். சம்பிக்க தரப்பினர் ஐ.தே.கட்சியை நலிவுபடுத்தி சுதந்திரக்கட்சிக்கு அரசமைக்க வாய்ப்பேற்படுத்திக் கொடுத்து தமக்கு வாக்குகளை அதிகரிக்க வைக்க முனைகின்றனர்.



### சம்பிக்க ராஜித தரப்பினர் அச்சம்

சம்பிக்க மற்றும் ராஜித தரப்பினர் பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சிக்கு அரசமைக்க வாய்ப்பு ஏற்படுமானால் தங்களது அமைச்சுப் பதவிகளை இழக்க நேரிடுமென அஞ்சுகின்றனர். அது நியாயமானதே. ராஜபக்ஷ தரப்பைத் தோற்கடிக்க அவர்கள் மேற்கொண்ட முயற்சி இலேசான தொன்றல்ல. அதன் மூலம் ஐ.தே.கட்சியை ஆட்சிபீடம் ஏற்றி வைத்து, சில மாதங்கள் அமைச்சர்களாக இருந்து விட்டு வீடு செல்ல அவர்கள் தயாராக இல்லை.

மைத்திரியின் நிறைவேற்று அதிகாரங்கள் அகற்றப்படுமானால் மைத்திரியாலும் தமக்கு உதவ இயலாதென்பதை அவர்கள் நன்கறிவர். அதேவேளை, ஐ.தே.கட்சியில் போட்டியிட அவர்கள் விரும்பவில்லை. மைத்திரியின் தலைமையிலான சுதந்திரக் கட்சியில் போட்டியிடுவதே அவர்களது இலக்கு. மஹிந்தவைத் தோற்கடிக்க முன்நின்றவர்கள் என்பதால் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் தமக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்ற அச்சமும் அவர்கள் மத்தியில் உண்டு. இதனாலேயே மைத்திரியைப் பலவானாக்கி சுதந்திரக்கட்சி அரசொன்றை உருவாக்க அவர்கள் முயல்கின்றனர்.

இதனாலேயே அவர்கள் பொதுத் தேர்தலில் அன்னம் சின்னத்தில் போட்டியிட ரணிலுக்கு ஆலோசனை வழங்கியபோதிலும் ரணிலும் ஐ.தே.கட்சியினரும் அதனை விரும்பவில்லை. அன்னம் சின்னத்தில் போட்டியிட முடிந்தால் சம்பிக்க, ராஜித தரப்பினர் வெற்றி உறுதியாகும். ஆனால் சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தி வைத்து சம்பிக்க, ராஜித தரப்பினரை இணைத்துக் கொள்ளாமல் போட்டியிட்டால்கூட ஐ.தே.கட்சியால் பெரும்பான்மைப் பலம் ஈட்ட முடியுமென ரணில் கணக்குப் போடுகிறார். அதேவேளை அன்னம் சின்னத்தில் போட்டியிடும் யோசனையை ரணில் மறுத்ததற்காக என்றல்லாது, சுதந்திரக்கட்சியைப் பிளவுபடுத்தும் நோக்கிலேயே மஹிந்தவை ரணில் அணைத்துச் செயற்பட முனைகிறார் என்ற சந்தேகம் காரணமாகவே சம்பிக்க மற்றும் ராஜித தரப்பினர் முதலில் ரணிலுடன் முரண்பட்டுக் கொண்டனர்.

அத்தோடு ராஜபக்ஷ தரப்பினரைப் பாதுகாக்கும் விதத்தில் ரணில் செயற்படுவதாகவும் சம்பிக்க, ராஜித தரப்பினர் நம்புகின்றனர். அதே போன்று, அவன்காட் மிதக்கும் ஆயுதக் கப்பல் விவகாரம், ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவன விவகாரங்களில் ஊழல் குற்றச்சாட்டுக்களை மூடி மறைக்க ரணிலின் அரசின் அமைச்சர்கள் முன்வருவதைக் காண சம்பிக்க, ராஜித தரப்பினரின் சந்தேகம் மேன்மேலும் வலுக்கிறது. இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் உரையாற்ற மோடி சென்றவேளை, நாமல் ராஜபக்ஷவை மோடிக்கு அறிமுகம் செய்துவைத்து ரணில் பழைய காயத்துக்கு மிளகாய்த் தூள் தடவி வைக்கிறார்.

தற்போது ராஜபக்ஷ தரப்பினரில் நல்லவர்களைத் தம் பக்கம் வைத்துக்கொண்டு, கெட்டவர்களை அரசியலில் இருந்து கூட்டித் துடைத்து விடுவதே மைத்திரியின் விருப்பம். அதற்காகத் துடைப்பத்தை அவர் கையில் எடுக்கும்போது ரணில், நாமல் ராஜபக்ஷவை மோடிக்கு நெருக்கமானவராக ஆக்க முனைகிறார். சம்பிக்க – ராஜித தரப்பினரோ, மத்தியவங்கி ஆளுநரது வங்கிமுறி பிரச்சினையைக் கையிலெடுத்து ரணிலின் தலைமீது சுமத்த முனைகின்றனர்.

இத்தகைய ஏட்டிக்குப்போட்டி செயற்பாடுகளால் பாதிப்புறப்போவது நல்லாட்சித் திட்டமே. இதே ஏட்டிக்குப்போட்டி கயிறிழுப்புக்கள் தொடருமானால் நாட்டின் பொதுமக்கள் வேண்டவே வேண்டாம் இந்த நல்லாட்சித் தரப்பு என வெறுப்பு வெளியிட முன்வருவர். மத்தியவங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் இன்று நாட்டு மக்கள் மத்தியில் கசினோ உரிமையாளர் ஜேம்ஸ் பாக்கர் போன்றாகியுள்ளார். ஒன்றில் ரணில், சம்பிக்க, ராஜித தரப்பினர்கள் ஒன்றிணைந்து மத்திய வங்கி ஆளுநரை வீட்டுக்கு அனுப்பவேண்டும். இல்லையேல் நாட்டு மக்களது வெறுப்புக்குப் பாத்திரமாகியுள்ள அவன்காட் காரர்களையும், அலோசியஸ் தரப்பினர்களையும் தண்டனை பெற வழிவகை செய்யவேண்டும்.

‘007 ஜேம்ஸ் பொண்ட்’ என்பது பிரிட்டன் உளவுச் சேவை அதிகாரியொருவரது செயற்பாடுகளை அடிப்படையாகக் வைத்து வெளிவந்த திரைப்படத் தொடரின் கதாநாயகனது பாத்திரமாகும். மஹிந்தவும் இன்று அவன்காட்காரர்களையும் அலோசியஸ் தரப்பினர்களையும் ஜேம்ஸ் பொண்ட் ஆக்கி வருகிறார். அவர்களது பணி, மஹிந்தவுக்கு மெதமுலனவிலிருந்து கொழும்பு ஜனாதிபதி மாளிகைக்கு வருவதற்கான பாதையொன்றை நிர்மாணித்துக் கொடுப்பதாகும். அந்த வகையில் இந்த ஜேம்ஸ் பொண்ட்மார் தற்போது வங்கிமுறி பிரச்சினை ஊடாக நல்லாட்சியின் நல்லாட்சிக்காரர்கள் மூலம் அந்தப் பாதையை அமைப்பதற்கான வேலைகளைக் கனகச்சிதமாக முன்னெடுத்து வருவதாகக் கொள்வது பொருத்தமே.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20–40 | 50 | 30 | 60–90 | 20–40 | 40 | 40–60 | 20 |
| கத்தரி | 30–50 | 40 | 40 | 60 | 40 | 60 | 80–100 | 50 |
| கரட் | 100–120 | 100 | 100–120 | 140 | 80–100 | 120–140 | 120–150 | 60 |
| மரவள்ளி | 40 | 50–70 | 40–60 | 60 | 30–40 | 60 | 40–60 | 40 |
| பயிற்றை | 60 | 60–80 | 60–80 | 80 | 70–90 | 80 | 80–100 | 80 |
| பாகல் | 80–100 | 80 | 60 | 120 | 60–100 | 80 | 100–120 | 60–100 |
| கருணைக்கிழங்கு | 80 | 60 | 50 | 80 | 50–60 | 120 | 80 | 60 |
| பெ.வெங்காயம் | 90 | 80–90 | 100 | 90 | 80 | 100 | 90 | 40–70 |
| சி.வெங்காயம் | 50 | 60–90 | 60–80 | 80 | 50–80 | 100 | 80–100 | 60 |
| பூசணி | 50–70 | 50 | 50 | 60 | 40–60 | 80–100 | 100 | 40–60 |
| தக்காளி | 40–60 | 55 | 50 | 50–80 | 40–60 | 80 | 80–100 | 50 |
| வாழைக்காய் | 40–60 | 60 | 40–60 | 80 | 70 | 80 | 60–80 | 60 |
| கீரை | 20–30 | 30 | 30 | 10 | 30 | 20 | 40 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 30 | 20 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 50–60 | 60 | 50–70 | 70 | 60–80 | 80 | 60–80 | 50–80 |
| புடோல் | 40–60 | 50 | 40–60 | 60 | 30–50 | 60–80 | 60–80 | 70 |
| கோவா | 30–40 | 40–60 | 40 | 60 | 20–40 | 80 | 60–80 | 50 |
| வெண்டி | 40–60 | 50 | 60 | 80 | 40–50 | 60 | 60–80 | 40 |
| போஞ்சி | 120–160 | 110 | 100–120 | 140 | 100–120 | 160 | 100–120 | 70 |
| லீக்ஸ் | 140–160 | 140–180 | 130 | 160 | 160 | 200 | 120 | 110–150 |
| தேங்காய் | 60–80 | 40–60 | 40–80 | 60–70 | 40–60 | 50–70 | 35–60 | 40–60 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 | 90 | 80–100 | 90 | 70–90 | 80 |
| தேசிக்காய் | 80 | 80 | 70–100 | 80 | 70–100 | 60 | 60–80 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 100–140 | 100 | 120 | 140 | 100 | 140 | 100–140 | 90–130 |
| இராசவள்ளி | 120 | 90 | 100–120 | 120 | 100–130 | 120 | 120–180 | 90 |
| பனங்கிழங்கு | 04 | 03 | 04 | 04 | 03 | 05 | 05 | 03 |

# ஆன்மிகச் சிந்தனை

## ஞானச்சுடர்



பசிப்பிணி என்ற பாவி ஒருவனைப் பிடித்து விட்டால் தன்மானம், குடிப்பெருமை, கல்வி, வளமை, அறிவுடைமை, கொடை,தவம், உயர்வு, ஊக்கம்,காதல் ஆகிய குணங்கள் மறைந்து விடும். வருவாய்க்குத் தக்க வகையில் செலவு செய்ய வேண்டும். வரவுக்கு மீறிச் செலவு செய்பவன் மானத்தை இழப்பான். நல்லது கெட்டதைப் பிரித்தறியும்அறிவை இழந்து விடுவான். திருடன் என்று பெயர் எடுப்பான். ஏழு பிறப்பிலும் பாவத்தைச் செய்ய வேண்டிவரும்.

துன்பங்களைச் சேர்த்து வைக்கும் இடமாக உடல் இருக்கிறது. இந்தப் பொய்யான வாழ்க்கை நிலையானது என்று எண்ணி ஏமாந்து விடாதீர்கள். சேர்த்து வைத்த பொருளைக் கொண்டு வறியவர்களுக்கு உதவி செய்யுங்கள். நாம் செய்யும் தர்மமே நம் துன்பத்தைப் போக்க வல்லது. நெல்லுக்குப் பாய்ச்சிய நீர்வாய்க்கால் வழியாகப் புல்லுக்கும்பாய்வதுபோல, ம்ண்ணுலகில் நல்லவர் ஒருவர் இருந்தாலும் அவருக்காகவே மழை பொழிகிறது. அம்மழை நீரால் உலகில் உள்ள அனைவரும் பயன் பெறுகின்றனர். நாம் வருந்தி அழைத்தாலும் நமக்கில்லாத பொருள் கிடைக்காது. நமக்கான பொருளை வேண்டாம் என்று புறக்கணித்தாலும் அது நம்மைவிட்டு நீங்காது. இந்த உண்மையை அறியாமல் மனிதர்கள் வருந்துகின்றனர்.

# கூட்டிணைவே அமைதிக்கு வித்து

## தவக்காலச் சிந்தனை

பொது வேலைத்திட்டங்களில் பல்வேறு துறை சார்ந்தோரின் பங்களிப்பு இன்றியமையாதது. திட்டமிடுவோர், பொறியியலாளர்கள், தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் எனப் பல்வேறு மக்களின் கூட்டு முயற்சியால் பணிகள் நிறைவுபெறுகின்றன. நான்தான் திறம்படச் செய்தேன். பெருமை என்னைச் சார்ந்ததாகும் என எவரும் கூற முடியாது. அனைவரும் அதன் சிறப்புக்கு உரித்தானவர்களே.

இவ்வாறே சமுதாயக் கட்டமைப்பும் பல்வேறு ஆற்றல்கள் திறமைகள், புலமைகள், சிந்தனையாளர்களின் கூட்டு முயற்சியால் கட்டி எழுப்பப்படவேண்டும். தூய ஆவியானவர் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான அருட்கொடைகளை வழங்கியுள்ளார். ஒருவருக்கு ஞானம் நிறைந்த சொல்வளமும், இன்னொருவருக்கு அறிவு சேர்ந்த சொல்லாற்றலும் வேறொருவருக்கு நம்பிக்கையும், பிறிதொருவருக்கு பிணி தீர்க்கும் கொடையும், மேலுமொருவருக்கு வல்லமை மிக்க ஆற்றலையும், அடுத்தவருக்கு இறைவாக்கு பரவசப் பேச்சுத்திறன் போன்றவற்றை தூய ஆவியால் பொழிகிறார். இவை அனைத்தும் பொது நன்மைக்காகவே அருளப்படுகின்றன.(1கொரிந்தியர் 12:7)

இந்த அரிய கொடைகளைப் பெற்ற நாம், அவற்றை எமக்குள்ளேயே முடக்கி வைத்து எமது அகங்காரத்தால் இழந்த சந்தர்ப்பங்கள் எத்தனை? துஷ்பிரயோகம் செய்து அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தவில்லையா? வெவ்வேறு வயல்களில் விளைந்த கோதுமைமணிகள் ஒன்று சேர்ந்து அப்பமாக உருமாற்றம் பெறுவது போல அனைத்து தரப்பினரும் திறமைகள், வல்லமைகள், அதிகாரங்கள், அறிவு சேர்மதி நுட்பங்கள் , நிதிவளங்கள் என்பவற்றைப் புரிந்துணர்வுடன் ஒன்றிணைத்து சமுதாய உயர்வுக்கு பயன்படுத்துவோம். இதுவே இறையரசை நிறுவும் பணியாக அமையும்.

*எஸ்.யேசுதாஸ்,கொழும்புத்துறை.*

## நாளை

பங்குனி–14
சனிக்கிழமை 28.03.2015

திதி: நவமி
நட்சத்திரம்: திருவாதிரை மு.ப.08.23 வரை
சுபநேரம்:03.14–04.44 வரை
இராகுகாலம்: 09.14–10.44 வரை

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 700 | 700 | 600 |
| நண்டு | 400 | 450 | 300 | 250 | 400 |
| கணவாய் | 600 | 650 | 600 | 500 | – |
| பாரை | 500 | 600 | 500 | 400 | 320 |
| சுறா | 600 | 600 | 650 | 600 | 400 |
| சீலா | 450 | 500 | 400 | 400 | 250 |
| விளை | 500 | 500 | 450 | 400 | 300 |
| முரல் | 350 | 400 | 300 | 300 | 250 |
| கும்பிளா | 500 | 550 | 500 | 300 | 300 |
| கிழாக்கன் | 450 | 500 | 400 | – | 300 |
| ஒரா | 300 | 400 | 350 | – | – |
| திரளி | 300 | 400 | 300 | 200 | – |
| நகரை | 350 | 400 | 400 | – | 250 |
| சூடை | 150 | 200 | 120 | 100 | 50 |
| ஒட்டி | 200 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 200 | 300 | 150 | 140 |
| பாலை | 400 | 350 | 500 | 300 | 200 |
| வாளை | 180 | 200 | 300 | – | 200 |
| கொய் | 100 | 80 | 120 | 100 | – |
| மதனம் | 250 | 200 | 250 | 300 | 200 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 5 | 9 | | | 7 | |
| 9 | | | | | 2 | 4 | | |
| 5 | | 4 | | | 3 | 6 | | |
| | 4 | | | 1 | 6 | 5 | | |
| | | 1 | 7 | | 5 | 9 | | 4 |
| | | 5 | 8 | 4 | | | 3 | |
| | | 2 | 3 | | | 7 | | 5 |
| | | 8 | 4 | | | | | 6 |
| | 7 | | | 5 | 1 | | 4 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 9 | 7 | 8 | 3 | 5 | 4 | 2 |
| 5 | 8 | 7 | 4 | 2 | 1 | 3 | 6 | 9 |
| 3 | 4 | 2 | 5 | 6 | 9 | 1 | 7 | 8 |
| 8 | 3 | 6 | 1 | 4 | 5 | 9 | 2 | 7 |
| 4 | 9 | 1 | 8 | 7 | 2 | 6 | 3 | 5 |
| 7 | 2 | 5 | 9 | 3 | 6 | 4 | 8 | 1 |
| 1 | 6 | 8 | 3 | 9 | 7 | 2 | 5 | 4 |
| 9 | 7 | 3 | 2 | 6 | 4 | 8 | 1 | 6 |
| 5 | 5 | 4 | 6 | 1 | 8 | 7 | 9 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



# மன உறுதியுடன் இருங்கள்

ஒவ்வொரு மனித இதயத்தின் உள்ளும் மிக ஆழத்தில் ஆதி அந்தமில்லாத இறைவன் ஒளிந்து கொண்டிருக்கின்றான். அவனை உணர்ந்தவ்னே உண்மையை உணர்ந்தவன் ஆவான்.

தன்னுடைய பலவீனங்கள், குற்றங்கள், பாவங்கள் எல்லாவற் றையும் வேறொருவரின் மேல் சுமத்துவது மனித இயல்பாக இருக்கிறது. எம்முடைய தவறுகளை உணர மறுப்பது தான் இதற்குக் காரணம்.

எத்தனை நல்ல நூல்களை வாசித்தாலும் நம்மால் தூயவராக முடியாது. உண்மையை நாம் உணர வேண்டுமானால், தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது மெய்யுணர்வு எம்முள் மலரத் தொடங் கும்.

உங்களுக்குப் பிடித்ததைக் கடைபிடிப்பதுபோல, மற்றவர்களும் அவரவருக்கு விருப்பமானவற்றை பின்பற்றும் சுதந்திரத்தைக் கொடுங்கள். ஏனென்றால், சுதந்திரம் இல்லாத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை.

எந்த விடயத்தையும் நன்கு ஆய்ந்து பாருங்கள். கொண்ட கொள்கை மற்றும் குறிக்கோளில் மன உறுதியுடன் இருங்கள்.

# இறைவனைக் கனவில் கண்டால் என்ன பலன்?



ஆலயத்திற்குள் செல்வதுபோல கனவு கண்டால், நண்பர்களின் வட்டாரத்தில் அன்பும் ஆதரவும் ஏற்படும். உத்தியோகத்தில் மேன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் விலகி மகிழ்ச்சி ஏற்படும். ஆலயத்துக்குள் நுழைய முடியாமல் கூட்டத்தில் மாட்டிக் கொண்டு அவதிப்படுவதுபோல கனவு கண்டால், எதிர்பார்க்காத பிரச்சினையில் சிக்கிக் கொண்டு அவதிப்படுவீர்கள். உங்களின் வளர்ச்சியைக் கெடுக்கவே சிலர் முயற்சிக்கிறார்கள் என்பதை உணருங்கள். இறைவனை மனப்பூர்வமாக நம்புங்கள். சிக்கல்களிருந்து விடுபடவும், பண விரயம் ஆகாமல் இருக்கவும் சிந்தித்து செயற்படுவது நல்லது. இறைவனை கனவில் கண்டால், உங்களை வீழ்த்த யாராலும் முடியாது. பிரச்சினைகள் விலகி யோகங்கள் உங்களை தேடி வரும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திருமண தடை விலகி நல்ல வரன் அமையும். ஆபத்திலிருந்து தப்பித்து விடுவீர்கள். இறைவனுக்கு மாலை போடுவது போல கனவு கண்டால், லாபகரமான செயலில் ஈடுபடுவீர்கள். நல்ல வளர்ச்சியை அடைவீர்கள். பல பாக்கியங்களைப் பெற்று சுகமாக வாழ்வீர்கள். திருவிழாவைச் சுற்றி பார்ப்பது போல கனவு கண்டால், வீடு-வாகனம், பொருள்கள் வாங்கும் யோகம் வரும். அதனால் கடனும் வாங்குவீர்கள். இருந்தாலும் குடும்பத்திலும், உங்கள் மனதிலும் சந்தோஷம் இருக்கும். புதிய சுமை இருந்தாலும் அதை சுகமான சுமையாகவே கருதுவீர்கள். திருவிழாவில் யாரையாவது தேடுவதுபோல கனவு கண்டால், தொழிலில் சில சங்கடங்கள், உறவில் விரிசல் போன்ற சிறு சிறு சங்கடங்கள் வரும். காலம் கடந்து கொண்டு இருந்த விடயங்களுக்கு புதிய வழி கிடைக்கும். அதனால் லாபமும் உண்டாகும். பொதுவாகவே இரவு ஒரு மணிக்கு கனவு கண்டால் ஒரு வருடத்திற்குள் பலன் கிடைக்கும். இரண்டு மணிக்கு கனவு கண்டால் மூன்று மாதத்திற்குள் பலன் கிடைக்கும். மூன்று மணிக்கு கனவு கண்டால் ஒரு மாதத்திற்குள் பலன் கிடைக்கும். விடியற்காலையில் கனவு கண்டால் உடனே பலிக்கும். ஆனால் பகல் கனவு பலிக்காது என்கிறது கனவு சாஸ்திரம். சிலருக்கு கனவு கண்ட சில நாள்களிலேயே பலிக்கும். நல்ல கனவு கண்டால் மகிழ்ச்சி அடைவோம். அதுவே எதிர்மாறான கனவு கண்டால் அந்த கனவை நினைத்து நினைத்தே வேதனைப்படுபவர்களும் இருப்பார்கள். அப்படி தீய கனவை கண்டவர்கள் இறைவனை நம்பிக்கையுடன் வணங்கினால் தீய கனவுகளும் வெறும் கனவாகவே ஆகிவிடும். மொத்தத்தில் இறைவன் ஒருவனே மிக பெரியவன். அவனையே முழு மனதுடன் நம்பினால் சங்கடங்கள் விலகி வாழ்நாள் முழுவதும் எதிலும் சாதிக்கலாம் புகழ் பெறலாம்.


# தனிமையிலும் இனிமை



நம்மைச் சுற்றி நிறையப் பேர் இருந்து கொண்டிருந்தாலும் நாம் ஏதோ தனிமையில் இருப்பதைப் போன்ற உணர்வு பலரையும் ஆட்கொள்ளத் தான் செய்கிறது. அதுவே திருமணமாகி, கணவரோடு புதுப்பெண் புதிய நகருக்கு வாழப்போனால், தனிமையில் தவித்துத்தான் போகிறார்கள். புதிய மனிதர்கள், புதிய மொழி, புதிய கலாசாரம் போன்றவைகள் எல்லாம் சேர்த்து அவர்களை தவிக்கவைத்து, தனிமைப்படுத்துகிறது. அவர்கள் திக்குமுக்காடித்தான் தனிமை உணர்வை தவிர்க்கிறார்கள் என்கிறது. எல்லா இடத்திலும் நம்மைப் போன்ற மனிதர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களோடு பழக மொழியைவிட அன்பு உள்ளங்கள்தான் அவசியம். ஒரு சிறிய புன்னகை கூட மற்றவர்களை ஈர்த்துவிடும். தனிமை எண்ணங்களை தவிர்த்துவிட்டு, மற்றவர்களோடு இன்ப, துன்பங்களை பகிர்ந்துகொள்ளும்போது அவர்களுடனான உறவு வலுப்பட்டு, தனிமை விரட்டப்பட்டுவிடும். அந்தந்தப் பகுதி மக்களின் கலாசாரத்தைப் புரிந்து கொண்டு அங்குள்ள மக்களின் பழக்க வழக்கங்களை தெரிந்து கொண்டு, அதற்குத் தக்கபடி அவர்களோடு பழக முற்பட வேண்டும். தினமும் காலை, மாலை இரு நேரமும் அருகில் உள்ள இடங்களுக்கு சென்று சிறிது நேரம் உலாவிவிட்டு வர வேண்டும். அப்போது அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் பார்வை நம்மீதுபடும். அதுவே அவர்களிடம் பழக வாய்ப்பாக அமையும். படித்திருந்தால் வாழப்போகும் ஊரில், வீட்டின் அருகில் உள்ள பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுக்கத் தொடங்கிவிடலாம். அந்த பிள்ளைகள் மூலம் அவர்களது பெற்றோர் அறிமுகமும், படித்த பெண் என்ற அங்கீகாரமும் கிடைக்கும். நேரம் கிடைக்காமல் விட்டுப்போன படிப்பை புதிய ஊருக்கு வந்ததும் தொடரலாம். இதனால் தனிமையை பயன்படுத்தி அறிவை வளர்த்துக் கொள்ளலாம். அப்படி இல்லையென்றால் ஒளிப்படம் சேகரிப்பு, சித்திரம் வரைதல், பெயிண்டிங் செய்தல் இப்படி ஏராளமான பொழுது போக்குகளில் எதையேனும் ஒன்றை ஆரம்பித்து தனிமையை விரட்டலாம். சுவையான உணவுகளைத் தயாரிக்கத் தெரிந்து வைத்திருந்தால், விழாக் காலங்களில் அவைகளை தயாரித்து, பக்கத்து வீடுகளில் உள்ளவர்களுக்கு கொடுத்து நட்பை வளர்க்கலாம். விருந்துக்கும், பூஜைகளுக்கும் அவர்களை அழைத்து மனதில் இடம்பெறலாம்.




# பெண்களுக்கு பிடித்த விடயங்கள்!



பத்துப் பெண்கள் இருக்கும் இடங்களில், தனக்குரியவர் முதலில் தன்னிடம் பேசுவது பிடிக்கும்.

தன் தோழியை அறிமுகப்படுத்தி வைக்கும் போது, நாகரிகமாய் நடந்துகொள்ளும் ஆணைப் பிடிக்கும்.

கவலையான நேரங்களில், ஆறுதலாய் நிற்கும் அனுசரணையான மனிதர்களைப் பிடிக்கும்.


தன்தோற்றம் பற்றிய உயர்வான மதிப்பீடு எப்போதும் இருக்கும். யாராவது வாய் விட்டால் போதும் மனது குளிர்ந்து விடும்.

ஊராரிடம் கம்பீரம்,புத்திசாலித்தனம், வலிமை காட்டும் ஆண், தன்னிடம் அமைதி காட்டுவது மிகப் பிடிக்கும். (பணிவை பொறுத்தவரை ஆண்கள் ஒரு அடி வைத்தால் பெண்கள் இரு அடி வைப்பார்கள், அடக்கினால் ஒரு அடிக்கு பதில் நாலு அடி)


உறவுகளில் எப்போதும் பிற்கால இலாபத்தை மனதில் கொண்டு முடிவெடுக்கப் பிடிக்கும்.

அழுகை, பூ, பூஜை, பணம், சீரியல், நகை, ஆடை அலங்காரம், அடுத்தவர்களுடன் ஒப்பீடு, பேசுதல் இவை வழக்கமான பிடிப்புக்கள்.

பெண்களுக்கு அவர்களுக்கு பிடித்தவர்கள் பிடிக்காததைச் செய்தாலும் பிடிக்கும். ஆனால் பிடிக்காதவர்கள் பிடித்ததைச் செய்தாலும் பிடிக்காது.



# சராசரி மனிதனின் தகவல்கள்....



சராசரி மனிதனின் குருதியின் அளவு - 5.5 லீற்றர்
மனித உடலில் இருந்து வெளியேறும் சிறுநீரின் சராசரி அளவு - 1.5 லீற்றர்.
சராசரி மனிதன் ஒரு நாளில் அருந்த வேண்டிய நீரின் அளவு - 6 லீற்றர்
மனித உடலில் உள்ள இரத்த நாளங்களின் மொத்த நீளம் - 100 000 கிலோமீற்றர்
மனித உடலில் மிகவும் குளிரான பகுதி - மூக்கு
மனித உடலில் வியர்க்காத உறுப்பு - உதடு
மனித உடலின் சிவப்பு அணுவின் சராசரி ஆயுள் காலம் - 120 நாள்கள்
இறந்த மனிதனின் இதயத்தின் உயிர்த்துடிப்பு அடங்கு நேரம் - 20 நிமிடங்கள்
மனித நகம் வளரும் வருட சராசரி அளவு - 12.5 அங்குலம்
மனித உடலில் உள்ள வியர்வைச் சுரப்பிகளின் எண்ணிக்கை 2மில்லியன்

## மகிழ வைக்கும் பூனைக்குட்டி

மஞ்சள் நிறக்குட்டி!
எனது காலைப் புண்படாமல்
பிராண்டும் செல்லக்குட்டி!
எங்கள் அப்பா மெத்தை மீது
ஏறிப் படுக்கும் குட்டி!
தங்கை பள்ளி
போகும்போது
வழியனுப்பும் குட்டி!

தனது அம்மா கற்றுத் தந்த
'மியாவ்..,மியாவ்' மொழியில்
தனக்குத் தெரிந்த கீதம் பாடி
மகிழ வைக்கும் குட்டி!
குட்டி இன்பம் கோடி இன்பம்!
கூறக் கூறப் பெருகும்!
குட்டி ஒன்று வாங்கிப் போய் நீ
வளர்த்தால் உண்மை புரியும்!

# வர்ணம் தீட்டலாம் வாங்க...







## செயலில் கவனம்


ஒரு ஊரில் ஒரு பால் வியாபாரி இருந்தாள். அவள் தன்னிடமிருந்த ஒரு பசு மாட்டிலிருந்து பாலைக் கறந்து அதை ஒரு குடத்திலிட்டு தன் தலையில் வைத்து எடுத்துச் சென்று வியாபாரம் செய்து வந்தாள். ஒருநாள் அப்படிச் செல்லும் போது..இன்று பாலை விற்று வரும் பணத்தில்.. சில கோழிக் குஞ்சுகள் வாங்குவேன்.அவை வளர்ந்து பெரிதானதும்..அவைகளை விற்று வரும் பணத்தில் இரண்டு ஆட்டுக் குட்டிகள் வாங்குவேன்..அவை வளர்ந்ததும் அவற்றை விற்று இன்னொரு பசு மாடு வாங்குவேன்..அது பால் கறக்கையில் சண்டித்தனம் பண்ணினால் அதை தலையில் பால் எடுத்துப் போகும் குடத்தால் இப்படி வீசுவேன்....என தன்னை மறந்து..தலையில் இருந்த குடத்தை எடுத்து வேகமாக வீச, அதில் இருந்த அனைத்து பாலும் கீழே கொட்டியது.குடமும் உடைந்தது. அவளுக்கு அன்றைய பால் வியாபாரம் நஷ்டமடைந்ததுடன்..பால் குடமும் வேறு வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போதுதான் அவள், எந்த ஒரு காரியமும் நடந்து முடிக்கும் முன், அதை எண்ணி திட்டங்கள் போடக் கூடாது என்பதை உணர்ந்தாள். எந்த ஒரு செயலில் ஈடுபட்டாலும்..அதை முதலில் முடிக்க வேண்டும்.இடையில் வேறு நினைவுகள் வந்தால் நஷ்டமே ஏற்படும்.

# அடுத்தவர் அறிவையும் பயன்படுத்துங்கள்!

*நேற்றைய தொடர்ச்சி...*

அந்தச் சமயத்தில் அவர்களைப் பார்ப்பவர்களுக்கு இவர்கள் இந்தத் துறையில் மிகப் பெரிய ஆளாக, வெற்றியாளராக வருவார் என்று தோன்றுமளவு அவர்களது உற்சாகமும் திறமையும் இருப்பதுண்டு. நானும் அப்படிச் சிலரைப் பார்த்திருக்கிறேன். அப்படிப் பெரிதாக அவர்களிடம் எதிர்பார்திருக்கிறேன். ஆனால் சில காலம் கழித்து அவர்களைச் சந்தித்த போது அந்த சுவட்டைக் கூட என்னால் பார்க்க முடிந்ததில்லை.

அவர்களிடம் அதை நினைவுபடுத்திக் கேட்டால் அதெல்லாம் ஒரு காலம் என்பது போன்ற பதில் கிடைக்கும். சில சமயங்களில் வேறொரு துறையில் இதே ஆர்வத்துடன் அவர்கள் எதையோ செய்து கொண்டிருப்பார்கள். இன்னொரு வைக்கோல்போர்.... எல்லாம் சொற்பகாலப் பிரகாசமே. அது போன்ற நபர்கள் எல்லாம் சராசரிக்கும் மேற்பட்ட அறிவுக்கூர்மையுடையவர்களே. சில சமயங்களில்அசாதாரண திறமைசாலிகளே. அவர்களிடம் உள்ள மிகப் பெரிய குறை திடீரென்று சலித்துப் போவதே. கைதட்டல்களும், பாராட்டும் குறைய ஆரம்பிக்கும் போது அவர்கள் ஈடுபாடும், முயற்சியும் கூடக் குறைந்து போகிறது. அவர்களுக்கு அதில் சலிப் பேற்பட்டு விடுகிறது. ஒரு த்ரில் இருப்பதில்லை.மனம்இயல்பாகவேவேறொன்றை நாட ஆரம்பிக்கிறது. ஆனால் அவர்களுக்கு அதற்கான காரணம் சொல்லத் தெரிவதில்லை.அவர்களை விடக்குறைந்த திறமை உள்ளவர்கள் சோபிக்கும் போது மட்டும் அவர்களுக்குக் கோபம் வருகிறது. இவனெல்லாம் இன்னைக்கு இதில பெரிய ஆள். எல்லாம் நேரம் தான் என்று புலம்புவதை நம்மால் கேட்க முடியும். ஆனால் இவர்கள் ஒரு மிகப் பெரிய உண்மையை மறந்து விடுகிறார்கள். ஒரு வேலையைப் பாதியிலேயே விட்டு விட்டுப் போனவர்களை உலகம் நினைவில் வைத்திருப்பதில்லை. இவர்களை விடத் தகுதி குறைவாக இருந்தாலும் பாதியில் விடைபெற்று விடாமல் தாக்குப் பிடித்திருக்கிறான் என்பதே அந்த சோபித்தவனுக்கு சாதகமாக இருந்திருக்கிறது என்பதை உணரத் தவறி விடுகிறார்கள்.





கொலம்பஸ் தன்னுடைய உலகப் பயணத்தைப் பாதியிலேயே நிறுத்தி திரும்பிச் சென்றிருந்தால் அவர் பெயர் சரித்திரத்தில் நின்றிருக்குமா? இத்தனைக்கும் வழியில் அவர் பட்ட கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. வழியில் பல பிரச்சினைகள். கப்பலில் அவருடன் வந்த மாலுமிகளும் பாதியில் முணு முணுக்க ஆரம்பித்தார்கள். ஆனால் ஆரம்பித்த பயணத்தை ஒரு உறுதியுடன் அவர் முடித்ததால் தான் அவரைஉலகம்நினைவில்வைத்துள்ளது. உங்களுக்குத் திறமை உள்ளது என்று நம்பும் துறையில் சதா உங்கள் சிந்தனை இருக்கட்டும். அதில் அடுத்தவர்கள் கவனிக்கா விட்டாலும் ஏதாவது முயற்சி செய்துகொண்டே இருங்கள். அதில் சாதித்தவர்களைப் பார்த்து பாடங்கள் கற்றுக் கொள்ளுங்கள். மனம், சொல், செயல் என்று தினமும் நம்பிக்கையுடன் ஈடுபடுகிற போது தான் உள்ளே உள்ள அக்னி அணையாமல் காக்கப் படுகிறது. உங்கள் வெற்றி உறுதி செய்யப்படுகிறது.

# வீட்டுப் பிரச்சினைகளை ஆராய கொழும்பில் குழு

## நகர அபிவிருத்தி அமைச்சினால் அமைப்பு

கொழும்பு, மார்ச் 27

கொழும்பு மாநகரத்தில் காணப்படும் வீட்டுப் பிரச்சினைகளை கண்டறிய நகர அபிவிருத்தி அமைச்சினால் பரிசீலனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரத்தில் தங்களது வதிவிடங்களிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டு அல்லது மீளமை விடப்படுத்தப்பட்டுள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களையும், குறைபாடுகளையும் பரிசீலனை செய்து உரிய தீர்வுகளைக் காண்பதை நோக்கமாகக் கொண்டு அமைச்சர் ரவூப் ஹக்கீமின் ஆலோசனைக்கு அமையவும், அவரது கண்காணிப்பின் கீழும் அமைக்கப்பட்டுள்ள குழுவிற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வரை பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம்.

கொழும்பு மாநகர எல்லைக்குள் வசித்துவந்த குறைந்த வசதிகளைக் கொண்ட குடும்பங்கள் அப்புறப் படுத்தப்பட்டமை அல்லது மீளமை விடப்படுத்தப்பட்டமை குறித்து மீளாய்வு செய்வதற்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதை அடுத்தே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. புதிய அரசின் 100நாள் வேலைத் திட்டத்திற்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரத்தில் குறைந்த வசதிகளைக் கொண்ட, குறிப்பிட்ட காரணங்களால் பாதிப்புக்குள்ளான குடும்பங்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதனால், அத்தகையோரின் மனக்குறைகளையும், வேண்டுகோள்களையும் பரிசீலிப்பதற்காக நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் (நகர அபிவிருத்தி) பி.சுரேஸ் தலைமையில் இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் நகர அபிவிருத்தி அதிகார சபை, கொழும்பு மாநகர சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்பட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஒருவரும் இடம் பெறுகின்றார்.

பாதிக்கப்பட்டவர்கள் உரிய தினத்திற்கு முன்னர், மேலதிகச் செயலாளர் (நகர அபிவிருத்தி), நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு, 3ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம். (த)

# இலங்கையுடன் ஐ.நா 60 வருட கூட்டிணைவு

கொழும்பு, மார்ச் 27

1945 ஒக்ரோபர் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) ஸ்தாபிக்கப்பட்ட 70ஆவது வருடத்தையும், 1955 டிசெம்பர் 14 ஆம் திகதி இலங்கை ஐக்கிய நாடுகளில் உறுப்புரிமை பெற்று 60 வருடங்கள் பூர்த்தியாவதும் இவ்வாண்டு நினைவு கூரப்படுகின்றது.

இந்த முக்கியத்துவமிக்க நிகழ்வைக் கொண்டாடுவதற்கு இலங்கை ஐக்கிய நாடுகள் வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து ஊடக மற்றும் தொடர்பாடல் பரப்புரைத் திட்டமொன்றை நடத்தவுள்ளது.

எங்கள் யு.என் எனும் இந்தப் பரப்புரைத் திட்டம் இலங்கை வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் திருமதி சித்திராங்கனி வாகிஸ்வரா மற்றும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட வதிவிடப் பிரதிநிதி சுபினாய் நண்டியினால் இந்த வாரம் நடைபெற்ற ஒரு நிகழ்வில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

'எங்கள் யு.என்' என்னும் ஒரு வருட கால இந்தப் பரப்புரைத்திட்டம் கடந்த 60 வருட காலப் பகுதியில் ஐ.நா.வில் இலங்கையின் முக்கிய பங்களிப்புக்கள் பற்றிய மக்கள் அறிவூட்டல்களை நோக்காகக்கொண்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, இலங்கை– ஐ.நா. நீண்ட காலக் கூட்டிணைவை உறுதி செய்தார்.

சுதந்திர இலங்கை வரலாற்றில் சர்வதேச அரங்கிலும், குறிப்பாக ஐ.நா.விலும் இலங்கை ஒரு முக்கிய உறுப்பினராகக் கருதப்பட்டுள்ளது. இலங்கை 1955 ஆண்டு டிசெம்பர் 14ஆம் திகதியில் ஐ.நா. உறுப்புரிமை பெற்றதிலிருந்து ஒழுங்கு வடிவமைப்பு செயன்முறை அடங்கலாக பல வழிகளிலும் பங்களிப்புச் செய்துள்ளது. அப்போது சிலோன் என அழைக்கப்பட்ட இலங்கை, உறுப்புரிமைபெற்று 5 வருடங்களிலேயே ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டது. கடல் சட்டம் போன்ற முக்கிய மாநாடுகளில் இலங்கை தலைமை வகித்ததுடன் பொதுச்சபை மற்றும் பாதுகாப்புச் சபைகளிலும் தலைமை தாங்கியுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

சுதந்திரமடைந்ததிலிருந்து இலங்கை அதன் புவியியல் மற்றும் குடித்தொகை அளவுக்கு அப்பாலான ஒரு இராஜதந்திர தரத்தைப் பேணி வருவதுடன் இலங்கையர்கள் ஐ.நா. அமைப்பில் முக்கிய பதவிகளை வகித்துள்ளனர்.

இலவசக் கல்வி, இலவச சுகாதார சேவை மற்றும் வீடமைப்பு போன்ற முன்னைய அரசுகளின் கொள்கைகள் இலங்கை அவிருத்தி முன்னெடுப்புக்களுக்கு மாத்திரமன்றி உலக கொள்கைகளிலும் தாக்கம் செலுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# கடமைக்குத் திரும்பாத படைகளுக்கு மன்னிப்பு

கொழும்பு, மார்ச் 27

உரிய முறையில் விடுமுறை பெறாது தற்போது கடமைக்குச் செல்லாது வீடுகளில் தங்கியுள்ள இராணுவத்தினருக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 2ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரையான காலப்பகுதி வரை இவர்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், குறித்த காலத்தில் கடமைக்குத் திரும்பாத இராணுவ அதிகாரிகள் தத்தமது படைத் தலைமையகங்களுக்குச் சென்று உரிய முறையில் சட்ட ரீதியாக தமது பதவி விலகல் நடவடிக்கைகளை செய்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த)


## வேலைவாய்ப்பு
## R.R.R Advertising International

யாழ்ப்பாணத்தில இயங்கிவரும் R.R.R. Atvertising விளம்பரப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்புடைய பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு A/L சித்தியடைந்த, அடையாத சகல இளம் சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான சந்தர்ப்பம்.

★ இன்றே தொடர்பு கொள்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ அடிப்படைச் சம்பளம் 15000/= E.T.F / E.P.F Medical உண்டு.

★ கிளைகள் தனியாக திறந்து கொடுக்கப்படும். கிளை உரிமையாளருக்கு ரூபா 75000/= மேற்பட்ட சம்பளத்துடன் தொழிலை மேற்கொள்ளலாம்.

**தகைமைகள்:** நேரில் தெரிவுசெய்யப்படும்.

தொடர்புகொள்ளவும்
021 7905 381



## விற்பனைக்கு

அயன்சேவ், சீலிங்பான் (Fan), தைத்த கேட்டீன்கள், வயலின், Excecutive Table, chairs, clerical cabin, பெற்றோல்-டீசல் ஜெனரேற்றர்கள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 0785 239729



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கில்னர் ஒழுங்கையில் அமைந்துள்ள 1பரப்பு உறுதிக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 075 8518519



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வே.உதயகுமார்
S.L.P.S.I
Dip.in.Teach.B.A., M.A. (Tamil) M.Ed.
Best Wishes!



ந.அகிலன் S.L.P.S.I
Dip.in.Teach.B.A., P.G.D.E., M.Ed.
Best Wishes!

எமது கல்லூரி ஆசிரியர்களான வே.உதயகுமார், ந. அகிலன் ஆகிய இருவரும் இன்று (27.03.2015) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணிப் பட்டத்தைப் பெறுவதையிட்டு நாம் மனம் மகிழ்வதுடன் இவர்கள் மேலும் பட்டங்களையும் பதவியுயர்வுகளையும் பெற்று எம் கல்லூரிக்கு சிறப்பைச் சேர்க்க பிரார்த்தித்து இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி



## வாகனங்கள் விற்பனை

எமது சங்கத்தின் பெயரில் பதிவிலுள்ள கீழ்க்காணும் விவரப்படியான வாகனங்கள் விற்பனை செய்யப் படவுள்ளன. இதற்கான தங்களின் கூறுவிலை விண்ணப்பத்தினை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் இதற்கென உரிய விண்ணப்பப் படிவத்தினை ரூபா 200.00 செலுத்தி பெற்று தங்களின் கூறு விலை விபரத்தினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

| தொடர் இல. | எஞ்சின் இலக்கம் | வாகன இலக்கம் | அதன் வகை | அளவு | உற்பத்தி வருடம் |
|---|---|---|---|---|---|
| 01 | 2000 CC | 24-5521 | பென்ஸ் லொறி | 01 | 1969 |
| 02 | 1100 CC | 27-2076 | Elf Van இசுசு | 01 | 1976 |

மேற்படி வாகனங்களை அலுவலக நாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி
2015. 04. 02

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி.
தலைவர்.
யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
இல. 127, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.



## டோஹா-கட்டாரில் முதற்தர கம்பனிகளில்
## வேலைவாய்ப்பு

சுத்திகரிப்பு தொழிலாளி (ஆண்கள் மட்டும்) 133 800 QR 29,131 ரூபா

நேர்முகத் தேர்வு: மார்ச் மாதம் 27ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளில்

குருநாகல் புரடென்ஷல் வெளிநாட்டு முகவர் அலுவலகத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்கு செல்லுபடியான கடவுச்சீட்டுடன் சமுகமளியுங்கள்.

**நிபந்தனைகள்**

இரண்டு வருடகால ஒப்பந்தம், தங்குமிடம், மருத்துவம் வழங்கப்படும், 200 QR உணவுக் கொடுப்பனவு. நாளொன்றுக்கு 8 மணித்தியாலம் வாரத்தில் 6 நாள்கள் வேலை, ஒப்பந்த முடிவில் டோஹாவில் இருந்து கொழும்பு திரும்புவதற்கான விமான பயணசீட்டு இலவசம். மற்றயவை எல்லாம் அந்நாட்டு தொழிலாளர் சட்டத்திட்டங்களுக்கு அமையும்.

கட்டணம்: SLBFE இனால் அனுமதிக்கப்பட்ட 93,000 ரூபா மட்டுமே

(Ad.app.no: AL/2769/26/15)

| | | |
|---|---|---|
| மேசன் | 40 | 1200QR (43,812 ரூபா) |
| தச்சுத் தொழிலாளி | 24 | 1200QR (43,812 ரூபா) |
| இரும்பு பொருத்துபவர் | 25 | 1200QR (43,812 ரூபா) |
| போமன் (மேலாளர்) | 02 | 2000QR (73,020 ரூபா) |
| உதவி மேற்பார்வையாளர் | 05 | 1500QR (54,765 ரூபா) |

நேர்முகத் தேர்வு: ஏப்ரல் 02ஆம் திகதி - புரடென்ஷல் அலுவலகம் குருநாகல்
ஏப்ரல் 03ஆம் திகதி - யாழ்ப்பாணம் கிறீன் கிராஸ் ஹோட்டலில்
(ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு அருகில்)

**நிபந்தனைகள்:**

இரண்டு வருடகால ஒப்பந்தம், உணவு, தங்குமிடம், மருத்துவம் இலவசம், நாளொன்றுக்கு 8 மணித்தியாலம், வாரத்தில் 6 நாள் வேலை. இருவழி விமான டிக்கற் இலவசம். SLBFE இனால் அனுமதிக்கப்பட்ட 95,000 ரூபா கட்டணம் மட்டுமே. மற்றையவை டோஹா - கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு அமைய.

1 QR = Rs. 36.41 Add.app.No : AL/2769/02/15

நேர்முகத் தேர்வுக்கு செல்லுபடியான கடவுச்சீட்டுடன் சமுகமளியுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 037 494 5555, 077 45 74 555
இணையத்தளம்: www.prudentialagency.lk
புரடென்ஷல்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (Pvt.)Ltd. 72/1,2 ஆவது மாடி, கொழும்பு வீதி, குருநாகல்.



## வட மாகாண நிர்மாணிகள்
## அனைவருக்குமான முக்கிய கலந்துரையாடல்

தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் வட மாகாண அங்கத்தவர்கள் மற்றும் வட மாகாணத்தைச் சேர்ந்த நிர்மாணத் துறையில் ஈடுபட்டிருக்கும் அங்கத்தவர் அல்லாதவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து வருங்கால வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது சம்பந்தமாகவும், வட மாகாண அபிவிருத்தியில் நிர்மாணிகளின் பங்களிப்பு சம்பந்தமாகவும் கலந்துரையாடல் ஒன்றை யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றம் ஒழுங்கு செய்துள்ளது.

இடம்: கிறீன் கிறாஸ் விடுதி
இல. 33, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காலம்: எதிர்வரும் 04.04.2015 ஆம் திகதி மு.ப. 10.00 மணி

இதில் தவறாது அனைவரும் பங்கு கொண்டு தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு: 021 222 6609



உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மஹிந்தவின் உறவினர் ஊவா முதல்வர் ஆனால் அங்கு அபிவிருத்தி ஏதுமில்லை

## இராஜாங்க அமைச்சர் வேலாயுதம் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 27

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தவர் ஒருவர் ஊவா மாகாண முதலமைச்சராக பதவிவகித்தபோதிலும் இப்பகுதிக்கு எந்தவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை" – என்று பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் கே.வேலாயுதம் தெரிவித்தார்.

பதுளை, கச்சேரி கட்டடத் தொகுதியில் ஊவா மாகாணத்திற்கான பெருந் தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் ஒருங்கிணைப்புக் காரியாலயத்தைத் திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

"ஊவா மாகாண பெருந்தோட்ட, சிறுதோட்ட பயிர்ச்செய்கையானது தேயிலை மற்றும் கரும்பு ஆகியவற் றிலேயே தங்கியுள்ளது. தேயிலைச் செய்கையில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றுக்கு நாங்கள் இயலுமான தீர்வுகளை வழங்கியுள்ளோம்.

அது மட்டுமல்லாது, சிறுதோட்டப் பயிர்ச்செய்கையாளர்களது பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் ஆராய்ந்து எமது அமைச்சினூடாக தீர்வுகளை வழங்கியுள்ளோம். அதுமட்டுமல்லாது, தரமானதேயிலை ஒரு கிலோ கிராமுக்கு 80 ரூபா பெற்றுக்கொடுத்துள் ளோம்.

பெல்வத்த, செவனகல போன்ற கரும்புப் பயிர்ச்செய்கை பற்றியும், இத்தொழிற்சாலைகளின் கடந்த கால போக்குப் பற்றியும் நான் அங்கு சென்று ஆராய்ந்தேன்.

எமது அமைச்சின் கீழ் இயங்கும் இந்தப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை களைக் கூடிய விரைவில் இலாப மாற்றத்திற்கு வழிவகைகளைச் செய் வதுடன், இத்தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ளவர்களின் தனி மனித முன்னேற்றம், பொருளாதார வசதிகள் தொடர் பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

புற்தரைகளாகக் காணப்படும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப் பரப்பு களை இனங்கண்டு அவற்றில் பயிர்ச் செய்கைகளைமேற் கொள்ள திட்டமிட்டுள்ளோம். இதனால் எமது உற்பத்தித் திறனை அதிகரிக்க முடியும். அத்துடன், வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வாகவும் அது அமையும். இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடனும், தொழிலாளர்களுடனும் பேச்சு நடத்தி வருகின்றோம்.

கடந்த 20 வருடத்துக்கு மேலாக மலையகத்தைச் சேர்ந்த 42 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தலைநகரில் தகுதிக்கேற்ற தொழில் அமையாமல் குறைந்த சம்பளங்களுக்காக மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

இவர்களுக்கான புதிய தொழில் முயற்சிகளைஉருவாக்கிஅனைத்து இளைஞர், யுவதிகளையும் திறமையடிப்படையில் பிரதேசவாரியாக முன்னேற்றவேண்டும் என்ற எதிர்பார்ப்பும், ஆசையும் நீண்டநாட்களாக எனக்குள் இருந்துவருகின்றது. இவ்விடயம் தொடர்பாக பல்வேறு மட்டத்தில் பேச்சு களை நடத்தி ஒத்துழைப்பு வழங்கு மாறு கோரிக்கை விடுத்துள்ளேன்.

முன்னாள் ஜனாதிபதியின் உறவினர் ஒருவர் ஊவா மாகாணத்தில் முதலமைச்சராக பதவி வகித்த போதிலும் ஊவாவில் குறிப்பிட்டு சொல்லக் கூடிய எந்தவித அபிவிருத்தி நடவடிக்கைகளும்இங்குஇடம் பெறவில்லை.இதனால்சிறுபான்மை மக்களான நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டோம்" – என்றார். (த)

## சிவஞானப்பிள்ளையார் நாளை கொடியேற்றம்

நல்லூர் சிவஞானப்பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 05 ஆம் திகதி ஞாயிறு காலை 7.15 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையையடுத்த 9 மணிக்கு தேரில் சுவாமி ஆரோகரித்து திருவீதி வலம் வருதலும், மறுநாள் காலை 9.30 மணிக்குதீர்த்தோற்சவமும், மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளன. (த)

## ஆன்மிகச் சொற்பொழிவு

தென்மராட்சி, மார்ச் 27

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் யோகர் சுவாமிகளின் குரு பூசையை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு தென்மராட்சி இலக்கிய அணியின் செயலாளர் சு.வாசுதேவன் யோகக் காட்சி" என்னும் தலைப்பில் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்துவார் என்று ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (வ-9)

## போதைப்பொருள் முகவரான மாலைத்தீவு பிரஜை கைது

போதைப்பொருள் முகவரான மலைத்தீவு பிரஜையை, 169 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் தெஹிவளை ஹோட்டலில் வைத்து நேற்று முன் தினம் மாலை கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான மாலைத்தீவுப் பிரஜை, சுற்றுலா நுழைவு விசைவிலேயே இலங்கைக்கு வந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை போதைப் பொருள் தடுப்புப் பொலிஸ் பணியகம் மேற்கொண்டு வருகின்றது. (த)

## கிளிநொச்சியில் நூல் வெளியீடு

கிளிநொச்சி, மார்ச் 27

வவுனியாத் தமிழ் சங்கமும் ஒட்டுசுட்டான் செந்தணல் வெளியீட்டகமும் இணைந்து நடத்தும் வாகைக் காட்டானின் "நாரறுத்த நிலவுகள்", புலவூரான் ரிஷியின் " சிறகுகள் தரித்த சிலுவைகள்" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியாத் தமிழ் சங்கத்தின் செயலாளர் தமிழறிஞர், தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வரவேற்புரையினை கிளிநொச்சி பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக் கல்லூரியின் துணை இயக்குநர் ப. ஜீவநாயகமும் வாழ்த்துக் கவியினை காவியப் பிரதீபா யோ. புரட்சியும் வழங்குவர். தலைமையுரையை தொடர்ந்து அறிமுகவுரையை செந்தணல் வெளியீட்டக நிறுவுநர் வன்னியூர் செந்தூரனும் வெளியீட்டுரையை கலாபூசணம் வ. ஏழுமலைப்பிள்ளையும் நிகழ்த்துவர்.

நூல்களின் வெளியீடுகளை தொடர்ந்து முதல் சிறப்புப் பிரதிகள் வழங்கப்படும் " நாராறுத்த நிலவுகளின் நயப்புரையை கவிஞர் சமரபாகு சி. உதயகுமாரும் " சிறகு தரித்த சிலுவைகளின் நயப்புரையை எழுத்தாளர் திருமதி. மைதிலி தயாபரனும் வழங்குவர் " ஈழத்தில் புதுக்கவிதை" எனும் பொருளில் சிறப்புரையை மூத்த எழுத்தாளர் தமிழ்மணி க.க. அருந்தவராஜா (மேழிக்குமரன்)னும் ஏற்புக் கவியினை கடலூரான் சுமனும் ஏற்புரையை புலவூரான் ரிஷியும் நன்றியுரையை எழுத்தாளர் கானவியும் வழங்குவர். நூலாசிரியகள் இருவரும் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பொது இடங்களில் வெற்றிலை துப்பினால் இனிமேல் தண்டனை விரைவில் வருகிறது சட்டம்

கொழும்பு, மார்ச் 27


பொது இடங்களில் வெற்றிலை மென்று விட்டுத் துப்பினால் தண்டனை வழங்கும் புதிய விதிமுறை ஒன்று நடைமுறைக்கு வரவுள்ளது.

சுகாதார அமைச்சு, சுற்றுச்சூழல் அமைச்சு என்பன பொலிஸ் திணைக்களத்துடன் இணைந்து இந்தத்திட்டத்தை விரைவில் மேற்கொள்ளவுள்ளன.

வெற்றிலை மென்று விட்டு பொது இடங்களில்துப்புவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ள நிலையில், சுற்றாடல் சட்டத்தின் கீழ் இத்தகைய நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி தண்டம் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

ஏற்கனவே பொது இடங்களில் வெற்றிலைமென்று துப்புவோருக்கு எதிராக சில பிரதேசங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டியுள்ள பொலிஸ் திணைக்களம், பொது இடங்களில் வெற்றிலை மென்று துப்புவதால் சூழல் மாசடைவதோடு பொதுமக் களுக்கும் பாதிப்புகள் ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது. (வ-சி)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

**குமாரசாமி ஜெகதீஸ்வரன்**

கடந்த 23.02.2015 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் **அமரர் குமாரசாமி ஜெகதீஸ்வரன்** அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் 29.03.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்த னையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ் விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இராச வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



உதிப்பு 07.07.1956 — உதிர்வு 11.02.2015

**அமரர் கந்தன் நடராஜா**


கடந்த 11.02.2015 சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (27.03.2015) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்து இடம்பெறும் மதியபோசனத்திலும், கலந்து சிறப்பிப்பதோடு தவற விடப்பட்ட உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அழைப்பை தனிப் பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு, மருத்துவமனை தொடக்கம் இன்று வரை பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகள். அதே போல் வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகள், நண்பர்கள் தொலை பேசி ஊடாகவும் வேறு வழிகளிலும் எமது துக்கத்தில் பங்கு கொண்ட தற்கும் எமது நன்றிகள், மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் போஸ்டர்கள், மலர்வளையங்கள் வெளியிட்டோருக்கும் எமது நன்றி களைத் தெரிவித்துக் கொக்கின்றோம்.

நாகர்கோயில் வீதி,
எழுதுமட்டுவாழ் தெற்கு. எழுதுமட்டுவாழ்.

குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னைமடியில் 14.11.1952 — ஆண்டவன் அடியில் 19.03.2013

திருமதி

**அமுதரத்தினம் (அமுதா) கணேசமூர்த்தி**

திதி: 27.03.2015 (பூர்வபக்க அட்டமி)

ஈராண்டு ஆனாலும் ஓயுமோ உம் நினைவு - எம்
ஊனோடும் உணர்வோடும் ஒன்றாய்க்கலந்த உத்தமியே!
வேரூடே நீர்சுரந்து விழுதுகளைத் தாங்கிநின்றீர்!
வேண்டுவன வெல்லாம் வேண்டாமலே விரும்பி ஈந்தீர் !
சீரான வாழ்வுதந்து சிறப்போங்கச் செய்த அமுதாவே!
சேயர் நாம் செய்வதறியாது சிந்தை கலங்கி நொந்தோம்
தீராத நினைவலைகள் தினந்தினமும் வந்தெம்மைத்
தெருட்டுவதும் தெய்வமே அறியாயோ?
நீராடுங்கண்களுடன் நிதமும்மைப் போற்றி நின்றோம்
நேயமுடன் வாராயோ! நிம்மதியைத் தாராயோ

என்றும் உங்கள் நினைவுகளுடன்...

இல.14,
நாவற்குழி கிழக்கு, கைதடி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## தேசிய அரசை ஏற்க முடியாது

**பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு**

நாட்டில் தற்போது உருவாக்கப்பட்டிருக்கும் தேசிய அரசை ஏற்றுக்கொள்ள முடியாது என [illegible] மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தேசிய அரசு ஒன்றின் தேவை தற்போதைக்கு நாட்டில் உருவாகவில்லை எனவும் அவர் கூறியுள்ளார். வெளிநாடு சென்றிருந்த முதலமைச்சர் நேற்று முற்பகல் நாடு திரும்பிய நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இரத்தினபுரியில் நேற்று மாலை நடைபெற்ற மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டத்திலும் அவர் கலந்துகொண்டார். (த)

### யா/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## ஆண்டு பொதுக்கூட்டம்

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி ஆண்டு பொதுக்கூட்டம் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா தலைமையில் 29.03.2015ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு பேராசிரியர் துரைராசா மண்டபத்தில் நடைபெறும் என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத் தருகின்றேன்.

**சி.கனகசபாபதி,**
**(செயலாளர்)**

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னபாக்கியம் சீவரத்தினம்



கல்லை வேம்படி சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபாக்கியம் சீவரத்தினம் நேற்று (26.03.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற கந்தையா-வேதவனம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், கந்தையா சீவரத்தினத்தின் அன்பு மனைவியும், விநாயகமூர்த்தி, முருகமூர்த்தி (சாமி), வைரவசிவமூர்த்தி (சிவா), வீரபத்திரமூர்த்தி (சிங்கம்), காலஞ்சென்ற பஞ்சமூர்த்தி, அரிமூர்த்தி (மணியம்), கிருஷ்ண மூர்த்தி (நந்தன்) மற்றும் அன்னலட்சுமி (அன்னம்மா) ஆகியோரின் அன்புத் தாயும், தேவகி, விஜயகலா, சிவனேஸ்வரி, செந்தில் நாயகி, செல்வராணி, யசீதா சிவானந்தன் ஆகியோரின் அன்பு மாமி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக நண்பகல் 12.00 மணிக்கு திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கல்லை வேம்படி, சுழிபுரம்.** — தகவல்: **குடும்பத்தினர்.**

---

பிறப்பு 1949 ★ 06 ★ 10



இறப்பு 2015 ★ 03 ★ 26

### சுப்பிரமணியம் கணேசன்

கண்டியைப் பிறப்பிடமாகவும் 39/26 புவனேஸ்வரியம்மன் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கணேசன் நேற்று (26.03. 2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும், யசோதரன், கிரிதரன், சிலோஜன், சுதர்சினி, பிரியதர்சினி, ஜீவிதா ஆகியோரின் அன்புச் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 12.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

---

### திருமதி கமலா வெற்றிவேலு



அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலா வெற்றிவேலு கடந்த (24.03.2015) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வெற்றிவேலுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தயாசீலன் மற்றும் வதனா, தவச்செல்வி (சுவிஸ்லாந்து), ஜெயசீலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும், இராசேந்திரம் (கட்டார்), ஜெகநாதன் (சுவிஸ் லாந்து), நாகதர்சினி (ஆஸ்திரேலியா) ஆகி யோரின் மாமியும், சண்முகப்பிரியா, சிந்துஜன், ஜெசிந்தா (சுவிஸ்), தனுஷாந் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (28.03.2015) சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு இருபாலை New Living Flame Church இல் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இருபாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அராலி மத்தி, வட்டுக்கோட்டை.** — தகவல். **குடும்பத்தினர்.**

---

### திருமதி தங்கம்மா முருகையா



தெல்லிப்பழை விராங்கொடையைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா முருகையா நேற்று (26.03. 2015) வியா ழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பையா-முருகையாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தவராசா, யோகராசா, வரதராஜா, இராசகுமார் மற்றும் யோகராணி (பிரான்ஸ்), புஸ்பராணி, இந்திரகுமார், ஜெயராணி (கனடா) ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"கைலாசபதி"**
**வெள்ளுவடி ஒழுங்கை,**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்**

தகவல் :
**புஸ்பராணி (ராணி மகள்)**

---

## மரண அறிவித்தல்

### முருகேசு கணேசன்

(ஓய்வு பெற்ற புகையிரதத் திணைக்கள கண்காணி, வவுனியா)



கோப்பாய் BC அடியைப் பிறப்பிடமாகவும் கந்தரோடை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கணேசன் நேற்று (26.03.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ் சென்றவர்களான கந்தசாமி - சரஸ்வதி தம்பதியரின் மூத்த மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், விஜய சூரியா, குமுதினி (பிரான்ஸ்), தர்சினி (தெல்லிப்பளை, ஆதார வைத்திய சாலை), கமலினி (மத்திய மருந்தகம் சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராசன், தேவரஞ்சன், சுரேஸ்குமார், மயூரதன் ஆகியோரின் அன்பு மாமனும், சங்கீதா, லக்கி, திலக்சன், அபிநயா, அக்சயா, பிரணவன், திசாலன், லக்சயன், மயூரிகன், தன்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும், தவமணிதேவி, காலஞ் சென்ற ரத்தினம் மற்றும் பாலசிங்கம் (லண் டன்) ஆகியோரின் சகோதரனும், மனோன்மணி, அன்ன லட்சுமி, ரதி மலர், புஷ்ப மலர் (கனடா), தேவிமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கந்தரோடை சங்கம் பிளவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 6141771 (மனைவி)
0033660518829 (குமுதினி பிரான்ஸ்)
0772179435 (சூரியா)
077 0762361 (தர்சினி)
077 2845322 (கமலினி)

தகவல்: **குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்கள்

### சூசைதாசன் எட்வேட் வில்சன்





புலோலி தெற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வவுனியா வேப்பம்குளத்தை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்த வருமான சூசைதாசன் எட்வேட் வில்சன் நேற்று முன்தினம் (25.03. 2015) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைதாசன் மற்றும் றெஜினா ரத்தினமணி தம்பதியரின் அன்பு மகனும், கலைச்செல்வியின் அன்புக் கணவரும், நந்து, சுவேதனா, துவாரகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற ஜோன்சன், நிக்சன், ஆனந்தன், வினோதன், நிலா, திலீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**7ஆவது ஒழுங்கை,**
**வேப்பங்குளம், வவுனியா.**


தகவல்: **குடும்பத்தினர்.**
0772051260, 0779554747

---

### தம்பித்துரை தனபாலசிங்கம்

(Retired Deputy Director, Census and Statistics Department)

**பிறப்பு: 04.01.1943 இறப்பு: 24.03.2015**



தாவடியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை தனபாலசிங்கம் 24.03.2015 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பித்துரை-இரத்தினம் தம்பதியரின் புதல்வனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், தங்கம்மா தம்பதியரின் மருமகனும், யாழினி (கனடா), பாலமுரளி (HSBC) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர் களான புவனேஸ்வரி, பரமேஸ்வரி, பாலச்சந்திரன் (நில அளவை யாளர்), தங்கேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், ஈஸ்வரகுமாரன் (கனடா), காயத்ரி (கொழும்பு) ஆகியோரின் மாமனும், பவித்ரா, ஹரினி, கயல்விழி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் 01.04.2015 புதன்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**பாலமுரளி (மகன்) 0777887254**
**ஈஸ்வரகுமாரன்**
**(மருமகன்) 0016473009364**
**தங்கேஸ்வரி (சகோதரி) 0212052603**
**Dr. குணரட்ணம் (மைத்துனர்) 0112581265**

தகவல்: **குடும்பத்தினர்.**

---



### அருளப்பு ஹென்றி இருதயராஜா

நவாலியைப் பிறப்பிடமாகவும், கோயில் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு ஹென்றி இருதயராஜா நேற்று 26.03.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு-இக்னேசம் தம்பதியரின் அன்பு மகனும், இந்துராணியின் அன்புக் கணவரும், ஆன்ஷிராணி, றொசாந்தன், றொஹான் ஆகியோரின் அன்புத் தந்தையும், நிஷாகரன், செனிசியா, ஜெனனி ஆகியோரின் அன்பு மாமனும், கமிலா, ஸ்ரெபான், சோபியா ஆகியோரின் பேரனும், மேரி றெஜினா காலஞ்சென்ற புளோறன் செபமணி, லயனல் புஸ்பராசா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.03.2015) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு கொண்டுசெல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**156, கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல் :
**றொஹான் (மகன்)**
**077 227 4841**

## யாழில் இம்மாதம் 927 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்.குடாநாட்டில் இந்த மாதத்தின் கடந்த வாரம் வரையான காலப்பகுதியில் 927 பேர் டெங்குநோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள் ளனர் என்று சுகாதார அமைச்சுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் சனத் தொகைக்கு ஏற்ப யாழ்.மாவட்டத்திலேயே அதிக தொற்றுக் காணப்படுகிறது. இந்தமாதம் 95 பேரும், கடந்த மாதம் 218 பேரும், கடந்த ஜனவரியில் 614 பேரும் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

மன்னாரில் இந்தமாதம் வரையில் 67 பேரும், முல்லைத்தீவில் 60 பேரும், வவுனியாவில் 53 பேரும், கிளிநொச்சியில் 32 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் இதுவரை 11 ஆயிரத்து 238 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். (ற-4)

## நல்லாட்சி இன்றேல் பதவி விலகுவேன்

### எச்சரிக்கிறார் ஹரின் பெர்னாண்டோ

கொழும்பு, மார்ச் 27

எதிர்பார்த்தது போல், இந்த அரசிலும் நல்லாட்சி நடக்கவில்லை என்றால், அரசில் இருந்து விலகுவது குறித்து இரு முறை சிந்திக்கப் போவதில்லை என ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி பதவி யில்



அமர்த்த நாங்களே அரும்பாடு பட்டோம். தற்போது அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்.

எமக்கு என்ன நடந்தது என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் நினைக்கின்றனர். அவர்களுக்கு சிறிய விரக்தி ஏற்பட்டுள்ளது. நேர்மையாக சிந்தித்துப் பார்த்தால், இதன் மூலம் நாட்டுக்கு நல்லதும் நடக் கக்கூடும்.நான் பதவிகளுக்கு ஆசைப் பட்டவன் கிடையாது. இந்த அரசில் நல்லாட்சி இல்லை என்றால், வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றால், நான் இரு முறை சிந்திக்கப் போவதில்லை. நான் எனது முதலமைச்சர் பதவியில் இருந்து விலகி விடுவேன் என ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (த)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பிரதமர்

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள், மீள்குடியமர்வு தொடர்பிலான சந்திப்புகள் போன்றவை நடைபெறவுள்ளன. மீனவ பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

மதிய போசனத்தின் பின்னர், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குச் செல்லும் பிரதமர் அங்கு சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார். பின்னர் நல்லை ஆதீன குருமுதல்வரை சந்திப்பார். நல்லூர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் பங்கேற்ற பின்னர், யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்தைச் சந்திக்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து, தென்னிந்திய திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜாவை சந்திக்கவுள்ளார். இறுதியில் முஸ்லிம் மதத் தலைவர்களை பிரதமர் சந்திக்கவுள்ளார்.

பிரதமர் ரணிலின் வடக்கு நிகழ்ச்சி நிரலில், வடக்கு முதலமைச்சருடன் எந்தவொரு சந்திப்பும் உள்ளடக்கப்படவில்லை. வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வுக்கு கூட முதலமைச்சரை விருந்தினராகவும் அழைக்கவுமில்லை.

கடந்த சில வாரங்களாக முதலமைச்சருக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் பனிப்போர் நிலவி வருகின்றது. இந்தியாவின் தந்தி தொலைக்காட்சிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய நேர்காணலில், வடக்கு முதலமைச்சர் பொய் சொல்கின்றார் என்றும் அவரை யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் போது சந்திக்க மாட்டேன் என்றும் குறிப்பிட்டிருந்தார். அதற்கு முதலமைச்சரும் பதிலடி கொடுத்திருந்தார். கடந்த 23 ஆம் திகதி ஜனாதிபதி, பிரதமர் கலந்து கொண்ட நிகழ்வில், முதலமைச்சர் கலந்து கொண்டிருந்தாலும், பிரதமரும் – முதலமைச்சரும் நேருக்கு நேர் பேசிக் கொள்ளவில்லை.

இந்தப்பின்னணியில், பிரதமர் ரணிலின் யாழ்ப்பாணப் பயணத்தின் போது முதலமைச்சர் ஒதுக்கப்பட்டுள்ளார் என்று தெரியவருகின்றது. அதனால் வடக்கு மாகாண சபையினர் பிரதமரின் இன்றைய நிகழ்வுகளில் பங்கெடுக்க மாட்டார்கள். ஆனாலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கெடுப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### 'போட் சிற்றி'

அமைச்சர் லியூ ஜியான்சோ, இந்தத் தகவலை வெளியிட்டார்.

இரண்டு தரப்புகளுமே மீண்டும் இந்தத் திட்டத்தைத் தொடர்வதற்கு விருப்பம் வெளியிட்டன. ஆனால், எந்தவொரு முக்கியமான மாற்றங்களும் அதில் செய்வதற்கு, அதில் தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றவேண்டியுள்ளது. பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டதும், துறைமுக நகரப் பணிகள் மீளஆரம்பிக்கப்படும்என்றுஇலங்கை ஜனாதிபதி தெரிவித்தார்.

துறைமுக நகரத்திட்ட விவகாரத்தில் என்ன நடந்தது என்பதை தெளிவுபடுத்திக் கொள்வதற்காகவே பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன என இலங்கை ஜனாதிபதி கூறினார்.

சீனத் தரப்பில் துறைமுகத் திட்டம் தொடர்பான பிரச்சினைகள் கிடையாது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இலங்கைத் தரப்பில் தெளிவுபடுத்தப்பட்ட பின்னர் திட்டம் தொடரும் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

இரண்டு நாட்டுத் தலைவர்களும், எந்தவொரு கடன்கள் தொடர்பான வட்டி வீதம் குறித்த முக்கியமான மீள்பேச்சுகளை நடத்தும் அளவுக்குச் செல்லவில்லை.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் சீனா நம்பிக்கை கொண்டுள்ளது.

இரு நாட்டுத் தலைவர்களும், இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிப்பது, இராணுவக் கருவிகளை வழங்குவது உள்ளிட்ட ஒத்துழைப்புக் குறித்து கலந்துரையாடினர்.

பீஜிங்கினால் முன்மொழியப்பட்ட ஆசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்படும் திட்டங்கள் உள்ளிட்ட சீனாவின் முதலீடுகளை இலங்கையில் அனுமதிக்கப் வேண்டும் என்று சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் வாதிட்டார்.

இரண்டு நாட்டுத் தலைவர்களுக்கும் முன்பாக சுகாதாரப் பராமரிப்பு, கட்டுமானம், நகர அபிவிருத்தி சார்ந்த நான்கு உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார். (ற-சி)

### காணியைத்

வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வளலாய் கிராம சேவையாளர் பிரிவு கடந்த 13 ஆம் திகதி விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

அங்கு 233 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டது. ஆயினும் விடுவிக்கப்பட்ட நிலப் பரப்பு மக்களின் விவசாயக் காணிகள் என்றும், மக்களின் குடியிருப்பு காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வளலாய் கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட எஞ்சிய 400 ஏக்கர் காணியையும் விடுவிக்குமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இன்று கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, விடுவிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்ட ஆயிரத்து நூறு ஏக்கர் நிலப் பரப்பையும் ஏப்பரல் 14 ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைக் கப்படவுள்ளது.

அதேவேளை, மயிலிட்டி துறைமுகப் பகுதியில் மீன்பிடிக்க அனுமதி வழங்குவது தொடர்பில், யாழ்.மாவட்டச் செயலகத்தில் மீனவர் பிரதிநிகளுடனான சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### வல்லையில்

என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலை அவ சர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காது சிறிது நேரத்தில் உயிரிழந்தார்.

வல்லை வெளியில் ஓட்டோவும் மினி பஸ்ஸும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த விபத்து பிற் பகல் 4.30 மணியளவில் நடந் துள்ளது.

சடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. அச்சுவேலிப் பொலிஸார் விசாரணை மேற் கொண்டுள்ளனர். (ற-4,11,109)

### உறங்கு

இந்த ஆண்டு இறுதிக்குள் நெல்சிப் வேலைகள் செய்து முடிக்கப்பட வேண்டும்.

கடந்த ஜனவரி மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதன்பின்னர் பிரதேச, மாவட்டங்களுக்குரிய ஒருங்கிணைப்புத் தலைவர்கள் இன்னமும் நியமிக்கப்படவில்லை. அதனால் உள்ளூராட்சி மன்றங்களால் இனங்காணப்பட்ட திட்டங்களுக்குரிய அனுமதிகள் பெறுவதில் தாமதம் நிலவுகின்றது. திட்டங்களும் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதற்கும் மேலதிகமாக, கடந்த காலங்களில் செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்குரிய கொடுப்பனவுகளும் இன்னமும் கொடுக்கப்படவில்லை. எந்த அமைச்சினூடாக நிதி விடுவிக்கப்படுவது என்பது தொடர்பில் இன்னமும் இறுதித் தீர்மானம் அரசு மேற்கொள்ளாமையால் கொடுப்பனவுகள், ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்தநிலையால் 'நெல்சிப்' திட்டம் வடக்கு மாகாணத்தில் தற்போது உறங்கு நிலையில் இருப்பதாகவே, சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.(ற-5)

### இணைந்தனர்

வழக்கின் சென்ற தவணையில் சிறுமி விபூசிகா, அவரது தாயார் ஜெயக்குமாரி ஆகியோர் புலிகளை மீள் உருவாக்கும் முயற்சிக்கு உதவினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டார்கள். ஆகவே சிறுவர் நன்னடத்தை அதிகாரியால் சிறுமி விபூசிகாவை தாயிடம் ஒப்படைக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்றும், இவர்கள் இருவரும் ஒன்று சேரவேண்டுமானால் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரே அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று கூறி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் எம்.ஐ. வஹாப்தீன் வழக்கை நேற்று வரை தள்ளி வைத்திருந்தார்.

நேற்று வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்காளர்கள் சார்பாக எஸ் விஜயராணி, சுந்தரேசசர்மா, ம.கிறேசியன், எஸ்.சிவபாலசுப்பிரமணியம் ஆகிய சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தார்கள். அத்தோடு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர், சிறுவர் நன்னடத்தை அதிகாரி ஆகியோரும் வந்திருந்தனர்.

சிறுமி விபூசிகா எந்த வழக்கிலும் சந்தேக நபராகப் பதிவுசெய்யப்படவில்லை எனவும் தாயான ஜெயக்குமாரியையே புலிகளை மீளுருவாக்க முயற்சித்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாகவும் சிறுமி விபூசிகாவை பாதுகாப்புக்காகவே மகாதேவ சிறுவர் இல்லத்தில் ஒப்படைத்ததாகவும் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் மன்றுக்குத் தெரிவித்தனர்.

இதை அடுத்து சிறுமி விபூசிகாவை அவரது தாயாருடன் இணைவதற்கு உத்தரவிட்டார் கிளிநொச்சி மாவட்ட நீதிபதி எம்.ஐ வஹாப்தீன்..

அத்தோடு தாய் ஜெயக்குமாரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தற்போது கொழும்பிலே நடைபெறுவதால் புலிகளை மீளுருவாக்க முயற்சித்தார் என்று கூறப்பட்டு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் சிவபால சுப்பிரமணியம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நேற்றுடன் முடிந்து விட்டதாகவும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

தற்போது பாடசாலைகளில் 1ஆம் தவணைப் பரீட்சைகள் நடைபெற்று வருவதை அடுத்து எதிர்வரும் 4ம் திகதி வரை சிறுமி விபூசிகா தொடந்தும் ஆச்சிரமத்திலேயே இருந்து பரீட்சைக்கு செல்லவேண்டும் என்பதால் தாய் ஜெயக்குமாரியின் ஆதரவோடு விபூசிகா எதிர்வரும் 4ஆம் திகதி வரை ஆச்சிரமத்திலேயே தங்கியிருந்து பரீட்சைக்கு செல்லவுள்ளார். (ற-21)

### தமிழர்களுக்கான

– இவ்வாறு ஆஸ்திரேலியா சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் நேரில் தெரிவித்துள்ளார் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப்.

இலங்கையின் நட்புறவு நாடாக ஆஸ்திரேலியா இருக்கும் என்றும், தம்மால் இயன்ற உதவிகளை இலங்கைக்கு ஆஸ்திரேலியா வழங்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியா சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அங்கு இலங்கை அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கான ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் யூலி பிஷப்பை சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் புலம்பெயர் அமைப்புப் பிரதிநிதிகளும் பங்கு கொண்டனர். (ற-சி)

### மகனைக்

சிவசோதி தனது உடலில் மண்ணெண்ணையை ஊற்றி, 'நீ செல்லாவிட்டால் நான் தீக்குளிப்பேன்' என்று மிரட்டியுள்ளார். அதன்பின்னர் மகன் எழுந்து சென்று விட்டார். அந்தத் தாய் தனது உடலில் மண்ணெண்ணை ஊற்றியதைக் கவனத்தில் கொள்ளாது சமையலறைக்குச் சென்று அடுப்பருகே சென்றுள்ளார். அப்போது அவர் மீது தீப் பற்றிக் கொண்டுள்ளது என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உடனடியாக சிவசோதி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆயினும் சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்று உயிரிழந்தார்.

திடீர் இறப்பு விசாரண்ண அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். அதன்பின்னர் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸாரும் விசாரணை மேற்கொண்டனர். (ற-4)

### குழிக்குள்

சம்பளத்துக்காக வாகனம் செலுத்தும் இவர் 4 பிள்ளைகளின் தந்தையாவார்.

பத்மதேவன் மணல் ஏற்றிக்கொண்டிருந்தபோது வற்றாப்பளையில் மறித்த வன இலாகா அதிகாரிகள் உரிய ஆவணங்களைக் காண்பிக்குமாறு கோரினர். அவர் அந்த இடத்தில் டிராக்டரை நிறுத்திவிட்டு ஆவணங்களை அதிகாரிகளிடம் காண்பித்துக் கொண்டிருந்தார். டிராக்டர் நிறுத்தப்பட்டிருந்த இடம் சற்று மேடாக இருந்தது. டிராக்டர் மெல்ல நகர்ந்து நகர்ந்து அருகே இருந்த 6 அடி ஆழமான குழிக்குள் விழ முற்பட்டது. பத்மதேவன் ஓடிச் சென்று டிராக்டரில் ஏறி அதனைத் திருப்ப முயன்றார். ஆனால் அது பலனளிக்கவில்லை. டிராக்டருடன் சேர்ந்து அவரும் குழிக்குள் விழுந்தார். அதில் அவர் படுகாயமடைந்தார்.

உடனடியாக அவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். ஆயினும் சிகிச்சைகள் பயனளிக்காது நேற்றுக்காலை உயிரிழந்தார்.

விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். அதன் பின்னர் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-4)

# எந்தவேளையும் உதவத் தயார்

## மட்டக்களப்பில் கட்டப்பட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 27

தொப்புள்கொடி உறவு கொண்டுள்ள இலங்கை மக்கள் தமிழர், முஸ்லிம், சிங்களவர் என்றில்லாமல் பொதுவாக இலங்கை மக்களுக்கும் வடக்கு, கிழக்கு மக்களுக்கும் உதவுவதற்கு இந்தியா என்றைக்கும் தயாராகவுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதர் வை.கே.சிங்ஹா தெரிவித்தார்.

இந்திய உதவியுடனான வீட்டுத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட முதல் தொகுதி வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்டத்தின் கதிரவெளிக் கிராமத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

"சிங்கள மக்களுக்கு இந்தியாவிலுள்ள எனது பிறப்பிடமான பீகார் மாநிலத்துடனும் தமிழ் மக்களுக்கு தென்னிந்தியாவுடனும் முஸ்லிம் மக்களுக்கு இந்தியாவுடனும் தொப்புள்கொடி உறவு இருக்கின்றது. இலங்கையில் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திலிருந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மேலும் வலுப்பெற்றுள்ளது.

இலங்கை ஜனாதிபதி, இந்தியப் பிரதமர், வெளியுறவு அமைச்சர் உட்பட 4 உயர்மட்ட இராஜதந்திரப் பயணங்கள், பரஸ்பரம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இடம்பெற்றுள்ளன.

ஊவா மாகாணத்திலும் வடக்கிலும் கிழக்கிலுமாக 50,000 வீடுகள் அமைக்கும் திட்டத்தையும் இந்தியா முன்னெடுத்துள்ளது.

2012ஆம் ஆண்டு வடக்கில் ஆயிரம் வீடுகள் மாதிரி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. 2 ஆம் கட்டமாக 45,000 வீடுகளை நிர்மாணிக்கும் கட்டத்தின் கீழ் மஹாத்மா காந்தியின் பிறந்த தினத்தில் 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 2 திகதி ஆரம்பித்தோம். இப்பொழுது வடக்கிலும் கிழக்கிலும் 26,750 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வீடுகளை இந்த வருடஇறுதிக்குள்முடித்து விடுவோம். 4,000 வீடுகள் பதுளையிலும் நுவரெலியாவிலும் கட்டிமுடிக்கும் திட்டமுள்ளது. அத்துடன், 15 ஓட்டோக்களை போரால் கணவனை இழந்த பெண்களுக்கு வழங்கியுள்ளோம்.

ஓந்தாச்சிமடத்திலும் வந்தாறுமூலையிலுமுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு பஸ்களை வழங்கியுள்ளோம். மேலும், கிழக்குமாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க கிழக்கில் பெரிய தொழிற்பேட்டைகளை ஆரம்பித்து வாழ்வாதாரத் திட்டங்களையும் தொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக்கொடுக்கவும் நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம்.

குறிப்பாக நன்னீர் மீன்பிடி, விவசாயம், வாகன உதிரிப்பாகங்கள், மருந்துப்பொருள்கள் உற்பத்தி, கிராமிய பொருளாதார அபிவிருத்தி, விவசாயம், உற்பத்தித் தொழிற்றுறை என்பவற்றின் மூலம் கூடியளவு தொழில்வாய்ப்புக்களை உருவாக்கமுடியும். இந்த நிலையில், கிழக்கு மாகாணத்துக்கான பல்வேறு தொழிற்றுறைகள் சார்ந்த நீண்ட காலத்திட்டங்களின் முன்மொழிவுகளை இலங்கை அரசின் ஊடாக நாம் கோரியுள்ளோம்"- என்றார். (வ)

## கிழக்கு பாற் பண்ணைகளை இயங்க வைக்க நடவடிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 27

கிழக்கு மாகாணத்தில் இயங்காத நிலையில் உள்ள பால் பண்ணைகள் மற்றும் விவசாயப் பண்ணைகளை, கிழக்கு மாகாணசபையின் கீழ் கொண்டுவந்து அவற்றை இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த சில காலமாக மக்களுக்கு பயனற்ற வகையில் செயற்பட்ட



மண்டூர் ஒல்லி வால் மடு வேள்ட் விசன் மாதிரிவிவசாயப்பண்ணை தற்போது கிழக்கு மாகாண விவசாய அமைச்சரால் மாகாண சபை அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு மீண்டும் பண்ணையைச் செயற்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுதொடர்பான அமைச்சின் அதிகாரிகளுடனான ஒன்றுகூடல் நேற்று முன்தினம் மண்டூர் ஒல்லிவால்மடு மாதிரி விவசாயப் பண்ணையில் பண்ணை முகாமையாளர் றொகாஸ் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த 14ஆம் திகதி மண்டூர் கமநல அமைப்புகளுடனான சந்திப்பின்போது மேற்படி பண்ணையை மீண்டும் செயற்படுத்துமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அன்றைய தினம் அமைச்சர் குறித்த பண்ணைகளை நேரில் சென்று பார்வையிட்டதுடன், அதனைஅமைச்சின் மூலம் எவ்வாறு செயற்படுத்த முடியும் என்பது தொடர்பாக ஆராயும் முகமாக ஒன்றுகூடலும் இடம்பெற்றது.

அமைச்சர் மற்றும் அதிகாரிகள் குழுவினரால் பண்ணை மற்றும் தும்பங்கேணி கால் நடை வைத்தியர் அலுவலகமும் பால் உற்பத்திப்பொருள், விற்பனை நிலையமும் பார்வையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வ)

## மீசாலையில் சிக்கின 13 குரங்குகள்

அச்சுவேலி, மார்ச் 27

தென்மராட்சி, மீசாலையில் 13குரங்குகள் ஒரே பெட்டியில் மாட்டிக் கொண்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பிடிக்கப்பட்ட 13 குரங்குகளும் திங்கட்கிழமை காலையில் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன. குரங்குகள் வில்பத்து வனவிலங்கு சரணாலயத்துக்கு ஏற்றிச் செல்லப்பட்டு அங்கு விடப்பட்டன.

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் உயிர் பல் வகைமைப் பாதுகாப்புச் செயற்றிட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட குரங்குகளை உயிரோடு பிடிக்கக்கூடிய பொறியுடன் கூடிய பெட்டிகள் மூலம் குரங்குகள் பிடிக்கப்படுகின்றன.

கூட்டமாக வந்த 13 குரங்குகளும் குறுகிய நேர இடைவெளியில் விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பிடிக்கப்பட்டன. குரங்குகளுக்கு விருப்பமான வாழைப் பழம், தேங்காய், தேங்காய் கொப்பறா போன்றவை வைக்கப்பட்டே குரங்குகள் பிடிக்கப்பட்டன. தென்மராட்சிப் பகுதியில் பயிர்ச்செய்கை, பழச்செய்கை மற்றும் வீட்டுத்தோட்டச் செய்கை என்பன குரங்குகளால் சேதமாக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட உயிர் பல்வகைமைப் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் குரங்குகளை உயிரோடு பிடிப்பதற்கான பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருப்பதோடு, உயிரோடு பிடிக்கப்படும் குரங்குகள் ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபாவீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்பட்டு வருகின்றது. (வ-11)

## இருவருக்கு தண்டம்

கிளிநொச்சி, மார்ச் 27

கிளிநொச்சி பகுதியில் தரம் குறைவான உப்பு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று குற்றம் சாட்டப்பட்ட சந்தேகநபர்கள் இருவருக்கு நேற்றுமுன்தினம் 10ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம்.

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தால் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்கு நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ வஹாப்தீன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் காரணமாக ஒரு வியாபாரிக்கு 5000 ரூபா வீதம் இரு வியாபாரிகளுக்கும் 10ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததோடு இனிமேல் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று நீதிவான் அறிவுறுத்தியும் அனுப்பினார். (21)



*வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவின் முதலாம் நாள் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மணியளவில் இடம்பெற்றபோது அம்பாள் காராம்பசு வாகனத்தில் எழுந்தருளி வீதியுலா வரும் காட்சி. (வ-40)*

## ஆடு களவாடல்: ஒருவருக்கு கடூழியச் சிறை

கிளிநொச்சி, மார்ச் 27

ஆட்டைக் களவாடினார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு அக்கராயன்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவருக்கு நேற்று முன்தினம் ஆறு மாத கடூழியச் சிறைதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்று.

கடந்த ஆண்டு கிளிநொச்சி, அக்கராயன்குளம் பகுதியில் பெண் ஒருவரால் தனது வாழ்வாதாரத்துக்காக வளர்த்து வந்த ஒரு மறி ஆட்டை, ஓட்டோவில் களவாடிச் சென்றார் என்று குற்றம் சாட்டப்பட்டு அக்கராயன்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிரான வழக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நீதிபதி எம்.ஐ. வஹாப்தீன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கை விசாரணை செய்த கிளிநொச்சி மாவட்ட நீதிவான் குற்றவாளிக்கு 6 மாத கால கடூழியச் சிறைத் தண்டனையும் 1500ரூபா தண்டப் பணமும் அதனைச் செலுத்தத் தவறின் மேலும் ஒரு மாத கால சிறைத் தண்டனை விதித்தும்-

குறித்த சந்தேகநபரால் முன்னர் செய்த குற்றங்களுக்கா[illegible] தண்டனைகள் வழங்க[illegible]டாமல் இருந்தால் தொடர்[illegible] தண்டனைகளை ஒவ்வொ[illegible]றாக அனுபவிக்க வேண்டு[illegible] என்றும் நீதிவான் உத்[illegible] விட்டார். (வ-2[illegible]

# சுகாதார அமைச்சு நியதிச் சட்டம் அடுத்த வாரமே ஆளுநரிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கு மாகாண சபையில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்ட சுகாதார அமைச்சின் நியதிச் சட்டம் அடுத்த வாரமே, ஆளுநரின் அங்கீகாரத்துக்காக வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தால் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்குரிய சுகாதாரத் திணைக்களத்தை ஆரம்பிக்கும், சுகாதர அமைச்சின் நியதிச் சட்டம் கடந்த 17 ஆம் திகதி, வடக்கு மாகாணசபையில் சுகாதார அமைச்சர் பா.சத்திய லிங்கத்தால் சமர்பிக்கப்பட்டது. உறுப்பினர்களால், நியதிச் சட்டத்தில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அந்தத் திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நியதிச் சட்டம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

மாகாண சபையில் நியதிச் சட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், வடக்கு மாகாண ஆளுநரின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்பட வேண்டும். உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தற்போது பேரவைச் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், வடக்கு மாகாண ஆளுநரின் அங்கீகாரத்துக்காக அடுத்த வாரம் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)



## கடையிற்சுவாமி ஒழுங்கையில் குப்பைகளால் சுகாதாரக் கேடு

வலி.வடக்கு, மார்ச் 27

யாழ்ப்பாணம் நீராவியடி கடையிற் சுவாமி ஒழுங்கையில் கொட்டப்படும் கழிவுகளால் அந்தப் பகுதி பெரும் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்நோக்கியுள்ளது.

நாவலர் வீதியும், கடையிற்சுவாமி ஒழுங்கையும் சந்திக்கும் முகப்பு யாழ்ப்பாணம் மாநகர சபையின் குப்பை சேகரிக்கும் இடமாக உள்ளது. அங்கு பொதுமக்களாலும், ஏனையோராலும் கொட்டப்படும் கழிவுகள் நாளாந்தம் மாநகர சபையினரால் அகற்றப்படுவதில்லை. கட்டாக்காலிகளாலும், வாகனங்களின் போக்குவரத்தாலும் சிந்தப்படும் கழிவுகள் வீதியெங்கும் பரவி துர்நாற்றம் வீசுகின்றது. நாலவர் வீதியிலும் கூட இந்தக் குப்பைகள் சிதறிக் காணப்படுகின்றன. இதனால் அந்தப் பகுதி மக்கள் பெரும் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்கொண்டுள்ளனர். நாளாந்தம் குப்பைகளை அகற்ற மாநாகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாதுவிடின் அந்தப் பகுதியில் குப்பை கொட்டுவதைத் தடை செய்ய வேண்டும் என்றும் அந்த பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ற-86)

## கஞ்சா வைத்திருந்த மூவருக்கு சிறை

மன்னார், மார்ச் 27

கஞ்சா வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட மூவருக்கு கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார் மன்னார் நீதிவான் அலெக்ஸ் ராஜா.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரும், வெளி மாவட்டத்தைச் சேர்ந்த இருவருமே கஞ்சா வைத்திருந்தனர் என்று குற்றஞ்சாட்டி மன்னார் பொலிஸார் வெவ்வேறு இரு வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த இருவர் 900 கிராம் கஞ்சாவும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர் 250 கிராம் கஞ்சாவும் வியாபார நோக்கத்துக்காக வைத்திருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை இதுகுறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மூவரும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டனர். அதையடுத்து மூவருக்கும் தலா மூன்று மாத கடூழிய சிறைத் தண்டனையும், 9 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்து நீதிமன்று தீர்ப்பளித்தது. தண்டப் பணம் செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண தண்டனையும் விதிக்கப்பட்டது. (ற)

## மோ. சைக்கிள் திருடியோருக்கு கடூழிய சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 27

மோட்டார் சைக்கிள் திருடினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இருவருக்கு ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம்.

பாரதிபுரம், புகையிரத நிலைய வீதியில் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளைத் திருடினார்கள் என்று தெரிவித்து கிளிநொச்சிப் பொலிஸாரால் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.வாஹாப்தீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணைகளின் முடிவில் குற்றவாளிகளுக்கு ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையும், ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். அத்துடன் முன்னைய குற்றங்களுக்கு தண்டனைகள் வழங்கப்படாது இருந்தால் தொடர்ந்து அவற்றையும் அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ற-21)

## தொழில்நுட்ப ஆய்வுகூடம் திறப்பு விழா

வவுனியா, மார்ச் 27

வவுனியா பூவரசங்குளம் மகா வித்தியாலத்தில் புதிதாக கட்டப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடம் நாளை திறந்து வைக்கப்படவுள்ளது. கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் ஆய்வு கூடத்தை திறந்து வைக்கவுள்ளார். இந்த நிகழ்வு மு.ப. 11.30 மணிக்கு பாடசாலையின் அதிபர் திருமதி தி.யுவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-402)

# கிராமத்துக்கு ஒரு மில்லியன்: உட்கட்டுமானத்துக்கே முதலிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

புதிய அரசால், கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டத்தின் கீழ், உட்கட்டுமான அபிவிருத்திக்கே முக்கியத்துவம் கொடுத்து செயற்திட்டங்களைத் தேர்வு செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தேர்வு செய்யப்படும் செயற்திட்டங்களை இந்த மாத இறுதிக்குள் திட்டமிடல் அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டம், கடந்த ஆண்டே யாழ்.மாவட்டத்தில் அறிமுகப் படுத்தப்பட்டது. யாழ்.மாவட்டத்தில் 435 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ள போதும், 247 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிதியில், வாழ்வாதார உதவித் திட்டம், உட்கட்டுமான அபிவிருத்தி இரண்டும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதும், வாழ்வாதார உதவித் திட்டத்துக்கே அதிகளவிலான நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் புதிய அரசால் குறித்த செயற்திட்டம் மேற்கொள்வதற்கு, யாழ்.மாவட்டத்திற்கு 435 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு மில்லியன் ரூபாவில், உட்கட்டுமான அபிவிருத்திக்குரிய செயற்திட்டங்களே அதிகளவில் இனங்காணப்பட வேண்டும். அத்துடன் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கக் கூடிய உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களையும் இனங்காண முடியும். இவ்வாறு இனங்காணப்படும் திட்டங்களை இந்த மாத இறுதிக்குள், திட்டமிடல் அமைச்சுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதுடன், அடுத்த மாதம் வருடப் பிறப்புடன் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற ஒருவருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தர விட்ட யாழ். நீதிமன்று, அபராதம் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஆறு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்கமாறும் உத்தரவிட்டது.

மணல் நீதிமன்றால் பறிமுதல் செய்யப்பட்டது.

அதேவேளை கஞ்சா கலந்த மாவா விற்பனை செய்த பீடா கடை உரிமையாளர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப் பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்டார். குறித்த நபர் பலாலி வீதி, திரு நெல்வேலிப் பகுதியில் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் தாம் இவரை கைது செய்ததாக பொலிஸார் மன்றில் தெரிவித்திருந்தனர். அவரை 1 லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ற-103)

# இளையோர் அமைப்புக்களை முன்பு தவறாக பயன்படுத்தினர்

### யாழ்.மாவட்ட இளைஞர் சம்மேளனத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

கடந்த காலங்களில் சில அரசியல் வாதிகளால் இளையோர் அமைப்புக்கள் இளையோர் சார்ந்த தேவைகளுக்காக அல்லாமல் வேறுபல தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இளையோர் அமைப்புக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளோ அல்லது வேறுசில நலத்திட்டங்களையோ செய்யாமல் வடக்கை வன்னிப் பெருநிலப்பரப்பு, வன்னி அல்லாத ஏனைய பகுதிகள் என இரண்டு பிரிவுகளாக தமக்குள் பிரித்து வைத்திருந்தனர். பக்கச்சார்புடன் மக்களுக்கான சேவைகளைச் செய்தனர் - இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட இளைஞர் சம்மேளனத் தலைவரும் தேசிய இளைஞர் சம்மேளன உப தலைவருமான செ.விஜிதரன்.

யாழ்ப்பாணம் இளைஞர் சம்மேளனத்தால் நேற்றுமுன்தினம் ஒழுங்கு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''வேலையில்லாத்திண்டாட்டம் என்பது பொதுவாக அனைத்து இளைஞர்களும் எதிர்நோக்கும் பிரச்சினையாக உள்ளது. இளைஞர்களுக்கான வாய்ப்புக்கள் கேள்விக் குறியாகவே உள்ளன. இளைஞர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எமக்கும் இவ்வாறான பிரச்சினைகள் இல்லாமல் இல்லை. இளைஞர்கள்சம்மேளனத்துக்கென்று நிரந்தரக்கட்டிடம் இல்லை. இவ்வாறான பிரச்சினைகள் காரணமாக இளைஞர்கள் மத்தியில் பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுக்கும் நோக்கங்கள் எமக்கு இருந்தும் அவை நடைமுறையில் சாத்தியம் அற்றனவாகவே போய்விடுகின்றன.''- என்று அவர் தெரிவித்தார்.

"விளையாட்டுப் போட்டியொன்றை முன்னெடுக்க வேண்டுமாயின் நிதி பற்றாக்குறையாகவே காணப்படுகின்றது.

தேவைப்படும் நிதிகளுக்காக அரசியல் பிரதிநிதிகளின் பன்முகப்படுத்தப்பட்ட நிதிகளில் நாம் பங்குகேட்க வேண்டிய நிலையே காணப்படுகின்றது. சில தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் எங்களுக்காக ஒரு லட்சம் ரூபா நிதியை அன்பளிப்புச் செய்தார். எமக்காகச் செய்யப்பட்ட அன்பளிப்புக்களில் இதுவே பெரியதொரு அன்பளிப்பு. எமது நிதிப் பிரச்சினையை புதிய அரசு கவனத்தில் கொண்டு தேவையான நிதியை ஒதுக்கி எமது பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் பட்சத்தில் உலகத்தரம் வாய்ந்த இளைஞர்கள் வடமாகாணத்தில் மட்டுமல்ல இலங்கை பூராவும் உருவாகுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. எமது பிரச்சனைகள் தொடர்பாக ஒரு கடிதத்தையும் எமது சம்மேளனத்தின் சார்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அனுப்பி வைக்கவுள்ளோம்''- என்றும் அவர் தெரிவித்தார். (ற-ரி)

## வியாபாரம் செய்த இந்தியருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்.நெல்லியடியில் குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒருவர் பொலி ஸாரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்த இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அவர் சேலை, சல் வார் என்பனவற்றை சைக்கிளில் சென்று விற்பனைசெய்து வந்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

# யாழ்.போதனாவுக்கு அருகில் பொலிஸாரால் காணி சுவீகரிப்பு

## வைத்தியசாலைக்கு வழங்குமாறு கோரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். போதனா வைத்தியசாலை வீதியில் சுகாதாரத் திணைக்களத்துக்கு அண்மையாக உள்ள சுமார் 2 பரப்புக் காணி பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனுள் எவரும் உள்நுழையக் கூடாது என்று அறிவுறுத்தும் துண்டுப் பிரசுரமும் அங்கு ஒட்டப்பட்டுள்ளது. 'இந்தக் காணி பொலிஸ் திணைக்களத்துக்குச் சொந்தமானது. அதனுள் வாகனங்கள் உட்செல்லுதல், மற்றும் நிறுத்துதல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது' என்று பொலிஸ் திணைக்களம் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவித்துள்ளது.

அந்தக் காணி புலிகளின் உடைமை என்று கூறியே பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதில் முன்னர் தனியார் 'கிளினிக்' நிலையம் ஒன்று இயங்கி வந்தது. அந்தக் காணியை விலை மதிப்பீடு செய்து தருமாறும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் பொலிஸாரால் கோரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் பல பிரிவுகள், விடுதிகள் அமைக்கப்பட வேண்டியுள்ளன. ஆனால் அதற்குக் காணி இன்மையும் ஒரு தடையாக உள்ளது. வளர்ந்து வரும் சனத்தொகைக்கு ஏற்ப வைத்தியசாலையிலும் தேவைகள் அதிகரித்து வருகின்றன. எனவே அந்தக் காணியை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வழங்க வேண்டும் என்று போதனா வைத்தியசாலைத் தரப்பினரால் கோரப்படுகிறது. (ற-4)



இடர்முகாமைத்துவ அமைச்சராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட ஏ.எச்.எம்.பௌசி நேற்றுமுன்தினம் தன் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். கொழும்பு – 7 வைத்திய வீதியில் அமைந்துள்ள இடர்முகாமைத்துவ அமைச்சில் இந்த நிகழ்வு நடைபெற்றது. அதில் அமைச்சர்கள் ஜோன் அமரதுங்க, மஹிந்த அமரவீர, பிரதி அமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், ஆர்.யோகராஜன், அமைச்சின் செயலாளர் பந்துசேன, ஐ.ரீ.என். தொலைக்காட்சியின் முன்னாள் பணிப்பாளர் புரவலர் ஹாசிம் உமர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற-10)

# 130 அம்புலன்ஸ்களுக்கு ஜி.பி.எஸ். தொழில்நுட்பம்

## வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கிலுள்ள மாகாண வைத்தியசாலைகளினதும், சுகாதாரத்திணைக்களங்களினதும் அம்புலன்ஸ்களுக்கு ஜி.பி.எஸ் தொழினுட்பக் கருவி பொருத்தப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் 130 அம்புலன்ஸ் உள்ளன. அவற்றுக்கே இந்த ஜி.பி.எஸ். தொழில்நுட்பக் கருவி பொருத்தப்பட்டுள்ளன. கடந்த மாதம் இந்தக் கருவிகள் பொருத்தும் பணி தொடங்கப்பட்டது. தற்போது அது நிறைவடைந்துள்ளது. அதன்மூலமாக அம்புலன்ஸ்கள் எவ்வளவு வேகத் தில் பயணித்துக் கொண்டிருக்கின் றன, எந்த இடத்தில் உள்ளன, எந்த இடத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றனஉள்ளிட்ட விடயங்களைஅலுவலகத்தில் இருந்து கண்காணிக்க முடியும்.– என்று அவர் தெரிவித்தார்.

"அவற்றை ஒருங்கிணைக்கும் நிலையங்கள் வடக்கில் உள்ள 5 மாவட்டங்களினதும் சுகாதார சேவைகள் திணைக்களங்கள் மற்றும் வடமாகாண சுகாதார அமைச்சு ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ளன. அங்கிருந்தவாறே அம்புலன்ஸ்களின் நடமாட்டத்தைக் கண் டறிய முடியும். தவறான செயற்பாடு இடம்பெறாது. அம்புலன்ஸ்கள் இருக்கும் இடத்தைக் கொண்டு தேவையான, அவசர நோயாளர்களை ஏற்ற வேண்டிய இடங்கள் என்பனவற்றையும்கொண்டுதேவையான அம்புலன்ஸ் சேவைகளை இலகுவாக்க முடியும்"–என்றும் அவர் தெரிவித்தார். (ற-4)

# மழைநீர் சேகரிக்கும் நிலக்கீழ் தொட்டிகள் அமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

மழை நீரை சேகரிக்கும், நிலக்கீழ் நீர் சேகரிப்புத் தொட்டிகள் மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் இதுவரையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தை மேலும் விரிவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்த[illegible] தரைக் கீழ் நீர் தொடர்பில், பிரதேச செயலக அதிகாரிகளுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்திட்டமும் அடுத்த வாரத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ். குடாநாட்டின் நிலத்தடி நீர் அமைப்புத் தொடர்பிலும், அந்த நீர் மாசடைந்து வருவது தொடர்பிலும் துறைசார் வல்லுநர்கள் மற்றும் பேராசிரியர்கள் மூலமாக பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டும் விழிப்புணர்வுச் செயற்பாடு அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதன் மூலம் மக்களுக்குத் தவறான தக[illegible]சென்றடைவதைத் தடுக்க முடியும் என்பதுடன், உத்தியோகத்தர்கள் உண்மை யதார்த்த நிலைமையை அறிந்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதனை விட, மழை நீரை சேகரிப்பதற்கான, நிலக் கீழ் நீர் சேகரிப்புத் தொட்டிகள் தீவகத்தின் மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ளன. காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள சமூக மய்யப்படுத்தப்பட்ட இடங்களில் இவை அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 38 சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் மேலும் தொட்டிகள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

# நுண்கலைப்பீட மாணவர்கள் புறக்கணிப்புப் போராட்டம்



வலி.வடக்கு, மார்ச் 27

யாழ்.பல்கலைக் கழக நுண்கலைப் பீட சித்திரமும், வடிவமைப்பும் துறை இறுதியாண்டு மாணவர்கள் நேற்றுத் தமது வகுப்புகளைப் புறக்கணித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மூன்று அம்சக் கோரிக்கையை முன்வைத்து முன்னர் இந்த மாணவர்கள் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அதன்பின்னர் பல்கலைக் கழக நிர்வாகத்தால் வழங்கப்பட்ட உறுதிமொழியைத் தொடர்ந்து அவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர். ஆயினும் இரண்டு வாரங்கள் கடந்த விட்ட நிலையில் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததை அடுத்து மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

"இதுவரை காலமும் பயிற்சி, பரீட்சை நடத்தவில்லை. அந்தப் பரீட்சையை நடத்த வேண்டும். அதனை நடத்தத் தாமதமாகுமெனின் அரையாண்டு கால விரிவுரைகளை ஆரம்பிக்கவும். அதுவும் தாமதமாகுமெனின், காலத்தைக் கருத்தில் கொண்டு இரண்டாம் அரையாண்டுக்கான பாடப் பரப்பை எழுத்து மூலத்தில் தருமாறு ஏற்கனவே நாம் கோரியிருந்ததோடு அதனைத்தர வலியுறுத்திக் கடந்த வாரமும் கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்தோம். அதனையடுத்து அது தொடர்பில் கலந்துரையாடித் தீர்வு கூறுவதாக அதிகாரிகளால் உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரை எவ்விதத் தீர்வும் தரப்படவில்லை"– என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த நுண்கலை பீட மாணவர் மன்றத் தலைவர் சயிந்திரன்,

"ஏனைய துறைக்கான இறுதியாண்டு மாணவர்களுக்கு பரீட்சைகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பதற்கான விரிவுரையாளர்களும் நியமிக்கப்பட்டு, கட்டுரைகளுக்கான தலைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் சித்திரமும், வடிவமைப்பும் இறுதியாண்டு மாணவர்களுக்கு உரிய விரிவுரையாளர்கள் நியமிக்கப்படவில்லை. எழுத்துமூலம் பதில் தரும் பட்சத்திலேயே புறக்கணிப்பு கைவிடப்படும்"– என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் பேராசிரியர் புஸ்பரட்ணத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, மாணவர்களின் பிரச்சினை தொடர்பில் இன்று வெள்ளிக்கிழமை துறைத் தலைவர்கள் உள்ளிட்டவர்களுடன் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

அவர்களது பிரச்சினைக்கு இன்று தீர்வு எட்டப்படும் என்று தெரிவித்தார். (ற-86, 4)

# வவு. வடக்கு பாடசாலைகளில் ஆசிரியர், அதிபர் பற்றாக்குறை

## பெற்றோர்கள் கவலை

வவுனியா, மார்ச் 27

வவுனியா வடக்கு கல்வி வலயத்திலுள்ள பல பாடசாலைகள் அதிபர்கள், ஆசிரியர்களின்றி நடத்தப்படுகின்றன என்று பெற்றோர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள வருடாந்த இடமாற்றத்தின் பின்னர் பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொந்தக்காரன்குளம் அ.த.க.பாடசாலை, கரப்புக்குத்தி அ.த.க.பாடசாலை, சேனைப்புலவு அ.த.க.பாடசாலை, ஆறுமுகத்தான் புதுக்குளம் வித்தியாலயம், பூம்புகார் கண்ணகி வித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கே அதிபர் பற்றாக்குறை நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை வவுனியா வடக்கு கல்வி வலயத்திலிருந்து இந்த ஆண்டு 52 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளனர். இவர்களுக்கான பதிலீட்டு ஆசிரியர்களின் விவரங்கள் எதுவும் வெளியிடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்விடமாற்றத்தில் வவுனியா தெற்குக் கல்வி வலயத்திலிருந்து 25 ஆசிரியர்கள் நிபந்தனையடிப்படையில் வருகைதரவுள்ளபோதும் இதுவரைக்கும் ஒரு சில ஆசிரியர்களே தமது கடமையைப் பொறுப்பேற்பதற்கான சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. எனவே அதிபர்கள், ஆசிரியர்கள் பற்றாக்குறையினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்டவர்களிடம் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற-422)

# அனைத்துப் பிரிவுகளிலும் அபாரம் காட்டிய சரஸ்வதி







யாழ்ப்பாணம் மார்ச் 27

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் அனைத்துப் பிரிவிலும் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணி சம்பியனாகிச் சாதனை படைத்துள்ளது.

கடந்த வாரம் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற இந்த இறுதியாட்டங்களில், 15வயதுப் பிரிவின் இறுதியாட்டத்தில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலத்தை எதிர்த்து பன்றிக்குளம் அ.த.பாடசாலை அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய சுந்தரபுரம் அணி 13:02 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. மூன்றாம் இடத்தை குளவி சுட்டான் பாடசாலை அணி பெற்றுக்கொண்டது.

17 வயதுப் பிரிவின் இறுதியாட்டத்தில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தை எதிர்த்து குளவி சுட்டான் அ.த.க. பாடசாலை அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணியினர் 18:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றனர். மூன்றாம் இடத்தை புதுக்குளம் மகா வித்தியாலய அணி பெற்றுக் கொண்டது.

19 வயதுப்பிரிவின் இறுதியாட்டத்தில் சுந்தரபுரம் சரஸ்வதி மகா வித்தியாலயத்தை எதிர்த்து கல்மடு மகா வித்தியாலய அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சுந்தரபுரம் சரஸ்வதி மகா வித்தியாலய அணி 16:06 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகு வெற்றியை பதிவு செய்தது. மூன்றாம் இடத்தை புதுக் குளம் மகாவித்தியாலய அணி பெற்றுக்கொண்டது.

(த-ரி-422)

# கரப்பந்து வலயச் சம்பியனாக கோப்பாய் ம.வி, சோமஸ்கந்தா

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்ட தொடரில் 15 வயதுப் பிரிவில் கோப்பாய் மகா வித்தியாலய அணியும், 17 வயது மற்றும் 19 வயது ஆகிய இரு பிரிவுகளிலும் புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரி அணிகளும் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றின.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கோப்பாய் மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜனக் கல்லூரி அணி மோதிக்கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் கோப்பாய் மகாவித்தியாலய அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய அணி மோதிக்கொண்டது. இதில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

17 வயதுப்பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந் தாக் கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜனக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. மூன்றாம் இடத்துக் கான ஆட்டத்தில் அச்சுவேலி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங் கால் நடராஜா இராமலிங்க வித்தியா லாய அணி மோதிக் கொண்டது. அச்சுவேலி மத்திய கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

19வயதுப் பிரிவு இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி அணியை எதிர்த்து நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண் டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரி அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் அச்சுவேலி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் அச்சுவேலி மத்திய கல்லூரி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

(த-ரி-23)


போட்டிப் பரீட்சை
விசேட கருத்தரங்கு
* தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவை ஆட்சேர்ப்புக்கு சனி 9.00-3.00 மணி
* முகாமைத்துவ உதவியாளர் மற்றும் வருமான பரிசோதகர் பிரிவு I சனி, ஞாயிறு 10.00 மணி
பிரிவு II புதன், வெள்ளி 2.30 மணி
T.P: 0766883394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்


# வடமாகாண மரதன் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 27

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான அரை மரதன் ஓட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக வடமாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம். வலிகாமம், வடமாராட்சி, தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மன்னார், மடு ஆகிய 12 வலயங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கான அரை மரதன் போட்டி எதிர் வரும் நான்காம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த தினத்தில் நடாத்த முடியாதென்றும், தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (த-ரி-422)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
முருகேசு அன்னம்மா
(வத்திராயன் - யாழ்ப்பாணம்)

07.04.2014 அன்று இறைபதமடைந்த அன்னாரின் முதலாம் ஆண்டு கிரியைகள் 27.03.2015 (வெள்ளிக்கிழமை) மு.ப 11.30 மணியளவில் வத்திராயனில் உள்ள அன்னாரின் மகனது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்
வத்திராயன் மகன்-தவராசா
வடமராட்சி கிழக்கு மருமகள்-நிர்மலாதேவி





பாராட்டி வாழ்த்துகின்றோம்
உயர்திரு
நா.வேதநாயகன்

பார்மேவும் சான்றாண்மை வாய்த்த திருமகனே
சீர்மேவும் அளவைப்பதி உதித்த தவப்புதல்வா
கார்மேகம் பொழிதலெனும் ஈதற் சிறப்புடையாய்
ஊர் வணங்கும் திருத்தலத்தை புதுக்கி எமக்களித்த...

செந்நெறியோன் நாகலிங்கம் மரபுதித்த அரும்புதல்வர்
செஞ்சொல்லேயன்றி வெஞ்சொல் அறியாதார்
இனிமையே வார்த்தையென்றும் இங்கிதத்தால் உயர்வுடையார்
எளிமையே தன் பெருமையென அணிபூண்டார்

யாழ். மண்ணின் நிர்வாகத் தலைமகனாய் அமர்கின்ற
எங்கள் வேதநாயகன் ஐயாவை வருக! வருகவென்றே
கரங்கூப்பி வரவேற்று வாழ்த்துகின்றோம்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபராய் பணியேற்கும்
எங்கள் மதிப்புக்குரிய
உயர்திரு நா.வேதநாயகன் அவர்களை
வருக வருக என்று வரவேற்று வாழ்த்துகின்றோம்.

பரிபாலன சபையினரும், பொது மக்களும்,
முருகமூர்த்தி விநாயகர் ஆலயம், சாவக்கட்டு.






WIN 5000/=

BIT, CIMA, MCSE ஆகிய பாடநெறிகளை பயில்வதற்கான 5000/= ரூபா புலமைப்பரிசிலுக்கான வினா? எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 29ம் திகதி நடைபெறும் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் வெல்லப்போகும் அணி எது?

A. Newzealand B. Australia

Type wc29 <Name> <ans> <District> <DOB> & sent to 0772395895



SPOKEN ENGLISH

O/L,A/L எழுதியோர், தொழில்புரிவோர், பல்கலை புகுமுக மாணவர்கள், இளைஞர், யுவதிகள் இணைய முடியும்.

சனி, ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம் : 29.03.2015

பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00

இலங்கையெங்கும் 7600 ஆசிரியர்கள், 20000 மாணவர்கள் கற்றும் பயன்பெற்ற பயிற்சிப்பாசறை.

பயிற்சிநெறி முடிவில் "DIPLOMA CERTIFICATE"

எமது கிளைகள்
சங்கானை 021 567 41 33
நெல்லியடி 021 3200 607

SAAMSON LANGUAGE SCHOOL
077 621 4567
021 320 3313



NEW SCIENCE WORLD
Brown Road-Navalar Road Junction, Jaffna.

பொது இரசாயனம் - ஆவர்த்தன இயல்புகள்
'துரித மீட்டல் வகுப்புக்கள்'

அனைத்து மாணவர்களுக்குமான
மாலைநேர வகுப்புக்கள்

காலம்:- வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள்
நேரம்:- மாலை 6.00 - 7.30pm
ஆரம்பம்:- 27.03.2015 மாலை 6.00மணி

Mr. T. Sivakumar Bsc,PGDE



அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம் 10.09.1947
மறைவு 28.02.2015



அமரர் சற்குணராஜா தங்கரட்ணம்

கடந்த 28.02.2015 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி சற்குணராஜா தங்கரட்ணம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28.03.2015) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தகரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் (30.03.2015) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவியின் மரணச் செய்திகேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும் மற்றும் உறவினர்களுக்கும் அயலவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் நேரில் வந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சந்தையடி, மானிப்பாய். குடும்பத்தினர்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.